Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 113 • 08.10.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா



உடனே அழையுங்கள்
0768255563, 0214927561
தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்




NEW
VEL MURUGAN JEWELLERS
Dealers in Pure 22 kt Genuine Gold Jewellery



நீங்கள் விரும்பும் வகையில்
தரமானதாகவும் குறைந்த செலவிலும்
நகைகளை செய்து கொள்ளலாம்.

No.186, BAZAAR STREET, VAVUNIYA.
TEL: 0242228157 E-mail: nvmjewellers@gmail.com

# Green Dream Engineering

உயர் தரம்... குறைந்த செலவு...

- தகுதி பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை
- பாரம்பரிய தொழிநுட்பத்துடன் கூடிய நவீன கட்டமைப்புகள்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்.
- தவணை முறை கொடுப்பனவுகள்
- தரமான மூலப்பொருட்கள்.
- வாடிக்கையாளர் திருப்திக்கமைவான தெரிவுகள்.

We providing

- Dream House
- School building
- Office building
- Hotels & restaurants
- Gardening and landscaping
- Repairing & modifying



உங்கள் கனவுக்கு உயிர் கொடுக்க
நாங்கள் உங்கள் உடன் இணைகிறோம்

யாழ்ப்பாணத்தில் உயர் தொழிநுட்பத்தினுடன் கூடிய
கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஸ்தாபனம்.

Phone : 0774166859 ,0775952346 ,0771439777
Email : greendreamengineer@gmail.com
FB: @greendreams.engineers



# SUSILA GOLD HOUSE

Specialist in 22kt Gold Jewellery



No.59.3/5, City centre(Inside)
Sea Street, Colombo – 15
Branch: Point Pedro, Jaffna
Tel: 011 243 9090 Mob: 072 764 1333





NO 1 TOPAZ

# TOPAZ

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்

ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்

மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TO RAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
| --- | --- | --- |
| No 72, Grand Bazaar<br>Jaffna<br>Tel 021 222 4743<br>Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road<br>Jaffna<br>Tel 021 222 4643<br>Email : topazagn@gmail.com | No 195, Power House Road<br>Jaffna<br>Tel 021 222 4933<br>021 221 9933 |



# நோர்சி மீடியா நிறுவனத்தின்

- தீபம் தொலைக்காட்சி
- தீபம் வார இதழ்
- தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)

ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச
செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு
நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்

தொடர்புகளுக்கு

## தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம். (கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)




மாலையுடன் தனு, அருகில் சிவராசன்

கே.ராகோத்தமன்

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கு மிக ஆழமானது. ராஜிவ் கொலை முயற்சி எப்படி திட்டமிடப்பட்டது, எப்படி அரங்கேற்றப்பட்டது, இந்திய புலனாய்வு அதிகாரிகள் எப்படி அதை துப்பு துலக்கினார்கள், அப்பொழுது நடந்த சம்பவங்கள், சவால்கள் என்ன என்பதை வழக்கின் தலைமை அதிகாரி கே.ரகோத்தமன் விபரமாக எழுதியுள்ளார். முழுமையான ஆதாரத்துடன் தீபம் வெளியிடுகிறது.**

# ராஜிவ் காந்தி கொலை
## எப்படி... என்ன நடந்தது?



மே 22ம் தேதி சிபிசிஐடி பிரிவினர் முதல் கட்ட விசாரணை நடத்தியபிறகு, 24ம் திகதி வழக்கு முறைப்படி சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டு, நாங்கள் ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று சம்பவ இடத்தில் பார்வையிட்டு, முதற்கட்ட விசாரணையை ஆரம்பித்துத் திரும்பியிருந்தோம்.

யார் செய்திருப்பார்கள்? அனைவர் மனத்திலும் ஒரே கேள்வி. அவரவர் யூகங்கள் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. நான் அமைதியாக உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருந்தேன். புலனாய்வில் யூகங்களுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்காமல், தடயங்களின் அடிப்படையில் செயல்படுவதே முடிவைக் கண்டடைய சிறந்த வழி என்பது பணிக்காலத்தில் எப்போதும் நான் கடைப்பிடித்த வழி.

யூகிப்பது முழுத்தவறல்ல. ஆனால் யூகமே அபிப்பிராயமாக மாறிவிடும் அபாயம் இருக்கிறது. நமது சுய அபிப்பிராயம் சேர்ந்துவிட்டால் வழக்கின் நிறம் நாம் விரும்பும்படியாக உருமாறத் தொடங்கிவிடும்.

இது உண்மையைக் கண்டுபிடிக்கும் பாதையில் பெரிய தடைகளை உருவாக்கக் கூடியது. எனவே எத்தகைய யூகங்களுக்கும் நான் இடம் கொடுக்கவில்லை என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரி என்னும் முறையில், புலனாய்வைத் தொடங்குவதுதான் நான் செய்ய வேண்டிய முதல் பணி. தடாவைச் சேர்ப்பதா இல்லையா என்பதெல்லாம் பிறகுதான் என்று முடிவு செய்து கொண்டேன். முன்னதாக, சி.பி.ஐ. குழுவினர் 23ம் தேதி ஸ்ரீபெரும்புதூர் சென்றிருந்தபோது, பொதுக்கூட்ட மைதானம் போர்க்களம் மாதிரி இருந்தது.

ஆங்காங்கே எரிந்த மிச்சங்கள். சிதறிய பொருள்கள். குப்பைகள். பதறி ஓடிய மக்களின் காலடித் தடங்கள். எல்லாம் முடிந்துவிட்டதற்கு சாட்சியாக காவலுக்கு இருந்த பொலிசார்.

பதினெட்டுப்பேர் இறந்திருந்தார்கள். காயமடைந்தவர்கள் எத்தனை பேர் என்று சரியாகத் தெரியவில்லை.

ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் மதுரம் வழக்குப்பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அளித்திருந்தார். படுகொலை நடவடிக்கை ராஜிவ் உள்ளிட்ட பதினெட்டுப் பேரின் மரணம், காயமடைந்தவர்கள் எண்ணிக்கை ஆகியவை மட்டுமே அதில் இருந்தன. மேல் விவரங்கள் ஏதும் கிடையாது. முன்னதாக, தடய அறிவியல் துறை வல்லுநர் டாக்டர் சந்திரசேகர் சம்பவ இடத்துக்குச் சென்று நிறைய ஆதாரங்களைச் சேகரித்திருந்தார்.

பயன்படுத்தப்பட்ட வெடிபொருள் ஆர்.டி. எக்ஸ் என்பது தெரியவந்திருந்தது. தவிரவும் இறந்தவர்கள் உடலிலிருந்து எடுக்கப்பட்ட சிறிய இரும்புக் குண்டுகள் (Pellets), ஒரு ஒன்பது வோல்ட் பேட்டரி, வயர் துண்டுகள் என்று கிடைத்தவற்றை வைத்துத் தொகுத்தால், திட்டமிட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதல் மாதிரி தெரிந்தது. வலுவான தாக்குதல். அங்கிருந்து புறப்பட்டு காஞ்சிபுரம் சென்றோம். அங்கே அரசுப் பொது மருத்துவமனையில் இறந்தவர்களின் உடல்களை வைத்திருந்தார்கள்.

அங்கே ஒரு பெண்ணின் சடலம் இருந்தது. முற்றிலும் சிதைந்து போயிருந்த சடலம். பார்க்க முடியாமல் பார்த்துக்கொண்டிருந்தோம். நான்கு உறுப்புகளைத்தான் சற்றே ஒழுங்காக அடையாளம் காண முடிந்தது. தலை. இடது கை. மற்றும் இரு தொடைகள்.

நெற்றியில் பொட்டு வைத்திருந்தாள். கருகருவென்று நீண்டதலைமுடி. நல்ல கருப்பான அந்தப் பெண், தீயில் மேலும் கருகியிருந்தாள்.

'பார்த்துக்கொண்டே இருந்த இயக்குநர் விஜய் கரன், சட்டென்று,'அந்தத் தொடைகளைப் பாருங்கள். இந்த அமைப்பும் இறுக்கமும் கண்டிப்பாக இவள் ஒரு தீவிரவாத இயக்கத்தில் பயிற்சி பெற்றவள் என்பதைச் சொல்கின்றன' என்றார். எவ்வளவு உண்மை!

அவளது கருத்த தேகமும் அந்தக் கட்டுறுதியும் அவள் ஒரு தீவிரவாதி அதே சமயம் நிச்சயமாக காஷ்மீர் அல்லது வடகிழக்கு மாகாணப் பெண் அல்ல என்பதை அப்போதே எங்களுக்குச் சொல்லிவிட்டது.

ராஜிவின் உடலைப் பிரேதப் பரிசோதனை செய்த டாக்டர்கள் சொன்ன விவரங்கள், தடய அறிவியல் துறையினர் தெரிவித்திருந்த விவரங்களுடன் ஒத்துப் போயின. உடலெங்கும் அந்த உலோகத் துண்டுகள் துளைத்திருந்தன. மூளை சிதறியிருந்தது. கபால எலும்புகள் நொறுங்கியிருந்தன. உடல் பாகங்கள் பெருமளவு சிதைந்துபோயிருந்தன.

சரி, வேறென்ன ஆதாரங்கள்?

ஒரு சினான் கமரா, சம்பவ இடத்தில் கிடைத்ததாகச் சொன்னார்கள். ஆனால் உருப்படியாக உள்ளே ஒன்றுமில்லை என்று முதலில் சொல்லிவிட்டார்கள்.


மனித வெடிகுண்டு தனு


ஆர்.டி.எக்ஸ் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட உலோகத் துகள்கள்

ஸ்ரீபெரும்புதூரில் ப்ரிண்ட் போட வசதியில்லாதபடியால் சுங்குவார் சத்திரத்துக்கு எடுத்துச் சென்று, அங்கும் முடியவில்லை, சென்னைக்குத்தான் கொண்டு போயாகவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது.

அந்த கமராவில் இருந்து எடுக்கப்பட்ட கலர் நெகடிவ் சுருளை டாக்டர் சந்திரசேகர் வசம் ஒப்படைத்துவிட்டதாக மேற்கொண்டு விசாரணையைத் தொடர இயலும்.

எங்கே கிடைக்கப் போகிறது? என்ன கிடைக்கப்போகிறது? புரியவில்லை. மறு நாள் (24 மே) ஹிந்து நாளிதழில் ஒரு புகைப்படம் வெளியாகியிருந்தது. 21ம் தேதி ஸ்ரீபெரும்புதூருக்கு ராஜிவ் வருகை தந்தபோது அவருக்கு மாலையிட நெருங்கியிருந்த ஒரு பெண்ணின் புகைப்படம் அது. ஒரேஞ்ச் நிற சல்வார் கம்மீஸ் அணிந்திருந்த பெண்.

அருகே வேறு இரண்டு பெண்களும் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் சம்பவ இடத்திலேயே இறந்தவர்கள். அந்தக் கணம் வரை சிபிசிஐடிக்கே வந்திராத படம், அதற்குள் எப்படி ஹிந்து பத்திரிகைக்குச் சென்றது? குழப்பமும் அதிர்ச்சியுமாக இருந்தது.

நாங்கள் யாரையும் குறிவைக்கத் தொடங்கியிருக்கவில்லை. ஒரு ஈ, எறும்பு மீதுகூட அப்போது சந்தேகம் வந்திருக்கவில்லை.

கொன்றது யார், கொலைக்கான நோக்கம் என்ன, எப்படிச் செய்தார்கள், எத்தனை பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், தனிநபரா, இயக்கமா எதுவும் தெரியாது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்ட மைதானத்தில் ஒரு கமரா கண்டு எடுக்கப்பட்டிருந்தது.

அது ஓர் ஆதாரமாகுமா? அதுவும் தெரியாது அப்போது. எங்கள் கைக்குக் கிடைத்த கமராவில் எக்ஸ்போஸ் ஆகாத பிலிம் சுருள் மட்டுமே இருந்தது. அதன் எக்ஸ்போஸ் ஆகியிருந்த பகுதிகள் தனியே கத்திரிக்கப்பட்டு ப்ரிண்ட் போட அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருந்தது.

எனவே அந்த கமராவை மட்டும் வைத்துக்கொண்டு புலன் விசாரணையைத் தொடங்கவேண்டியிருந்தது. சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட அந்த கமராவுக்குரிய பையினுள் ஒரு விசிட்டிங் கார்ட் இருந்தது. (தொடரும்)

# கரையோர மாவட்டம் பற்றி மு.கா வாய் திறக்கவில்லை!

## வழிநடத்தல் குழு உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ண

**கொழும்பு, ஒக்.08**

கரையோர மாவட்டம் குறித்த எந்த யோசனையையும் வழிநடத்தல் குழுவில் முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்திருக்கவில்லையென உண்மையை போட்டுடைத்திருக்கிறார் கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண. நாடாளுமன்ற உறுப்பினரும்,வழிநடத்தல்குழுவின் முக்கிய உறுப்பினருமான ஜயம்பதி தெரிவித்துள்ள இந்த கருத்துக்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்திருந்தார்.

அரசியலமைப்பு உருவாக்க வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை அண்மையில் வெளியாகியிருந்தது. இதில் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகள் அவ்வளவாக கண்டுகொள்ளப்படாமல் இருந்தது. இது பற்றிய விமர்சனங்கள் எழத் தொடங்கியபோது, முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள் விளக்கமொன்றை சொன்னார்கள். கரையோர மாவட்டம் தொடர்பான முன்மொழிவை வழிநடத்தல் குழுவுக்கு தாங்கள் சமர்ப்பித்திருந்தபோதும், வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் அது பற்றி மூச்சும் காட்டப்பட்டிருக்கவில்லையென அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில், ஜயம்பதி இதற்கு நேர்மாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். "இடைக்கால அறிக்கைக்கான கட்சிகளின் முன்மொழிவுகளை ஓகஸ்ட் 31ம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு அனைத்து கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தோம். முஸ்லிம் காங்கிரஸ் இந்த காலஅவகாசத்திற்குள் எந்த முன்மொழிவையும் சமர்ப்பிக்கவில்லை.

ஆனால், முன்னர் ஒரு தடவை முஸ்லிம் காங்கிரஸ் சமர்பித்த ஒரு மன்மொழிவில் புதிய கரையோர மாவட்டம் தொடர்பாக யோசனையை உள்ளடக்கியிருந்தார்கள். ஆனால் இடைக்கால அறிக்கைக்காக முன்மொழிவை அனுப்புங்கள் என நாம் கேட்டபோது முஸ்லிம் காங்கிரஸ் எந்த வரைபையும் அனுப்பவில்லை" என ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவித்திருந்தார்.

அண்மையில் மன்னாரில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்த சில கருத்துக்களும் பரவலான கவனத்தை ஈர்த்திருந்தது குறிப்பிடத்தக்கது. "வழிநடத்தல் குழுவில் கலந்துகொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களை கேட்டால் வெட்கமடைவீர்கள். அதிகாரங்கள் பகிரப்படகூடாது, மத்தியிலேயே அதிகாரங்கள் இருக்க வேண்டும், காணி அதிகாரம் மத்தியில் மாத்திரம் இருக்க வேண்டும் என்று கூறினார்கள்" என அவர் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# இறக்காமம் என்ன கறிவேப்பிலையா?

## எஸ்.ஐ. மன்சூர் கொதிப்பு

**அம்பாறை, ஒக்.08**

இறக்காமம் பிரதேசத்தையும், அங்குள்ள மக்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் கறிவேப்பிலையாகவே பயன்படுத்தி வருகிறதென குற்றம்சாட்டியுள்ளார். தேசிய காங்கிரசின் கிழக்கு மாகாண அமைப்பாளர் எஸ்.ஐ.மன்சூர். இறக்காமத்துக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவதற்கான பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும், மு.கா. தலைவர், அவை குறித்து கணக்கில் எடுக்காமல் தட்டிக் கழித்து வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இறக்காமம் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

"இறக்காமம் பிரதேச மக்கள் கடந்த தேர்தல்களில் முஸ்லிம் காங்கிரசுக்கு கணிசமான வாக்குகளை வழங்கியிருந்தனர். இருந்தபோதும் கடந்த மாகாணசபைத் தேர்தலில் கூட இறக்காமம் பிரதேசம் சார்பில் ஓர் உறுப்பினரைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இறக்காமம் பிரதேசம், அரசியல் அதிகாரமற்று ஓர் அநாதையாகவே இருக்கிறது.

ஆயினும், இந்த பிரதேசத்துக்கு ஓர் அரசியல் அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென மு.கா. தலைவர் ஹக்கீம் சிந்திக்கவில்லை.

சம்மாந்துறையில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரோடு, மாகாண சபை உறுப்பினர் ஒருவர் இருந்தார். கல்முனையில் ஒரு பிரதியமைச்சரும் மாகாண சபை உறுப்பினரும், நிந்தவூரில் பிரதியமைச்சர் ஒருவரும் மாகாண சபை உறுப்பினரும், அட்டாளைச்சேனையில் மாகாண அமைச்சர், அக்கரைப்பற்றில் மாகாண சபை உறுப்பினர் என்று இருந்த நிலையில், இறக்காமம் பிரதேசம் வாய் பார்த்துக் கொண்டு இருந்தது இருக்கிறது.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் நசீருக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ் கொடுக்கப் போகிறது என்றும், நசீரின் மாகாணசபை உறுப்பினர் பதவியை இறக்காமத்துக்கு வழங்கப் போவதாகவும் மு.காங்கிரசுக்குள் பெரிதாகப் பேசப்பட்டது. ஆனால், அது வெறுங்கதையாக மட்டுமே இருந்தது. கிழக்கு மாகாண சபையும் கலைந்து விட்டது.

முஸ்லிம் காங்கிரசின் தலைமைப் பதவியை ரஊப் ஹக்கீம் அபகரித்துக் கொண்டதிலிருந்து இறக்காமத்தின் நிலை இப்படித்தான் உள்ளது. ஹக்கீமை நம்பினால் இனியும் இப்படித்தான் இருக்கும். எனவே, மு.கா. தலைவரை இறக்காமம் இனி நம்பக் கூடாது.

எனவே, இனியும் நம்பக் கூடாதவர்களை நம்பி வாக்களித்து விட்டு ஏமாறுவதிலிருந்தும் இறக்காமம் மக்கள் தவிர்ந்து கொள்ள வேண்டும்" என்றார்.

# சிங்கள வாக்கிற்காகவே வடக்கு கிழக்கு இணைக்ககூடாதென்கிறார்கள்!

## ரவூப் ஹக்கீம் சாட்டையடி

**கொழும்பு, ஒக்.08**

அரசாங்கம் 20ஆவது திருத்தத்தை கைவிட்டுவிட்டது. இது தெரியாதவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் 20ஆவது திருத்தத்துக்கு கைதூக்கிவிட்டதாக பேசிக்கொண்டு திரிகின்றனர் என, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் அண்மையில் நடைபெற்ற 'தேர்தல் சீர்திருத்தங்களும் இடைக்கால அறிக்கைகளும்' என்ற தலைப்பில் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது;

"எது 20, எது 19, எது 18 என்று தெரியாதவர்கள் அரசியல் கட்சித் தலைவராக இருக்கின்றனர். ஆனால், இதில் உங்களுக்கு போதியளவு தெளிவு இருக்கவேண்டும். அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்கின்ற சிலர், இவற்றைப் பற்றி தவறான புரிதல்களை மக்கள் மத்தியில் பரப்பிவருகின்றனர். தங்களுடைய சொந்த அரசியல் அபிலாஷைகளுக்காக வடக்கு கிழக்கு இணைப்பு சம்பந்தமாக சில அமைச்சர்கள் பேசித் திரிகின்றனர். வடக்கில் இருக்கின்றவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பழி சொல்லியே தனது அரசியலை செய்ய வேண்டும் என்ற நோக்கம் இதன் பின்னாலுள்ளது.

கிழக்கில் இருக்கின்ற முன்னாள் அமைச்சர் ஒருவருடைய செயற்பாடுகள் அந்தக் காலத்திலும், இந்தக் காலத்திலும் ஒரே நோக்கம் கொண்டவைதான். தனக்கு சிங்கள மக்களின் வாக்குகள் இல்லாமல் நாடாளுமன்றம் போகமுடியாது என்பதற்காக கிழக்கை பிரிக்கவேண்டும் என்கிறார்.

வடக்கு கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டபோது, அதை நிரந்தரமாக இணைக்க முஸ்லிம்களின் ஆதரவு தேவை என்ற நிலைப்பாடு இருந்தபோது, ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படக்கூடாது என்பதிலே முஸ்லிம் காங்கிரஸ் கவனமாக இருந்தது. ஏன் என்பதற்கான விளக்கம் சொல்லவேண்டிய அவசியமில்லை. இதனால் ஏற்படக்கூடிய விபரீதங்கள் பற்றி மிக ஆழமாக சிந்தித்ததன் விளைவாகத்தான் வடக்கு கிழக்கு இணைப்பு நிரந்தரமாக வேண்டுமென்றால் முஸ்லிம்களுக்கென்று அரசியல் அலகு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் மிகவும் கவனமாக இருந்தோம். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு குறுக்கே நிற்பவர்களாக முஸ்லிம் தலைமைகள் பார்க்கப்படவேண்டிய அவசியமில்லை என்ற கொள்கைகளில் இருக்கின்றோம். சும்மா இருக்கின்ற சங்கை ஊதிக்கெடுக்கின்ற அவசியமும் எங்களுக்கு கிடையாது.

எங்களுடைய அபிலாஷைகள் இணைப்பை தடுப்பதிலும், பிரிப்பை தடுப்பதிலும் மாத்திரம் இருக்கின்றது என நம்பிக் கொண்டிருப்பது என்னைப் பொறுத்தமட்டில் வங்குரோத்து அரசியலின் உச்சகட்டம். இதன்மூலம்தான் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்கு சேர்க்கவேண்டும் என்று நினைப்பதும் மடமைத்தனம். ஏனென்றால் முஸ்லிம் காங்கிரஸின் வாக்காளர்கள் அரசியல் ரீதியாக மிகவும் கூர்மையான அறிவுள்ளவர்கள்.

இப்படியான கதை தொடர்ந்து பேசப்படுகின்றபோது, எங்களுக்கு ஒரு தனியலகு என்பது அவசியம் என்ற விடயத்தில், ஒரு நிர்வாக மாவட்டம் தேவை என்கின்ற தெளிவான பிரேரணையை நாங்கள் அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவிடம் கூறினாலும் அது வேண்டுமென்று அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. இதுதொடர்பாக நான் பாராளுமன்றத்திலும் உரையாற்றியிருந்தேன்" என்றார்.

புதிய அரசியலமைப்பில் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்கும் முயற்சி முன்னெடுக்கப்படுமாயின் அதை எதிர்த்து பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என கிழக்க மக்கள் அமைப்பின் தலைவரும், தேசிய சுதந்திரன முன்னணியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான ஜயந்த வீரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு வழிநடத்தல் குழுவில் முன்வைத்துள்ள யோசனைகள் ஆபத்தானவை என எச்சரித்துள்ளார். வடக்கு கிழக்கு இணைப்பு, ஆளுனரின் அதிகாரங்கள் குறைப்பு, மாகாண பொலிஸ் அதிகாரிகள் முதலமைச்சரிற்கு பொறுப்பு கூற வேண்டும் போன்ற கூட்டமைப்பின் யோசனைகள் பிரிவனைக்கு வழிவகுப்பவை என கூறியுள்ளார்.

இந்த யோசனைகளை கடுமையாக எதிர்ப்பதாக கூறியுள்ளார். வடக்கு கிழக்கு இணைப்பை இலங்கையில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களே தீர்மானிக்க வேண்டுமே தவிர, புலம்பெயர் தமிழ் அமைப்புக்களோ, அமெரிக்காவோ தீர்மானிக்க முடியாதென கூறியுள்ளார்.

# கனடாவிற்கு கப்பல் விட்டவருக்கு அதிகாரிகளுடன் என்ன தொடர்பு?

**கொழும்பு, ஒக்.08**

இலங்கை அரசதுறைகளில் ஊழல் எவ்வளவு ஆழமாக வேரோடியுள்ள தென்பதற்கு சான்றாக, அரசதுறை உயரதிகாரிகள் சிலரின் மோசடி செயற்பாடுகள் பற்றிய சில அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன. புலனாய்வு செய்தி ஊடகமொன்று இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

வன்னி யுத்தம் நிறைவடைந்ததும் தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு Sun sea கப்பல் கனடாவிற்கு சென்றிருந்தது. கட்ட ரவி என்பவரே இதன் சூத்திரதாரியாக செயற்பட்டவர். இந்த கப்பலில் கனடா செல்வதற்கு ஒவ்வொருவரிடமும் 25 இலட்சம் ரூபா அளவில் வசூலிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

Sun sea கப்பலை குத்தகைக்கு எடுத்து அகதிகளை ஏற்றிக்கொண்டு சென்ற சமயத்தில் கடற்பரப்பில் தத்தளித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நடவடிக்கையை ஒருங்கிணைத்த கட்ட ரவி தாய்லாந்தின் பாங்கொங் நகரத்தில் தங்கியிருந்துள்ளார். ஆட்கடத்தல் காரர்களின் மையப்புள்ளியாக அப்பொழுது தாய்லாந்து விளங்கியது.

Sun sea கப்பலில் அகதிகளை ஏற்றுவதற்காக பாங்கொங்கை தேர்வு செய்து கட்டரவி மற்றும் அவரது குழுவினர் தங்கியிருந்தனர். அப்பொழுது இலங்கை குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு உயரதிகாரியொருவர் தாய்லாந்து சென்றிருந்தார். அவருக்கான தங்குமிடம், உணவு உள்ளிட்ட சகலவசதிகளையும்கட்ட ரவி குழுவினரே மேற்கொண்டிருந்தனர். கப்பல் அகதிகளிற்கும் சட்டவிரோதமான முறையில் கடவுச்சீட்டுக்கள் வழங்கப் பட்டதா என்பதும் ஆராயப்பட்டு வருகிறது.

விடுதலைப்புலிகளிற்கு ஆயுதங்கள், வானொலி உபகரணங்களை விநியோகித்த குற்றச்சாட்டில் மூன்று தமிழர்கள் தாய்லாந்தில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நாடு கடத்தப்பட்டபோது இவர்கள் இலங்கையில் போலிக்கடவுச் சீட்டு தயாரித்தது தெரிய வந்தது. இந்த இரண்டு சம்பவத்துடனும் ஒரு அதிகாரியே தொடர்புபட்டிருக்கலாமென்ற கோணத் தில் விசாரணைகள் நடந்து வருவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு கேளிக்கை விடுதிகளில் பணியாற்றும் வெளிநாட்டு பாலியல் தொழிலாளிகளின் வீசா காலம் சட்டவிரோதமாக நீடிக்கப்பட்டதா கவும் அந்த செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# ரஷ்யாவிடம் இருந்து போர்க்கப்பல் வாங்குவதில் இலாபமடைவது யார்?

**கொழும்பு, ஒக்.08**

ரஷ்யாவிடம் இருந்து போர்த்தள பாடங்களை வாங்குவதற்கு அமைச்சர வையில் சச்சரவுடன் கூடிய அனுமதி கிடைத்துள்ளது. கடந்த 4ம் திகதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த பத்திரத்திற்கு பெரும் பாலான அமைச்சர்கள் ஆதரவளித்த போதும், நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர சில எதிர்ப்புக்களை பதிவுசெய்ததாக அறிய முடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் ரஷ்யாவிடம் இருந்து போர்த்தளபாடங்களை வாங்கும் உடன்பாடொன்று எட்டப்பட்டிருந்தது. ஒப்பந்தப்படி பெருமளவு போர்த்தள பாடங்கள் பெறப்பட்டுள்ளன. ஒப்பந்தத் தின் எஞ்சிய பகுதியின்படி போர்க்கப்பல், ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அமைச்சரவையில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டபோது, நிதியமைச்சர் மங்கள சமரவீர கடுமையாக எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். போர் நடக்காத சமயத்தில் அதிக தொகைக்கு பழைய போர்க்கப்பலை வாங்க வேண்டிய அவசியமில்லையென அவர் சுட்டிக் காட்டினார். இந்த விடயம் உள்நாட்டில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தக் கூடியது என்றும், அதனால் போர்க்கப்பல் கொள்வனவு தொடர்பாக ஆராய குழுவொன்றை அமைக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். இதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

கடன்பெறுமதிக்கான பொருட்கள் கொள்வனவு செய்யும்போதும் முறை யான கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டால் வீண் செலவீனங்களை குறைத்து, மக்களின் அதிருப்தியை தவிர்த்து கொள்ளலாமென்றும் மங்கள சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆயுத தளபாட கொள்வனவினால் நாட்டிலுள்ள முக்கிய செல்வந்தர் ஒருவர் பலனடைவதாக சில சிங்கள ஊடகங்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# பேஸ்புக் காதலியின் நிர்வாண படம் ஒரு இலட்சம்!

**கொழும்பு, ஒக்.08**

பேஸ்புக் மூலம் அறிமுகமான யுவதியொருவருக்கு காதல் வலைவீசி, அவரின் நிர்வாண புகைப் படங்களைபெற்று அதைவிற்பனைசெய்த குற்றச்சாட்டில் மட்டக்களப்பை சேர்ந்த ஒருவரை வெள்ளவத்தை பொலிசார் கைது செய்துள்ளனர். கைதாவரை கல்கிஸை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

ஹம்பாந்தோட்டையை சேர்ந்தவரும், தற்போது வெள்ளவத்தையில் வசிப்ப வருமான பெண்ணொருவர் கடந்த ஏப்ரல் 28ம் திகதி பேஸ்புக்கில் ஆண் ஒருவருடன் நட்பாகினார். இந்த நட்பு நாளடைவில் காதலாக மாறியதாக பெண்ணின் முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளது. தனது மனைவி சிங்கப் பூரிற்கு தொழிலுக்கு சென்று உயிரிழந்த தாக சந்தேகநபர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இருவருக்குமிடையில் காதல் தொடர்பு ஏற்பட்டதையடுத்து, பெண்ணின் நிர்வாண புகைப்படங்களை மின்னஞ்சல் ஊடாக பெற்றுக்கொண்ட சந்தேகநபர், அதன்பின்னர் காதல் தொடர்பை துண்டித்துள்ளார். காதலன் திடீரென தொடர்பை துண்டித்தமைக்கான காரணத்தை ஆராய்ந்தபோது, தனது நிர்வாணப்படங்களை ஒரு இலட்சம் ரூபாவிற்கு அவர் விற்பனை செய் திருந்ததை அறிந்து அதிர்ச்சியடைந் துள்ளார் குறித்த பெண். இது குறித்து உடனடியாக பொலிசாரிடம் முறை யிட்டிருந்தார்.

# சிறைச்சாலைக்குள் சொகுசு!

**கொழும்பு, ஒக்.08**

சிறைச்சாலையில் உள்ள தண்டனை கைதிகளில் செல்வாக்கு மிகுந்தவர்கள் முறையற்ற வசதிகளை அனுபவித்து வருவதை வெளிப்படுத்தியுள்ளது கொழும்பு புலனாய்வுஇணையஇதழொன்று. அரசியல், பாதுகாப்பு தரப்பின் முக்கியஸ்தர்கள் உரிய விதிமுறைகளை பின்பற்றாமல் சிறைச்சாலை வைத்தியசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக 19 பேருக்கு இந்த வசதி வழங்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

துமிந்த சில்வா, சரண குணவர்த்தன, பொலிஸ்அதிகாரியான வாஸ்குணவர்த்தன, பாதுகாப்பு அதிகாரியான மேஜர் திஸ்ஸ ஆகியோரும் இதில் உள்ளடங்குவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிராந்தி ராஜபக்சவின் சாரதியான மேஜர் திஸ்ஸ அதிகளவான நேரத்தை சிறைச்சாலை வைத்தியசாலையிலேயே கழித்துள்ளார். கொலைக்குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட வாஸ் குணவர்த்தனவும் சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதுதவிர, கடற்படை அதிகாரி ஒருவரும் நீண்டகாலமாக சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டி ருந்தது.

சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பலமுக்கியஸ்தர்களிற்கு வீட்டில் சமைத்த உணவும், சிலருக்கு ஹொட்டல்களில் சமைத்த உணவும் கொண்டு வரப்படுவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலை வைத்தியசாலையில் கடந்த இரண்டு வருடத்தில் சிகிச்சை பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல்வாதிகள், பாதுகாப்பு தரப்பினர், போதைப்பொருள் கடத்தல்காரர்களே உள்ளடங்குவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காங்கேசன்துறையிலிருந்து விரைவில் இந்தியாவிற்கு கப்பல்!

**யாழ்ப்பாணம், ஒக்.08**

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவின் காரைக்காலிற்கான கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்க முயற்சிகள் நடந்து வருகிறது. கடந்த மாத இறுதியில் பரீட்சார்த்த கப்பல் போக்குவரத்து நடத்த திட்டமிடப்பட்டிருந்த போதும், இறுதி நேரத்தில் அது இரத்து செய்யப்பட்டிருந்தது. எனினும், இம் மாத இறுதிக்குள் பரீட்சார்த்த கப்பல் சேவை நடைபெறுமென விடயமறிந்த வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

இந்த வருட ஆரம்பத்தில் காங்கேசன் துறையிலிருந்து தமிழகத்தின் காரைக்காலிற்கு கப்பல் சேவை நடக்குமென சில தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், அது பின்னர் நடைபெறவில்லை. ஆனால்இந்த சமயத்தில் கப்பல் போக்குவரத்திற்கான பேச்சை இலங்கை, இந்திய அரசுகள் ஆரம்பித்திருந்தன. தற்போதுதான் இதில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

கப்பல் போக்குவரத்திற்கு இந்தியா தயாராக இருந்தாலும், இலங்கையரசு நீண்ட தயக்கத்தை வெளிப்படுத்தியதாக தெரிகிறது.

காங்கேசன்துறை அல்லது அதனை அண்டிய பகுதியில் இருந்து கப்பல் சேவையை ஆரம்பித்தால், அந்த பகுதியை பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விட வேண்டும். எனினும், உயர்பாதுகாப்பு வலயங்களை சடுதியாக அகற்ற இராணுவம் தயாராக இல்லாமலிருந்ததுடன், தெற்கு அரசியல் நிலைமைகளையும் கருத்தில் கொண்டு இதில் அவசரம் காட்டவில்லை அரசு. எனினும், தற்போது காங்கேசன்துறையில் காணிகள் விடுவிக்கப்பட்டதையடுத்து, கப்பல் சேவையை ஆரம்பிக்க இலங்கையரசு தயாராக உள்ளது.

கப்பல் சேவைக்கான இருதரப்பு பூர்வாங்க பேச்சுக்கள் முடிந்த நிலையில், கப்பல்சேவை தனியாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழ் வர்த்தகர் ஒருவரே கப்பல் சேவையை மேற்கொள்ளவுள்ளார்.

# "முஸ்லிம் கூட்டமைப்பு புஸ்வாணமாகும்: ஹசனலியின் கோட்டை தகரும்"

## மு.கா தவிசாளர் அப்துல் மஜீத் சூடான போட்டி

அனார்கலி

முஸ்லிம் கூட்டமைப்பு என்பது ஒரு கற்பனை கூட்டு. அது சாத்திய மாகாது. புஸ்வாணமாக போய்விடும் என்கிறார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தவிசாளரும், இணைந்த வட கிழக்கு மாகாணசபையில் உறுப்பினராக இருந்த வரும், கல்முனை மாநகரசபையின் பிரதி மேயராக இருந்தவருமான அப்துல் மஜீத்.

உள்ளூராட்சி தேர்தல்களிற்காக கட்சிகள் பரபரப்பாகிவரும் நிலையில், சாய்ந்தமருதில் உள்ள அவரது வீட்டில் சந்தித்தோம். முஸ்லிம் கூட்டமைப்பு, முஸ்லிம்காங்கிரசின் மீதான விமர்சனங்கள், கரையோர மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மனம் திறந்து பேசினார்.

**தீபம்: முஸ்லிம் காங்கிரஸை தூய்மைப்படுத்தப்போவதாகக் கூறி தூய முஸ்லிம் காங்கிரஸ் எனும் பெயரில் அணி ஒன்று செயற்படத்தொடங்கியுள்ளதே?**

**பதில்:** இந்த அணியிலுள்ளவர்கள் தமது கடந்தகால அரசியல் செயற்பாடுகளை, நடவடிக்கைகளை நின்று நிதானித்து எடை போட்டுப்பார்க்க வேண்டும். முஸ்லிம் காங்கிரஸை தூய்மைப்படுத்தப்போவதாகக் கூறவோ, தூய முஸ்லிம் காங்கிரஸ் எனக்கூறவோ அவர்களுக்குத் தகுதியிருக் கிறதா என்பதை மனச்சாட்சியே அவர் களுக்கு சொல்லும். தூய முஸ்லிம் காங்கிரஸ் என்பதும் ஓர் கற்பனைவாதமென்பதே எனது கருத்தாகும். அது ஒரு வெறும் சொற்பதம் மட்டும்தான். ஒருபோதும் நிஜமாகப் போவதில்லை. இந்த கற்பனை கூட்டுக்குள் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் அமைச்சர் ரிசாட் பதியுதீன், தேசிய காங்கிரசின் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா ஆகியவர்கள் இணைவதாக ஹசனலி சொல்கிறார். ஆனால் அதாவுல்லாவும், ரிசாட்டும் இந்த கூட்டணியில் ஒருபோதும் போட்டியிட மாட்டார்கள். ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்து போட்டியிட ரிசாட்டும், சுதந்திரக் கட்சியுடன் பங்காளியாக அதாவுல்லாவும் முயல்கிறார்கள். எனவே முஸ்லிம் கூட்டமைப்பென்பது புஸ்வாணமாகவே முடியும். அது ஒரு கற்பனை கூட்டு.

**தீபம்: முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய தளமான கிழக்கின் அம்பாறை மாவட்டத் தில், அண்மைய அரசியல் சூழலின்படி முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கு வீழ்ச்சி கண்டுள்ளதாகக் கூறப்படுகின்றதே?**

**பதில்:** இல்லவே இல்லை! ஒரு கட்சி தனது முக்கிய தளத்தில் மக்கள் செல்வாக்கையோ, ஸ்திரத்தன்மையையோ இழந்துள்ளதா என்பதை தேர்தல் மூலம்தான் அறிய முடியும். 1994ல் பிரதேச சபைகள் சட்டம் கொண்டுவரப்பட்டதன் பின் நடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில், அம்பாறை மாவட்டத்திலுள்ள பெரும் பாலான உள்ளூராட்சிச் சபைகளை (முஸ்லிம் பிரதேச) முஸ்லிம் காங்கிரசே கைப்பற்றி வந்துள்ளது.

குறிப்பாக கல்முனை (மாநகரசபை), நிந்தவூர், இறக்காமம், சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, பொத்துவில் உள்ளூ ராட்சி சபைகளின் ஆட்சி இறுதிவரை முஸ்லிம் காங்கிரஸ் வசமே இருந்தது.

எதிர்காலத்திலும் இந்த சபைகள் மட்டுமல்ல அக்கரைப்பற்று மாநகரசபை, பிரதேசசபை ஆகியவற்றையும் கைப் பற்றும் வேலைத்திட்டத்தையும் முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பித்துள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பெரும் பான்மை உள்ளூராட்சி சபைகளை வர விருக்கும் தேர்தலிலும் முஸ்லிம் காங்கிரஸே கைப்பற்றும்.

**தீபம்: நீங்கள் கல்முனை மாநகரசபை யின் பிரதி முதல்வராகவும் இருந்தவர். வர விருக்கும் கல்முனை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் உண்டா? மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா?**

**பதில்:** கல்முனை மாநகரசபை தேர்தலில் போட்டியிடும் எண்ணம் கிடையாது. கிழக்கு மாகாணசபைதேர்தல் வரும் போது, போட்டியிடுவதா? இல்லையா? என்பது பற்றி கவனம் கொள்வேன் .

**தீபம்: அக்கரைப்பற்றில் நடந்த கலந்து ரையாடல் ஒன்றின்போது முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் பஷீர்சேகுதாவூத், அம்பாறை மாவட்டத் திலுள்ள அனைத்து பெரும்பான்மை முஸ்லிம் உள்ளூராட்சி சபைகளை யும் கைப்பற்றுவதன்மூலம் முஸ்லிம் காங்கிரஸை விரட்டியடிக்கப்போவ தாகக் கூறியுள்ளாரே?**

**பதில்:** அவரும் அவரது அணி யினரும் கற்பனையில் மிதப்பதுடன், இவ்வாறு மனப்பால் குடித்துக்கொண்டு மிருக்கிறார்கள். முடியுமானால் ஏறாவூர் நகரசபையைக் கைப்பற்றிக்காட்டுங்கள் பார்ப்போமென பஷீருக்கு நான் சவால் விடுக்கிறேன்

**தீபம் : கரையோர மாவட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் கைவிட்டுவிட்டதாக பரவலான விமர்சனங்கள் வைக்கப் படுகிறதே?**

**பதில்:** கரையோர மாவட்டக் கோரிக் கையை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் கைவிடவில்லை. 2005 ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக்கட்சி யுடன் செய்து கொண்ட எமது பத்து அம்ச உடன்பாட்டில்கூட கரையோர மாவட்டம் மிகத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருந்ததையும் ஞாபகமூட்ட விரும்பு கின்றேன். அதை நாம் வென்றெடுப்போம்.

**தீபம்: கிழக்கு மாகாணசபை கலைந்துவிட்டது. மீண்டும் முஸ்லிம் காங்கிரசின் முதலமைச்சர் ஒருவர் உருவாக வாய்ப்புள்ளதா?**

**பதில்:** இதற்கான அத்தனை காய் நகர்த்தல்களையும், உரிய வியூகங் களுடன் முன்னெடுத்து வருவதுடன், நேச சக்திகளாகவுள்ள ஏனைய அரசியல் சக்திகளுடனும் கலந்துரையாடிவரு கின்றோம். தலைவர் ஹக்கீம் மீண்டும் முஸ்லிம் முதலமைச்சரைக் கொண்டு வரத்தக்ககாய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றார்.

எமது தலைவர் ரவூப் ஹக்கீமைப் பொறுத்தவரை அரசியலில் விரிந்த பார் வையும், பரந்த சிந்தனையும், தூரநோக்குட னான அரசியல் சாணக்கியமும் மிக்கவர்.

வடகிழக்கு தமிழர் தாயகத்தில் முஸ்லிம்களுக்கும் ஒரு தாயகமிருக்கின்றது என்ற கோட்பாட்டை மறைந்த தலைவர் அஷ்ரப் முன்னெடுத்துச் சென்றார். அதே கோட்பாட்டில்தான் இன்றும் முஸ்லிம் காங்கிரஸ் பயணிக்கின்றது.


ஆனால் தலைவர் ஹக்கீம் மீது தனிப் பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண் டவர்கள் அவர் முஸ்லிம் மக்களைக் காட்டிக்கொடுத்துவிட்டாரென விசமப் பிரச்சாரங்களைச் செய்கின்றனர். இது சரிந்து கிடக்கும் அவர்களது அரசியலை தூக்கி நிமிர்த்த மேற்கொள்ளும் யுக்தி யேயாகும்.

**தீபம்: சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பருக்கு வழங்கப்பட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் பதவி முன்புபோல் அதிகாரம் கொண்டதல்ல என்ற விமர்சனங்களை எப்படி பார்க்கிறீர்கள்.**

**பதில்:** விசமத்தனமான கூற்று இது. முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலிக்கு இருந்த அனைத்து அதிகாரங்களும் இச் செயலாளர் பதவிக்கும் உண்டு. தேர்தலில் போட்டியிட முடியாது என்பது மட்டு மான நிபந்தனை கொண்டது. கட்சியின் ஆயுட்கால உறுப்பினரான நிஸாம் காரி


தொடர்ச்சி அடுத்த பக்கம்...

**தலைவர் ஹக்கீம் மீது தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் அவர் முஸ்லிம் மக்களைக் காட்டிக்கொடுத்து விட்டாரென விசமப் பிரச்சாரங்களைச் செய்கின்றனர். இது சரிந்து கிடக்கும் அவர்களது அரசியலை தூக்கி நிமிர்த்த மேற்கொள்ளும் யுக்தியேயாகும்.**



# மாகாணசபை தேர்தலும் 50:50 முறைமையும்

## இலகுவான விளக்கம்



ஜவ்ஸி அப்துல் ஜப்பார்

மாகாணசபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டு அண்மையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் இருந்து வந்த விகிதாசார தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட்டு, தற்போது தொகுதியும் விகிதாசாரமும் சேர்ந்த கலப்பு தேர்தல் முறைமை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தக் கலப்பு முறைமையினூடாக தொகுதி வாரியாக 50 வீத உறுப்பினர்களும், விகிதாசார ரீதியாக 50 வீதமான உறுப்பினர்களும் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

இந்த நிலையில், 50க்கு 50 எனும் இந்த முறைமையினை விளங்கிக் கொள்வதில் கணிசமானோர் சிரமப்படுகின்றனர். அதனை விளங்கும் படியானதொரு பதிவே இது.

ஒரு மாவட்டத்தின் உறுப்பினர்களில் 50% தொகுதி முறையிலும் மிகுதி 50% விகிதாசார முறையிலும் தெரிவு செய்யப்படுவர். உதாரணமாக கிழக்கு மாகாணசபை தேர்தலை எடுத்துக் கொள்வோம். அங்குள்ள திகாமடுல்லை மாவட்டத்திலிருந்து மாகாண சபைக்கு செல்லும் ஆசனங்கள் 14 ஆகும். இதன் 50 வீதம் 07 ஆகும். ஆகவே இங்கே 07 தொகுதிகள் உருவாக்கப்படும். மிகுதி ஆசனங்கள் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படும்

திகாமடுல்லா மாவட்டத்திலுள்ள 07 தொகுதிகளும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் (இரட்டை தொகுதி ), அம்பாறை, தெஹியத்த கண்டி மற்றும் பதியதலாவை எனக்கொள்வோம்.

ஒரு மாவட்டத்தில் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் பெற்ற மொத்த வாக்குகளின் கூட்டுத்தொகை, மொத்த ஆசனங்களினால் பிரிக்கப்படும். இதன் போது கிடைக்கப்பெறும் எண், 'தகைமையளிக்கும் எண்' எனப்படும்.

ஒவ்வொரு கட்சியும் பெறும் வாக்குகளை மேலே குறித்த தகைமையளிக்கும்

எண்ணினால பிரித்து வரும் எண்ணை, ஒரு முழு எண்ணாகக் கொண்டு, ஒவ்வொரு கட்சியும் பெற்ற மொத்த ஆசங்கள் (தொகுதி ஆசனம் + விகிதாசார ஆசனம்)

கணிக்கப்படும் .

பின்வரும் உதாரணம் மூலம் விளங்கிக் கொள்வோம்.

கட்சிகள் வெற்றிபெற்ற தொகுதிகள் வருமாறு;

கட்சி அ - 04
கட்டி ஆ - 02
கட்சி இ - 01

மேற்படி கட்சிகள் ஒவ்வொன்றும் மாவட்டத்தில் பெறப்பட்ட வாக்குகளின் விபரம்;

கட்சி அ - 133,000
கட்டி ஆ - 61,000
கட்சி இ - 52,000
கட்சி ஈ - 40,000
கட்சி உ - 18,000

இதன்படி தகைமையளிக்கும் எண் இவ்வாறு வரும்; 304000/14 = 21714

இதன்படி கட்சிகள் பெறும் மொத்த ஆசனங்கள்;

கட்சி அ - (6.1) 6
கட்டி ஆ - (2.8) 3
கட்சி இ - (2.4) 2
கட்சி ஈ - (1.8) 2
கட்சி உ - (0.8) 1

மொத்த கூட்டுத்தொகை, ஆசனங்களின் மொத்த எண்ணிக்கையிலும் கூடும்போது தேர்தல் ஆணையாளர் தீர்மானிப்பார். குறைந்தால் குறித்த கட்சியின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு பட்டியலில் உள்ளவர் நியமிக்கப்படுவார்.

மேலேயுள்ளவாறு மொத்த வாக்குகளிலிருந்து தொகுதி, விகிதாசார உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர், தொகுதி ஆசனங்களில் தெரிவானோர் தவிர, ஏனையோர் மாவட்ட பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்படல் வேண்டும்.

ஆகவே கட்சிகளின் தொகுதி + விகிதாசார விபரம்

(Elected தெரிவு செய்யப்பட்டோர், Returned தேர்ந்தெடுக்கப்பட்டோர்)

கட்சி அ - 6 ( 4+2)
கட்டி ஆ - 3 (2+1)
கட்சி இ - 2 (1+1)
கட்சி ஈ - 2 ( 0+2)
கட்சி உ - 1 ( 0+1)

இதன் போது 25 வீதமான பெண்கள் மொத்த உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவதை தேர்தல் ஆணையாளர் உறுதிப்படுத்துவார் .

இந்த முறையிலுள்ள குறிப்பிடத்தக்க அம்சங்கள்

- புதிய மாகாண தொகுதிகள் உருவாக்கப்படும் .
- மொத்த ஆசனங்கள் விகிதாசார முறையிலேயே கணிக்கப்படுகின்றன.
- விருப்பு வாக்குகள் இல்லை. தொகுதியில் அளிக்கப்படும்.
- வாக்கு தொகுதி வெற்றியைத் தீர்மானிக்கவும் கட்சியின் மொத்த வாக்குக்குமாக இரண்டு முறைக்கும் எடுத்துக் கொள்ளப்படும்.
- ஒற்றை வாக்குச் சீட்டு முறை. தேசியப் பட்டியல்போன்று மாவட்டப்பட்டியல் அல்லது தேர்தல் பட்டியலிலிருந்து விகிதாசார முறை அங்கத்துவர்தெரிவு செய்யப்படுவர்.




---

யப்பர் இப்பதவிக்கு முற்றிலும் தகுதியானவர், சகல தகுதியும் அவருக்கு உண்டு.

**தீபம்: முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கிழக்கிற்கு வேண்டும் என்ற கோசம் வலுப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** 1986 இல் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு 1988 பெப்ரவரி 11இல் தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது. அதே வருடம் ஏப்ரலில் வடமேல் மாகாணம், ஊவா மாகாணம், மத்திய மாகாணம் என்பவற்றுக்கு முதன்முதலாக மாகாணசபைத்தேர்தல்கள் நடந்தன. அந்தத் தேர்தலில் எவ்வித ஆயத்தமுமில்லாத நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் களமிறங்கியது. அப்போது அங்குள்ள மக்கள் முஸ்லிம் காங்கிரஸை வரவேற்று, ஆதரித்து அரசியல் அதிகாரத்தை முதன்முதலாக முஸ்லிம் காங்கிரசுக்கு வழங்கினர்.

இன்று கிழக்கிற்கு தலைமை வேண்டுமென கோசமிடுவதுபோல் அன்று அந்த மக்கள் தலைவர் அஷ்ரப்பையும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியையும் நிராகரித்திருந்தால் முஸ்லிம் காங்கிரஸ் முளையிலேயே கிள்ளிவீசப்பட்டிருக்குமல்லவா?

கிழக்கிற்கு வெளியே அன்று 12 மாகாணசபை உறுப்பினர்கள் வெற்றி பெற்று தலைவர் அஷ்ரப்பிற்கு அங்கீகாரம், அரசியல் அதிகாரம் கிடைத்தது. இது கிழக்கிற்கு வெளியேயிருந்து கிடைத்த பேறு என்பதை பிராந்தியவாதம் பேசித் திரிபவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

பிரதேசவாதத்தை உடைத்தெறிவதும், பேரினவாதத்திற்கெதிராகப் போராடுவதையும் முக்கிய கோட்பாடாகக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸின் 30 வருட பாசறையிலிருந்து விட்டு, இன்று வெளியேறி நின்று இத்தகைய பிற்போக்குத்தனமான வாதங்களை முனவைப்பது அவர்களது அரசியல் வங்குரோத்து தனத்தையே வெளிக்காட்டுகின்றது.

தலைவர் ஹக்கீம் அம்பாறை, திருமலை மாவட்டங்களில் இரு தேர்தல்களில் போட்டியிட்டு மக்கள் அங்கீகாரம் பெற்றவர். மாகாணசபைக்கும் சென்று வந்தவர். அவர் தலைமையைக் கேள்விக்கு உட்படுத்த இவர்களுக்குத் தகுதியிருப்பதாக நான் கருதவில்லை. முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியலில் பாராளுமன்ற நாற்காலிகளை அலங்கரித்தவர்கள் இவர்கள் என்பதை முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் மறந்துவிடத் தயாரில்லை!

# நானும் கேணல் தர அதிகாரிதான்!

## வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்னம் எழுதுகிறார்

வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் இந்தவாரம் அனுபவங்களை எழுதுகிறார். ரெலோ அமைப்பின் நீண்டகால போராளியான இவர், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி பகுதிகளில் செயற்பட்ட அனுபவங்களை எழுதுகிறார்.

நெடுந்தீவில் சாதாரண விவசாய குடும்பமொன்றில் பத்து பிள்ளைகளில் ஒருவராக பிறந்தேன். அப்பா தமிழர் விடுதலைக்கூட்டணியின் தீவிர பற்றாளர், உறுப்பினராக இருந்தார். பின்னர் வீ.நவரத்தினத்தின் தமிழர் சுயாட்சி கழகத்தில் அதனால் வீட்டில் அரசியல் பேச்சுக்கள் அதிகமாக நடக்கும்.

க.பொ.த சாதாரண தரத்தை முடித்த சமயத்தில் 1983இல் வெலிக்கடை படுகொலை நடந்தது. குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றவர்களின் மரணம் எல்லா இடங்களை போலவும் வீட்டிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இப்பொழுதும் அந்த சம்பவம் நன்றாக நினைவில் இருக்கிறது. அப்பா இடிந்து போனார். சுவரில் சாய்ந்திருந்து இரவிரவாக அழுதுகொண்டிருந்தார். அவருக்கு பக்கத்திலேயே நான் குந்தியிருந்தேன்.

1984 ஜனவரி மாதத்தில் நான் ரெலோ அமைப்பில் இணைந்து கொண்டேன். பின்னர் எனது சகோதரிகள் இருவர்

> **மக்கள் பிரதிநிதிகள், பொதுவாழ்வில் உள்ளவர்களின் அறியப்படாத பக்கங்களை புரட்டும் பகுதி இது. வாழ்வில் நடந்த, அடிக்கடி நினைக்கும், மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளை இந்த பகுதியில் ஒவ்வொரு வாரமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள் அவர்கள். மனதின் மூலைக்குள் மறைத்து வைத்திருந்த சம்பவங்களை முதன்முறையாக அவர்கள் அச்சில் பேசவுள்ளனர். நீங்கள் இதுவரை கேட்காத கதைகள் இவை.**

விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டனர். (கப்டன் சாவித்திரி, மேஜர் பவளமொழி/சாரா) பின்னர் வீரச்சாவடைந்து விட்டனர்)

காரை நகரை சேர்ந்த மிசோ ராம் என்பவர்தான் என்னை ரெலோ அமைப்பில் இணைத்தார். பயிற்சிக்காக புங்குடுதீவிலிருந்த புதிய போராளிகள் பத்துபேர் படகில் இந்தியாவிற்கு புறப்பட்டோம். காங்கேசன்துறையில் இருந்து வந்த கடற்படை கப்பல்கள் எம்மை கச்சதீவுக்கு சுற்றிவளைத்து, எம்மீது போக்கஸ் வெளிச்சத்தை பாய்ச்சி துப்பாக்கிச்சூடு நடத்தினர். ஒரு ரவை எனது தலைமயிரை எரித்துக்கொண்டு சென்றது. மயிரிழையில் தப்பித்தேன். மயிலிட்டியை சேர்ந்த கோபி, தொண்டைமானாறை சேர்ந்த சசி , வல்வெட்டித்துறையை சேர்ந்த ராஜன் என மூன்று ஓட்டிகள். அவர்கள் திறமையானவர்கள். எப்படியோ கடற்படையிடமிருந்து சுழித்து கொண்டு தப்பிவிட்டார்கள். படகோட்டி ஒருவர், எம்முடன் வந்த ஒருவருக்கு காயம். ஒரு இயந்திரத்திலும் வெடிபட்டிருந்தது. ஆனால் அரை மணித்தியாலத்தில் இராமேஸ்வரத்தில் தரையிறக்கிவிட்டார்கள்.

இந்தியாவின் இராமேஸ்வரத்தில் வில்லூன்றி என்ற இடத்தில் தங்கியிருந்தோம். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருவதற்கு எங்கள் தளபதிகளில் ஒருவரான தாஸ் அங்கு நின்றார். அவர் எங்கள் அனைவருக்கும் பெயர் வைத்தார். எனக்கு விந்தன் என்ற பெயரை வைத்தது அவர்தான். அந்த பகுதியில் விடுதலைப்புலிகளின் முகாமும் இருந்தது.

கடற்கரையில் நாங்கள் ஓட்டப்பயிற்சி செய்யும்போது புலிகளும் ஓட்டப் பயிற்சியில் ஈடுபடுவார்கள். பொட்டம்மான், சூசை, சந்தோசம் மாஸ்ரர் போன்றவர்கள் அங்கு பயிற்சியில் ஈடுபடுவார்கள். பயிற்சியின் பின் எல்லோரும் ஒன்றாக இருந்து கதைப்போம்.

எங்கள் அணியை பயிற்சிக்காக உத்தரபிரதேசத்திற்கு அனுப்ப முடிவு செய்தார்கள். அப்போது எனக்கு பதினேழு வயது. நான்தான் வயதில் சிறியவன். கடல்மட்டத்தில் இருந்து பதினைந்தாயிரம் அடி உயரத்தில் உள்ள இமயமலையில் பயிற்சி நடக்கவிருந்தது. அந்த குளிரை நான் தாங்கமாட்டேன் என கூறி, சிறீசபாரத்தினம் என்னை அந்த அணியுடன் போக அனுமதிக்கவில்லை. சிறிதுகாலம் இராமேஸ்வர முகாமிலேயே இருந்தேன்.

பின்னர் சேலம் கொல்லிமலையில் நடந்த பயிற்சி முகாமில் ஒரு வருடம் இராணுவப்பயிற்சி பெற்றேன். பயிற்சி காலத்தில் பயங்கர உணவுத்தட்டுப்பாடு நிலவியது. ஒரு கரண்டி பருப்பை அவித்த தண்ணீர்தான் கறி. சில சமயங்களில் உணவே இல்லாமல் கொல்லிமலை காட்டுக்குள் சென்று பலாப்பழம்தான் பறித்து சாப்பிட்டோம். அது கரடிக்காடு. அந்த அபாயத்திற்குள்தான் சென்று சாப்பாடு தேடினோம். இலை, குழைகளையும் பறித்து சாப்பிட்டோம். அப்போது ரெலோ கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்திருந்தது. சங்கானை வங்கி கொள்ளையின் பின்னர்தான் ஓரளவு பணநெருக்கடி தீர்ந்தது.

இந்தக்காலப்பகுதியில்தான் இந்திரா காந்தி கொல்லப்பட்டார். இதையடுத்து, எந்தவொரு இயக்கத்திற்கும் இந்திய மண்ணில் பயிற்சி கொடுப்பதில்லையென இந்திய மத்திய அரசு முடிவெடுத்ததையடுத்து, உத்தர பிரதேச பயிற்சி நிறுத்தப்பட்டது.

ஆனால் 1985 இறுதியில் உத்தரபிரதேசத்தில் ரெலோவிற்கு கொமாண்டோ பயிற்சியை இந்தியா வழங்கியது. மூன்று மாதம் நடந்தது. பயிற்சியின் பின்னர் இந்தியாவிலேயே இருந்தேன். இந்த சமயத்தில்தான் ரெலோவின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

ஜே.ஆர் இந்தியாவிற்கு வரவிருந்த சமயத்தில் பெங்களூர் விமானநிலையத்தில் குண்டுவெடித்தது. இந்த தாக்குதலை நடத்தியது தம்பாபிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ இராணுவத்தினர். இதன் எதிரொலியாக இந்தியாவில் இருந்த தமிழ் இயக்கங்களின் ஆயுதங்களை இந்தியா களைந்தது. இதற்கு எதிராக உண்ணாவிரத போராட்டம் நடத்தினோம். சென்னையில் இருந்த ஈழ தேசிய விடுதலை முன்னணி (நான்கு இயக்கங்களின் கூட்டணி) அலுவலகத்தில் நீர் கூட அருந்தாமல் போராட்டம் நடந்தது. நான், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டவர்கள் அந்த போராட்டத்தில் ஈடுபட்டோம். ஏழு நாட்கள் நடந்த போராட்டத்தில் நான் ஐந்து நாட்கள் நீராகாரமும் அருந்தாமல் இருந்தேன். பின்னர் அதிமுகவின் பண்ருட்டி ராமச்சந்திரன், தி.மு.கவின் அன்பழகன், திராவிடர் கழகத்தின் கி.வீரமணி போன்றவர்கள் தலையிட்டு உண்ணாவிரதத்தை முடித்து வைத்தனர். இந்த காலப்பகுதியில் தொலைத்தொடர்பு சாதனங்கள் பறிக்கப்பட்டதற்கு எதிராக பிரபாகரனும் உண்ணாவிரத போராட்டத்தை நடத்தியிருந்தார்.

இலங்கையில் எமது இயக்கம் புலிகளால் தடை செய்யப்பட்டதை தொடர்ந்து இந்தியாவிலேயே தங்கியிருந்தோம். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின், நாங்கள் இலங்கைக்கு திரும்ப முடிவெடுத்தோம். இதற்கு இந்தியாவும் சம்மதித்தது. றோ உளவுப்பிரிவு ஆயுத உதவி செய்தது. நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்தபோது, புலிகளால் தாக்கப்பட்டபோது இந்தியா எமக்கு பெரியளவில் ஆயுத உதவிசெய்யவில்லை. ஆனால் மீண்டும் இலங்கைக்கு திரும்ப போகிறோம் என்றதும் பெரியளவில் ஆயுத உதவி செய்தனர். 50 கலிபர், 30 கலிபர், கால்குஸ்தா, எல்.எம்.ஜிகள் என ஆயுதங்களை பார்த்து நாங்களே ஆச்சரியப்பட்டு விட்டோம். இந்த ஆயுதங்களை ஆரம்பத்தில் தந்திருந்தால் நாங்கள் எத்தனையோ வெற்றிகளை பெற்றிருப்போம்.

நாற்பது உறுப்பினர்கள் கடல்வழியாக மன்னாருக்கு வந்தோம். மூன்றாம்பிட்டி என்ற இடத்தில் தரையிறங்க முயற்சித்தபோது புலிகள் தாக்குதல் நடத்த தொடங்கினார்கள். எதிர்தாக்குதல் நடத்தியபடியே தரையிறங்கினோம். அங்கு முகாமமைத்தோம். அதிலிருந்து படிப்படியாக முகாம்களை விஸ்தரித்து தேத்தாதீவு, விடத்தல்தீவு பகுதிகளிற்கும் சென்றோம். இந்த காலப்பகுதியில் எமது ஆட்பலமும் பெருகியது. புளொட்டும் சங்கிலியன், ரெலா காந்தன், மாணிக்கதாசன், சேவல்கொடி, மாறன் போன்ற முக்கிய உறுப்பினர்களுடன் மன்னாரில் முகாம் அமைத்தது.

இந்திய ராணுவத்திடம் ஆயுத ஒப்படைப்பு நிகழ்ந்தபோது எல்லா ஆயுதங்களும் ஆயுதங்களை ஒப்படைத்தன. மன்னாரில் கிட்டத்தட்ட 75 ஆயுதங்களை ஒப்படைத்தோம். நாங்கள் முழுமையாக ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை. புலிகளும் முழுமையாக ஒப்படைக்கவில்லை.

பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு என எமது அலுவலகங்களை விஸ்தரித்தோம். நாம் ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கவில்லையென இந்திய

தொடர்ச்சி 17-ம் பக்கம்...



# எழுபதிலல்ல பெருமை!

இலங்கையின் நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு எழுபது வருடங்கள் முடிந்து விட்டன. கடந்த 03ம் திகதி நாடாளுமன்றத்தில் சிறப்பு அமர்வு மூலம் அந்த வரலாற்று நாள் நினைவுகூரப்பட்டது. நடாளுமன்றம் குறிப்பாக அரசியல் நிர்ணயசபையாகவும் அது உருவெடுத்ததன் பின், ஒரு நாட்டின் இதயமென அதை குறிப்பிடுவதில் தவறில்லை. நாட்டின் ஆட்சி நிர்வாகத்தினமும், ஜனநாயகத்தினதும், குடியரசின் அடிநாதமான மக்கள் ஆட்சியினதும் உயிர் அங்குதான் வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், கட்சிகளின் தலைவர்கள் இந்த நிகழ்வில் உரையாற்றியிருந்தனர். எல்லோரும் நாடாளுமன்றத்தின் அருமை பெருமைகளையே உரையாற்றினார்கள். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமாரதிசநாயக்க மட்டுமே வேறொரு கண்ணோட்டத்தில் பார்த்தார். இலங்கையின் அரசியல் சீரழிவுகளிற்கு பாராளுமன்றமும் ஒரு காரணம் என அனுர குறிப்பிட்டிருந்தார்.

உண்மைதான். அனுர குறிப்பிட்டது பொது சிங்கள பார்வையில் இருந்தபடி தெரிந்தவற்றையே. சிராணியை பதவியில் இருந்து அகற்றியது, 75 இல் மக்கள் சம்மதமின்றி நாடாளுமன்றத்தின் ஆயுள் காலம் நீடிக்கப்பட்டது போன்ற சம்பவங்களை வைத்தே பேசினார். அனுரவின் பேச்சு சிங்கள பொதுப்புத்திக்கு சற்று கசப்பாக இருக்கலாம். ஆனால் யதார்த்தம் அனுரவிற்கும் கசப்பானதுதான்.

இன்றைய இனப்பிரச்சனை சிக்கலிற்கு நாடாளுமன்றமும் ஒருவிதத்தில் பொறுப்புத்தான். இனமேலாதிக்கமும், பௌத்த சித்தாந்தமும் நிறைந்த மனங்களின் பிரதிநிதிகள் நிர்வாகத்தின் எந்த மட்டத்தில் கூடினாலும், அங்கு பன்மைத்துவத்தின் கூறுகள் அடிபட்டு போய்விடும் என்பதே இலங்கையின் வரலாறு. கீழ்மட்ட நிர்வாகத்தில் இருந்து நாடாளுமன்றம் வரை இது நீடிக்கும். நாட்டின் இதயத்தில் இந்த சீரழிவுகள் ஏற்பட்டால், அது நாட்டையும் சீரழிக்கும். நாடாளுமன்றத்தில் நடந்ததும் அதுதான்.

இலங்கை வரலாற்றின் பல சீரழிவுகளிற்கு நாடாளுமன்றமே காரணமாக இருந்திருக்கிறது. ஒருவகையில் சொன்னால், இலங்கை இனப்பிரச்சனை இவ்வளவு சிக்கலடைந்ததற்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் நாடாளுமன்றத்தின் அங்கத்தவர்கள் பொறுப்பு சொல்ல வேண்டியவர்கள். 1972 இல் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டபோது, ஏற்கனவே சோல்பரி யாப்பில் சிறுபான்மையினங்களை ஓரளவு பாதுகாத்து வந்த 29 (2) சரத்து அகற்றப்பட்டது. தனிச்சிங்களம் ஆட்சிமொழியானது. இந்த குடியரசு யாப்பை நாடாளுமன்றம் அங்கீகரித்தது.

கடந்த வாரம் இலங்கை நாடாளுமன்றத்திற்கு 70 வயது. 1972 இல் சிறுபான்மையினரின் பாதுகாப்பை நீக்கியது, சிங்கள ஆட்சிமொழி சட்ட நிறைவேற்றம்தான் ஏற்கனவே கொந்தளித்து கொண்டிருந்த இனமோதலை மேலும் உக்கிரப்படுத்தியது. தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என பிளவுண்டிருந்த தமிழ் தேசிய அரசியல் ஒரு முனைவடிவம் பெற்றது.

அன்றைய சம்பவத்திற்கு இன்றுவரை யாரும் வருந்தியதாகவும் இல்லை. பிழையென உணர்ந்ததாகவும் இல்லை. பிழையென உணர்ந்தாலும் பகிரங்கமாக சொல்ல துணியப்போவதுமில்லை. சிங்கள மனநிலையில் இருந்து அப்படி சிந்திக்க முடியுமாவென்றும் தெரியவில்லை.

புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளின் முதல்படி இந்த காலகட்டம். இடைக்கால அறிக்கை, அரசியல் நிர்ணயசபையான நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அதில் பௌத்தத்திற்கு முன்னுரிமை, ஒற்றையாட்சி போன்றவை கட்டாயம் இடம்பெறவேண்டுமென கடும்போக்குவாதிகள் விடாப் பிடியாக நிற்கிறார்கள். வழிநடத்தல் குழுவும் ஒருவித சூட்சும போக்கில் அறிக்கையை தயாரித்துள்ளது. அறிக்கை தெளிவாகவும், வெளிப்படையாகவும் இருந்தால் நிறைவேற்றப்பட முடியாதென்ற முன்னெச்சரிக்கைதான் காரணம். அதாவது, 1972 சூழல்தான் நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் நீடிக்கிறது. இந்த சூழலை மாற்றும்வரை நாட்டின் பல்லின அடையாளத்தை நிறுவுவது மிகச்சிரமம்.

நாட்டின் பல்லின அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஒரு அரசியலமைப்பை உருவாக்க முடியாதென்றால், அந்த நாடாளுமன்றத்தில் பெருமைகொள்ள என்ன இருக்கிறது?

சிறிமாவே பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறித்தல், சிராணி பண்டாரநாயக்கவின் பதவிநீக்கம் என்பன ஒரு வகையான கேலிக்கூத்துக்கள் என்றால் 18வது திருத்தம், 20வது திருத்தம் என்பன இன்னொரு வகையான ஜனநாயக படுகொலைகள். உயர்ந்த சபையொன்றின் மாட்சியை அதன் செயற்பாடுகளிலேயே உள்ளது. சட்டத்தாலும், அதிகாரத்தாலும் அதை நிறுவ முடியாது.

இலங்கை நாடாளுமன்றத்தில் பல இனங்களின் பிரதிநிதிகள் இருப்பது அதன் பன்மைத்துவத்தின் அடையாளமல்ல. பல்லின மக்களின் அரசியல், நிர்வாக உரித்துக்களை ஏற்றுக்கொள்ளும் அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கி நடை முறைப் படுத்து வதிலேயே அதன் சிறப்பும், பெருமையும் உள்ளது. 70வது ஆண்டில் மீண்டும் ஒரு அரசியலமைப்பு உருவாக்க முயற்சியில் நாடாளுமன்றம் இறங்கியுள்ளது. இந்த நடவடிக்கை, நாடாளு மன்றத்தின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளியையா அல்லது ஒரு நட்சத்திரத்தையை அணிவிக்கப் போகிறது?

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

## அக்கம் பக்கம்

நந்தனார்

### கொழும்பில் ரவியா... மனோவா?

அமைச்சர் மனோ கணேசன் அண்மையில் "ஐக்கிய தேசியக்கட்சியுடன் உரிய புரிந்துணர்வு இல்லையென்றால் தனிவழி செல்வோம்" என சொல்லியிருந்தார். உள்ளூராட்சி தேர்தல் தொகுதி பங்கீட்டு சச்சரவின் பின்னர்தான் மனோ கணேசனின் இந்த கருத்து வெளியாகியுள்ளது. தொகுதி பங்கீடு என்றாலே சர்ச்சைதான். இந்த சர்ச்சையில் என்ன நடந்ததென தேடினால்ஞ் அங்கும் ரவி கருணாநாயக்கதான் வந்து நிற்கிறார்!

ஜனநாயக மக்கள் முன்னணி எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளது. இருதரப்பிற்கு மிடையில் ஆசனப்பங்கீடு தொடர்பான பேச்சுக்கள் நடந்து வருகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவியில் இருந்து அண்மையில் விலகினார். வரும் உள்ளூராட்சி தேர்தலை தனது செல்வாக்கை மீள நிலைநாட்டும் வாய்ப்பாக்க விரும்புகிறார். கொழும்பில் தமக்கு நெருக்கமான இளைஞர்களை களமிறக்கி வெற்றிபெற செய்வதன் மூலம், தனது செல்வாக்கை மீள நிலைநாட்டலாமென நினைக்கிறார். கொழும்பின் உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர் நியமனம் கிட்டத்தட்ட ரவி கருணாநாயக்கவின் முடிவு என்ற நிலைக்கு வந்து விட்டது.

ரவி கருணாநாயக்கவின் நடவடிக்கைகள் மனோ கணேசன் மற்றும் மத்திய கொழும்பில் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரின் நடவடிக்கைகளுடன் முட்டுப்பட ஆரம்பித்துள்ளது. மனோ கணேசன் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலில் கணிசமான வெட்டுக்கள் ரவியினால் நடத்தப்பட்டு விட்டது. இதனால் கோபமடைந்த மனோ, தனது வேட்பாளர்களில் மாற்றம் செய்ய அனுமதிக்க முடியாதென கூறியுள்ளார். தமது கட்சியின் செல்வாக்குள்ள இடங்களில் வேறு தலையீடுகள் தேவையில்லையென்பதே மனோவின் நிலைப்பாடு. இதனால் ரவி கருணாநாயக்கவிற்கும் மனோ கணேசனிற்குமிடையில் உரசல் போக்கு நிலவுவதாக கூறப்படுகிறது.

ரவியின் முயற்சிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தடையாக இருக்கவில்லை. ரவி தன்னை பலப்படுத்த ஒரு வாய்ப்பு வழங்கலாமென்பதுதான் பிரதமரின் நிலைப்பாடும். ஜனநாயக மக்கள் முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் கணிசமான மாற்றம் செய்வதுதான் ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடு என்றால், தனித்து போட்டியிட்டு விட்டு தேர்தலின் பின்னர் ஐ.தே.கவுடன் கூட்டு வைக்கலாமென ஜனநாயக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது. ●

### இராமநாதபுரத்தில் விஜய் பட லொஜிக்

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் வைரவிழா நிறைய சர்ச்சைகளுடன் நடந்து முடிந்திருக்கிறது. ஒரு பாடசாலையை அரசியல் மேடையாக்கி, அசிங்க அரசியல் செய்து, பாடசாலையின் பெயருக்கும் களங்கம் விளைவித்ததில் முடிந்திருக்கிறது இந்த வைரவிழா. இது பாடசாலைகளை முன்னிறுத்தி நடப்பது நல்லதல்ல. கல்விப்புலத்தில் அரசியலின் நச்சுநீர் சுவர்ப்பதை நிறுத்த வேண்டிய பொறுப்பு கல்விச் சமூகத்திற்கு உண்டு. ஆனால் பொறுப்பான பதவிகளில் உள்ள பலருக்கு அந்த பொறுப்புணர்வு இல்லையென்பதே கவலை.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய சர்ச்சையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பலவிதமான கருத்துக்களை வெளியிடுகிறார்கள். பாடசாலை சமூகம் சொல்கிறது ஏற்கனவே திட்டமிட்ட நிகழ்வை நினைத்தபடி இடைநிறுத்த முடியாது. கண்டபடி யாரும் தலையிட்டால் அதையெல்லாம் கவனத்தில் கொள்ளமாட்டோம். நாம் செய்வதைதான் செய்வோம் என. சிறிதரன் தரப்பு சொல்கிறது நான் அந்த பாடசாலையின் பழைய மாணவன். என்னை அழைத்தார்கள். போய்வந்தேன் என. கல்வியமைச்சர் தரப்பு சொல்கிறது பாடசாலை சமூகத்திலிருந்து பல முறைப்பாடுகள் வந்தன. அதனால் நிகழ்வை இடைநிறுத்தி பொருத்தமான நாளில் மீள நடத்துங்கள் என்றுதான் சொன்னோம் என.

இப்படி பலரும் பலவிதமான வியாக்கியானம் செய்தாலும் உண்மை எது தெரியுமா? கிளிநொச்சியை தனது கோட்டையாக சிறிதரன் நினைக்கிறார். அதற்குள் யாரும் வாலாட்ட முடியாது. இம்முறை வாலாட்ட நினைப்பது ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐ சேர்ந்த கல்வியமைச்சர் சர்வேஸ்வரன். சிறிதரனிற்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கும் இப்பொழுது முன்ஜென்ம பகை. (ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் ஊடாகத்தான் சிறிதரன் பாராளுமன்ற உறுப்பினர் ஆகினார் என்பதை அவரும் மறந்துவிட்டார். நாமும் மறந்து விடுவோம்). இந்த அரசியல் பிரச்சனைதான் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் எதிரொலித்துள்ளது.

இராமநாதபுரம் மகாவித்தியாலய சர்ச்சைக்கு சிறிதுகாலம் முன்னர் வட்டக்கச்சி மத்திய கல்லூரியிலும் ஒரு சர்ச்சை நடந்தது. மாகாண நிர்வாகத்தை புறமொதுக்கி கல்லூரி வைரவிழா நடத்தப்பட்டிருந்தது. மாகாண முதலமைச்சர், கல்வியமைச்சர் யாரும் அழைக்கப்படவில்லை. கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்தான் இதன் பின்னணியில் இருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் அப்பொழுதே எழத்தொடங்கி விட்டன. இம்முறை இராமநாதபுரத்தில் சர்ச்சை வெடித்து, பல விடயங்கள் வெளித்தெரிய வந்ததால் பல முகங்கள் அம்பலப்பட்டு விட்டன.

தற்போதைய இராமநாதபுரம் மகாவித்தியாலய அதிபரும் வடக்கு கல்வியமைச்சரும் ஒன்றாக கல்விகற்றவர்கள். முன்னைய கல்வியமைச்சர் குருகுலராஜா தனக்கு வேண்டப்பட்ட ஒருவரை வட்டக்கச்சி பாடசாலையொன்றில் நியமிப்பதற்காக இவரை இடமாற்றினார் என்ற விமர்சனம் இருக்கிறது. இதனால் புதிய கல்வியமைச்சர் பதவியேற்றதும் அவருடன் நெருக்கமாகியிருக்கிறார். தன்னை பிரதமவிருந்திராக அழைக்குமாறு பா.உ சிறிதரன் நெருக்குதல் தருவதாகவும், ஆனால் அதற்கு பாடசாலை சமூகத்திற்குள்ளேயே முழுமையான ஆதரவு இல்லையென கல்வியமைச்சரிடம் அதிபர் கூறியதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. உள்ளூர் அழுத்தம், நிதியுதவி அறிவிப்புக்கள் மூலம் கல்வியமைச்சரை நிகழ்விற்கு அழைப்பதில் இருந்து விலக்கியதாக ஒரு தரப்பு குற்றம்சாட்டுகிறது.

கல்வியமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொண்ட பாடசாலை அதிபர் 25ம் திகதி நிகழ்ச்சியில் பிரதம விருந்திரான கலந்துகொள்ளுமாறு கேட்டிருக்கிறார். அந்த சமயத்தில் தனக்கு வேறு நிகழ்ச்சிகள் இருப்பதாக கல்வியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதன்பின்னரே மேற்படி நிகழ்வுகள் நடந்திருக்கின்றன.

பிரதம விருந்தினராக அதிதிகளை அழைக்கும்போது அவர்களுடன் முன்னரே பேசி, பொருத்தமான திகதியை நிர்ணயிப்பதுதான் வழக்கம். இராமநாதபுரத்தில் அது நடக்கவில்லை. மாகாண கல்வியமைச்சரின் அறிவித்தலையே பாடசாலையொன்று புறந்தள்ளி நடந்துவிட்டு, அதன்பின்னால் அரசியல் பின்புலம் இல்லையென்பது விஜய் படங்களில் வரும் லொஜிக்குகள் போன்றது.

தமது அரசியல் போட்டிகளை பாடசாலைகளில் வைத்து கொள்வதை மக்கள் பிரதிநிதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அண்மையில் வலிகாமம் வடக்கில் பெண்கள் அமைப்பு நிகழ்வொன்றிற்கு மாகாணசபை உறுப்பினரொருவர் அழைக்கப்பட்டார். நிகழ்வு முடிந்ததும் பெண்கள் அமைப்பு முக்கியஸ்தர்களை தொடர்புகொண்ட அந்த பகுதி தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பியின் உதவியாளர், இனி தம்மிடம் உதவிக்கு வர வேண்டாமென கடும்தொனியில் கூறியிருக்கிறார். தென்னிலங்கை பிரதான கட்சிகளும், வடக்கிலுள்ள அவர்களின் வால்களும்தான் இப்படி நடந்து இதுவரை பார்த்தோம். இனி நம்மவர்களின் திருவிளையாடல்களையும் பார்ப்போம். ●

## காதல் திருமணமா? நிச்சயதார்த்த திருமணமா?

# நமது பெண்களின் திருமண தெரிவுகள் என்ன?

## வெளிநாட்டு மாப்பிள்ளைதான் வேண்டுமா?... பெண்களின் ஆழ் மன விருப்பம் என்ன?

### புதிய முடிவுகளை தரும் கருத்து கணிப்பு!

தீபம் குழு

இன்றைய யுவதிகள் அனேகர் வெளிநாட்டு மாப்பிள்ளைகளைதான் விரும்புகிறார்கள்,வெளிநாட்டு மோகத்தால் சடுதியான சமூக மாற்றங்கள் ஏற்பட்டு கொண்டிருக்கிறது...

அரச உத்தியோகத்தர்கள், சுயதொழில் செய்பவர்களின் பாடு திண்டாட்டமாக உள்ளது...

இன்றைய யுவதிகளின் திருமண தேர்வுகள் தொடர்பாக இப்படி பலவித மான அபிப்பிராயங்கள் நமது சமூகத்தில் உலாவி வருகின்றன. இவையெல்லாம் உண்மையா?

நமது யுவதிகளின் திருமண தேர்வு எப்படியிருக்கிறது?

இதை தெளிவாக அறிய ஒரு பரந்துபட்ட கருத்து கணிப்பு நடத்தினோம். வடக்கு கிழக்கில் உள்ள 20 வயது தொடக்கம் 30 வயதான ஆயிரம் யுவதிகளிடம் இந்த கருத்து கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. தீபத்தின் அலுவக பத்திரிகையாளர்கள், பிரதேச பயிற்சி பத்திரிகையாளர்கள் இணைந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் இந்த கருத்து கணிப்பில் ஈடுபட்டனர்.

கருத்துக்கணிப்பிற்குரிய வினாக்கள் அச்சிடப்பட்ட தாளை ஒவ்வொரு யுவதியிடமும் கொடுத்து அவர்களை வைத்தே டிக் செய்ய வைத்தோம்.

உயர்கல்வி கற்கும், அரசதனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பெண் களிடம் இந்த கருத்து கணிப்பை மேற்கொண்டோம். பல்வேறு அரச, தனியார் நிறுவனங்கள், அழகுகலை, நடிப்பு, சிறுவணிகம், தொழில்நுட்பதுறை, விற்பனை பிரதிநிதிகள் தொழில்செய் பவர்கள் பிரிவில் உள்ளடங்கியிருந்தனர். பல்கலைகழகம், வேறு அரச மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்கள், தொழில், மொழி கற்கை நிறுவனங்களில் பயில்பவர்கள் உயர்கல்வி பிரிவில் உள்ளடங்கியிருந்தனர். கடந்த இரண்டு மாதகாலமாக நடத்தப்பட்ட துல்லியமான கருத்து கணிப்பிது.



### பெண்களின் இதயதுடிப்பு

ஆயிரம் பெண்களிடம் நடத்திய கருத்து கணிப்பில் 480 பெண்கள்தான் காதல் திருமணத்தை விரும்புகிறார்கள். 520 பெண்கள் நிச்சயதார்த்த திருமணத்தைதான் விரும்புகிறார்கள். நிச்சயதார்த்த திருமணத்தில் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்குமென பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் நிச்சயதார்த்த திருமணத்தை விரும்பும் பெண்களில் 63 வீதமானவர்கள் இரண்டு வருடங்களின் முன் காதல் திருமணத்தை விரும்பியவர்களாம். இரண்டு வருட முதிர்ச்சி அவர்களை பேச்சு திருமணத்தை நோக்கி நகர்த்தி விட்டதாம்!

காதல் திருமணத்தை விரும்புவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் உயர்கல்வி கற்பவர்கள். இதிலும் 25 வயதிற்குட்பட்டவர்கள்தான் பெரும் பாலானவர்கள். காதல் திருமணத்தை விரும்பும் 28 வயது வரையான உயர்கல்வி கற்பவர்கள் 12 வீதத்தின் மட்டுமே.

### பெண்களின் தெரிவுகள்


காதல் திருமணத்தை விரும்பும் 480 யுவதிகளில் 200 பெண்கள் (41.66%) மற்றவர்களிற்கு உதவுபவர்களாக இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். இதில் 140 பேர் உயர்கல்வி கற்கும் மாணவிகள். 60 பேர் தொழில் புரிபவர்கள். இவர்கள் அனைவரும் 26 வயதிற்குட்பட்டவர்கள். தனியார்துறையில்தான் அதிகமாக வேலை செய்பவர்கள். காதலை தேர்வு செய்த பல்கலைகழகம், வேறு உயர்கல்வி நிறுவனங்களில் கல்விகற்கும் யுவதிகளில் அனேகர் காதல் குறித்த உணர்வுபூர்வமான பார்வையையே கொண்டிருக்கிறார்கள். காதலன் நேர்மை யாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டுமென அழுத்திக் கூறுகிறார்கள். காதலிற்கு வேறெந்த தகுதியை விடவும் இதுதான் முக்கியமென்பது அவர்களின் அபிப்பிராயம். பிறந்தநாள், காதலர் தினம் உள்ளிட்ட விசேடதினங்களில் காதலனிடம் இருந்து விசேட பரிசை எதிர்பார்க்கிறார்கள். பரிசளிக்காத காதலன் பற்றி கேட்டால் பொதுவாக வரும் பதில் “வேஸ்ற்”!

மற்றவர்களிற்கு உதவுபவர்தான் உண்மையான ஹீரோ என்று இவர்கள் கருதுகிறார்கள்.


இதற்கடுத்ததாக காதலன் அரச உத்தியோகத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் உள்ளனர். 60 யுவதிகளின் (12.5%) விருப்பம் இது. இவர்களில் 40 பேர் தொழில் புரிபவர்கள். வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள இன்றைய காலத்தில் இருவரும் தொழில் செய்பவர்களாக இருக்க வேண்டும், அப்படியிருந்தால்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...


### கெட்டி மேளம்... கெட்டி மேளம்!




# காதல் தேர்வுகள்




### காதலில் விழும் பெண்கள்




### உயர்கல்வி கற்கும் பெண்களின் திருமண தேர்வுகள்




வெளிநாட்டிற்கெல்லாம் செல்ல வேண்டியதில்லை, இங்கேயே சந்தோசமாக இருக்கலாமென நினைக்கிறார்கள்.

காதலன் அரசதொழில் செய்பவராக இருக்க வேண்டுமென விரும்பும் யுவதிகளில் ஏனைய 20 பேரும் உயர்கல்வி கற்பவர்கள். காதலன் அரசதொழில் செய்பவராக இருப்பதற்கு இவர்களிடம் இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று பாதுகாப்பான வாழ்க்கை. இரண்டு எப்பொழுதும் பிரிவில்லாமல் வாழலாமாம்!

காதலன் ஊரில் ஹீரோ அல்ல ஆனால் ஆலயம், நூலகம், பொது வேலைகளில் முன்னிற்பவராக இருப்பவர் என்ற தெரிவை விரும்பும் யுவதிகளின் எண்ணிக்கையும் 60தான். இவர்கள் 12.5% அளவானவர்கள். இந்த தெரிவை செய்தவர்களில் 40 பேர் ஆசிரியர்கள் என்பது ஆச்சரியமானது. ஏனைய 20 பேரும் உயர்கல்வி கற்கும் மாணவிகள். இந்த தெரிவை செய்த அனைவரும் 21 தொடக்கம் 25 வயதானவர்கள்.

பொதுவேலைகளில் ஈடுபடுபவர்கள் தான் பொறுப்பான ஆண்களாக இருப்பார்கள் என்று இவர்கள் கருதுகிறார்கள். ஊரில்உள்ள ஹீரோவை காதலிப்பதென்பது சினிமாவிற்குத்தான் பொருத்தம் வாழ்க்கைக்கு பொருத்தமில்லையென தெளிவாக பேசினார்கள் இவர்களில் பலர். ஹீரோ போன்ற ஆண்களை தேடி சினிமாத்தனமாக காதலித்தால் வாழ்க்கையும் பலபேர் பார்க்கும்படியாக நடுத்தெருவுக்கு வரலாம் என்றும் எச்சரித்தனர்.

ஆனால் இதே தொகையானவர்கள் ஹீரோக்கள்தான் நமது தெரிவென கூறியுள்ளனர். ஹீரோ ஊரில் நிறைய நண்பர்களுடன் உள்ளவர்களைதான் இவர்களிற்கு பிடிக்கும். தனியார்துறையில் தொழில்புரியும் 40 யுவதிகளும் உயர்கல்வி கற்கும் 20 யுவதிகளும் ஹீரோக்களை விரும்புகிறார்கள்.

### வசதி முக்கியம்

4.79% யுவதிகளின் தெரிவு காதலர் வசதியானவராக இருக்க வேண்டுமென்பது. அழகு குறித்த கவலை இவர்களிற்கு கிடையாது. காதலர் அழகாக இருப்பதோ இல்லாமல் இருப்பதே தமக்கு ஒரு பொருட்டல்ல. காதலர் வசதியானவராக இருக்க வேண்டுமென்றது 23 பேர். இவர்கள் அனைவரும் தொழில் செய்கிறார்கள். 24 வயது தொடக்கம் 27 வயது வரையுள்ளவர்கள்.

அழகை முக்கியத்துவப்படுத்தி காதல் செய்வது பருவக்கவர்ச்சி வாழ்க்கைக்கு எது தேவையென்பதை புரிந்து முடிவெடுப்பதே சிறந்தது என்கிறார்கள். காதலர் வசதியானவராக இருந்தால் போதும் அவர் என்ன செய்கிறார் என்பதை பற்றி கவலையில்லையென்பதே பெரும்பாலானவர்களின் நிலைப்பாடு.

20 யுவதிகளின் தெரிவு காதலர்கள் சுயதொழில் செய்பவர்களாக இருக்க வேண்டுமென்பது. இவர்கள் 4.16% அளவினர். அதாவது 20 பேர். இவர்கள் அனைவரும் உயர்கல்வி கற்கும் 24 வயதிற்கு உட்பட்டவர்கள். சொந்தக்காலில் நிற்பதே காதலன் குறித்த எதிர்கால கணக்கிற்கு உதவும் என்கிறார்கள்.

காதலர் ஒரு விளையாட்டு வீரராக இருக்க வேண்டுமென 4.16% யுவதிகள் விரும்புகிறார்கள். அவர்களின் எண்ணிக்கை 20. இவர்கள் அனைவரும் உயர்கல்வி கற்கும் மாணவிகள். ஆண்கள் என்றால் உடல்உறுதி அவசியம் விளையாட்டுகள் மூலமே அதை அறிந்து கொள்ளலாம் என்கிறார்கள். விளையாட்டு வீரர்கள் சமூகத்தில் தனித்துவமாக தெரிவார்கள் அவர்களை இணையாக்கி கொள்வது பெருமைக்குரியதென்றும் இவர்கள் கருதுகிறார்கள். இந்த தெரிவை மேற்கொண்டவர்கள் அனைவருமே 25 வயதிற்குட்பட்டவர்கள். காதலனின் தோற்றம், தொழில், பொருளாதார நிலைமை பற்றி இவர்கள் சிந்திக்கவில்லை.

கருத்து கணிப்பில் காதலை தேர்வு செய்ததில் மேலும் 19 யுவதிகளின் தெரிவு காதலன் சினிமா ஹீரோ போன்ற தோற்றமுடையவராக இருக்க வேண்டுமென்பது. இது 3.95% காதலனின்



தோற்றம் அவசியமென இவர்கள் கருதுகிறார்கள். காதலின் பெருமையையும் பொதுஇடங்களில் செல்லும்போது கெளரவத்தையும் காதலனின் தோற்றம் உருவாக்குமென இவர்கள் கூறுகிறார்கள். சினிமா காதலர்களை விரும்பும் யுவதிகளில் மூவர் மட்டுமே உயர்கல்வி கற்கிறார்கள். ஒருவர் பல்கலைகழகம். இருவர் தனியார் கணக்கியல் மாணவிகள். மிகுதி அனைவரும் தனியார்துறையில் தொழில் செய்பவர்கள். ஒருவரின் தோற்றத்தை கொண்டு அவரை எடைபோடலாமா? அவர் உங்களிற்கு பொருத்தமான நம்பிக்கையானவராக இருப்பாரா? என்று கேட்டபோது 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என கோரஸ் பாடுகிறார்கள் இந்த யுவதிகள்.

நமது கேள்விக்கொத்தில் இடம்பெறாத ஒரு விடயம் அனேக பெண்களால் குறிப்பிடப்பட்டிருந்தது. காதலன் தமக்கு உண்மையாக இருக்க வேண்டுமென்பதே அது. கேள்விக்கொத்தில் இடம்பெற்றிருந்த பல தெரிவுகளை டிக் செய்த பெண்கள் காதலன் உண்மையாக இருக்க வேண்டும் என்றார்கள். காதலின் அடிப்படையே உண்மைதான் என்கிறார்கள். 18 (3.75%) பெண்கள் நமது கேள்விக்கொத்தில் இடம்பெறாதபோதும் உண்மையாக இருப்பவர்களை மட்டுமே காதலிப்போம் என குறிப்பிட்டிருந்தார்கள். உண்மையாக இருந்தால் மிகுதி அனைத்தும் சுபமாக முடியுமாம்!

நமது கருத்து கணிப்பில் 660 உயர்கல்வி கற்கும் யுவதிகளை சந்தித்திருந்தோம். இவர்களிடம் காதல் திருமணத்திற்கே அதிகளவில் ஆர்வம் உள்ளது. நிச்சயதார்த்த திருமணம் கட்டுப்பெட்டித்தனமானது என பலர் கருதுகிறார்கள். பெற்றோர் பார்த்து திருமணம் செய்வதை விட, நமக்கு பொருத்தமானவரை நாமே தேர்வுசெய்வதே சிறந்தது என அவர்கள் நினைக்கிறார்கள்.

உண்மையாக இருக்கும், மற்றவர்களிற்கு உதவும், சுயதொழில் செய்யும், விளையாட்டு வீரர்களாக இருப்பவர்களையே அதிகம் விரும்புகிறார்கள். உயர்கல்வி கற்பவர்களில் அனேகர் அரச உத்தியோகத்தர்களை விரும்பவில்லை.

காதல் தெரிவை மேற்கொண்ட தொழில் செய்யும் யுவதிகள் அனேகர் அரச தொழில் காதலனை தேர்வுசெய்தார்கள். ஹீரோவாக இருக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் ஊரில் பொதுவேலைகளில் முன்னிற்பவர், அழகு முக்கியமில்லாவிட்டாலும் வசதியானவராக இருக்கும் காதலர்களையே இவர்கள் தேர்வு செய்தனர். இந்தவகையானவர்களின் பெரும்பாலான அபிப்பிராயம் மற்றவர்களிற்கு உதவி செய்ய வேண்டிய அவசியமில்லை, நமது குடும்பத்தை நன்றாக பார்த்தாலே போதும்!


### நிச்சயதார்த்தத்தை விரும்பும் பெண்கள்

நாம் சந்தித்ததில் 520 பெண்கள் நிச்சயதார்த்த திருமணத்தை விரும்புகிறார்கள். பெண்களின் வாழ்வில் 'ரிஸ்க்' எடுக்க முடியாது பெற்றோரின் பங்களிப்புடனான நிச்சயதார்த்த திருமணமே வாழ்க்கையை பாதுகாக்கும் எதிர்காலத்தில் சிரமம் இருக்காதென இவர்கள் நினைக்கிறார்கள். மொத்தமாக நிச்சயதார்த்தத்தை விரும்பியவர்கள் 520 யுவதிகள். இதில் 400 பேர் உயர்கல்வி கற்பவர்கள். 120 பேர் தொழில்புரிபவர்கள்.


நிச்சயதார்த்தத்தை விரும்பும் யுவதிகளில் 11.53 வீதமானவர்கள் கணவன் வெளிநாட்டில் இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். இவர்களின் எண்ணிக்கை 60. கணவனின் பின்னணி முக்கியமில்லையென 40 யுவதிகள் கருதுகிறார்கள். கணவன் மது அருந்துபவர், முன்னர் காதல் தொடர்புகள் இருந்தது, தோற்றம் போன்ற விடயங்களை கவனிக்கப் போதில்லை என்கிறார்கள். உள்ளூரில் சமூகத்தின் பார்வையில்தான் இவை பிரச்சனைக்குரிய விடயங்கள், தொலைவில் வாழும்போது இவற்றை கணக்கெடுக்க தேவையில்லையென கருதுகிறார்கள். 20 யுவதிகள் இதற்கு


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

## பெற்றோர் சொல்மிக்க மந்திரமில்லாத பெண்கள்




### இப்படித்தான் மாப்பிள்ளை வேண்டும்





மாறான கருத்தை கொண்டுள்ளனர். பின்னணி மிக முக்கியம், வெளிநாட்டு மாப்பிள்ளையாயினும் பின்னணியை ஆராய்ந்து அனைத்துவிதத்திலும் பொருத்த மானவரைத்தான் திருமணம் செய்ய வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். இதில் இன்னொரு சுவாரஸ்யம் வெளிநாட்டுமாப்பிள்ளையைதேர்வுசெய்த அனைவருமே உயர்கல்வி கற்பவர்கள்!

இதேயளவான 11.53% யுவதிகள் (60 பேர்) தமது கணவன் அரச தொழிலில் இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். தம்மாலும் உழைக்க முடியுமென்பதால், கணவன் வெளிநாட்டுக்கு சென்று உழைக்க வேண்டிய அவசியமில்லை, இருவரின் உழைப்புமே போதுமென அவர்கள் கருதுகிறார்கள். இதில் 40 யுவதிகள் உயர்கல்வி கற்பவர்கள். 20 பேர் தொழில்புரிபவர்கள்.

தமது துணை அழகானவராக இருக்க வேண்டுமென 40 யுவதிகள் (7.69%) விரும்புகிறார்கள். இவர்களில் அரை வாசிப்பேர் (20 பேர்) அழகுதான் முக்கியம், துணையின் வசதி முக்கிய மில்லை என்கிறார்கள். மிகுதி 20 பேரும் துணை அழகாகவும் இருக்க வேண்டும், வசதியாகவும் இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். துணை அழகானவராக இருக்கு வேண்டுமென 40 பேரும் உயர்கல்வி கற்பவர்களே.

சீதனம் தொடர்பான பெண்களின் பார்வை அதிர்ச்சியளிக்கும் விதமாக உள்ளதை இந்த கருத்து கணிப்பு காட்டியது. பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள பெண்கள் தவிர்ந்த ஏனைய பெண்கள் சீதனம் தொடர்பான விழிப்புணர்வை பெற்றவர்களாக தெரியவில்லை. சீதனம் சமூகத்தில் தவிர்க்க முடியாதது, தமது துணையை மகிழ்ச்சிப்படுத்தி வாழ்க்கையை சந்தோசமாக வைத்திருக்க அது தவிர்க்க முடியாதது என்றுதான் பலரும் தெரிவித்தனர். சீதனத்தை எதிர்பார்க்காத கணவன் என்ற தெரிவை 7.69% பெண்கள்தான் டிக் செய்தார்கள். இவர்களின் எண்ணிக்கை 40.

தமது கணவன் குடும்ப பொறுப்புக்கள் அற்றவராக இருக்க வேண்டுமென 7.69% யுவதிகள் விரும்புகிறார்கள். இவர்கள் 40 பேர். திருமணத்தின் பின்னரும் கணவன் தனது பெற்றோர், சகோதரர்களின் குடும்பங்களை கவனிப்பது தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்துமென கூறுகிறார்கள். மாதாந்த சம்பளம் பெறுபவர்களிற்கு அந்த சுமை அதிகமானது, அதையும் சுமக்க முயன்றால் குடும்பத்திற்குள் சச்சரவுகள் ஏற்படும், அதனால் குடும்ப பொறுப் பற்றவர்களைத்தான் விரும்புகிறோம் என்கிறார்கள் இவர்கள்.


தமது துணை வசதியானவராக இருக்க வேண்டுமென 3.84% யுவதிகள் விரும்பு கிறார்கள். துணையின் மற்றெந்த பின்னணி யையும் கவனிக்கப் போவதில்லை, அவர் வசதியானவராக இருந்தால் போது மென நினைக்கிறார். இன்றைய உலகத்தில் பணம்தான் அனைத்தையும் தீர்மானிக் கிறது, கணவனின் வசதிதான் தமது அந்தஸ்தை தீர்மானிக்குமென அவர்கள் நினைக்கிறார்கள்.

தமது கணவர் நல்லவராகவும், குடும்ப பொறுப்பு மிக்கவராகவும் இருக்க வேண்டுமென்பதே நமது யுவதிகள் பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பு. 46.15% யுவதிகளின் தெரிவு இது. அதாவது 240 பேர். நல்லவராகவும், தமது குடும்பத்தை பொறுப்பாக பார்த்து கொள்பவராகவும் இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். அவர் வெளிநாட்டிலோ, உள்நாட்டிலோ இருக்கலாம், அழகற்றவராகவும் இருக்க லாம், ஆனால் மேலோ நல்லவர் குடும்பத்தை பொறுப்பாக பார்ப்பவராக இருக்க வேண்டுமென நினைக்கிறார்கள். இந்த யுவதிகளில் 180 பேர் உயர்கல்வி கற்பவர்கள். 60 பேர் தொழில் புரிபவர்கள். வசதியானவரா, வெளிநாட்டில் இருப்பவரா என தனித்தனி தேர்வுகளை தேடாமல், குடும்ப பொறுப்புமிக்கவர் என்ற தனித் தேர்வே போதும், அப்படியானவர் குடும்பத்தை காப்பாற்றிக் கொண்டேயிருப்பார் என விபரமாக பேசுகிறார்கள் இந்த பெண்கள்.

3.84% யுவதிகளின் தேர்வு, கணவன் சுயதொழில் செய்பவராக இருக்க வேண்டு மென்பது. இவர்கள் 20 பேர். இவர்கள் அனைவரும் உயர்கல்வி கற்பவர்கள்.

நிச்சயதார்த்த திருமணத்தை விரும்பு பவர்களில் அனேகர் உயர்கல்வி கற்பவர்கள்தான். இவர்கள் கணவன் நல்லவராக இருக்க வேண்டும், வெளி நாட்டில் இருக்க வேண்டும், அழகான வராக... வசதியானவராக இருக்க வேண்டுமென அதிகம் விரும்புகிறார்கள்.

## அரச உத்தியோகத்தர்களின் திருமண தெரிவு என்ன?




தொழில் புரியும் யுவதிகள் தமது கணவர் நல்லவராக இருக்க வேண்டும், அரசாங்க தொழில் புரிபவராக இருக்க வேண்டுமென அதிகம் விரும்புகிறார்கள். காதல் திருமணமோ, நிச்சயதார்த்த திருமணமோ, அரச உத்தியோகத்தர்களிற்கு ஓரளவு கிராக்கி உள்ளது.

வசதியான இளைஞர்களை திருமணத் திற்கு எதிர்பார்க்கும் தரவுகளை ஒப்பிட்டு நோக்கும் போது காதல் திருமணத்தை விரும்பும் யுவதிகளே அதிகம் (4.79%) வசதியான இளைஞர்களை எதிர்பார்க்கின்றனர். அத்துடன் அவர்கள் அவ் இளைஞர்களின் அழகிற்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதனை இரண்டாம் பட்சமாகவே பார்க்கின்றனர் என்பதும் தெளிவாகின்றது. ஒப்பீட்டளவில் குறைவாக நிச்சயதார்த்த திருமணத்திற்கு (3.84%) வசதியான இளைஞர்களை எதிர்பார்க்கும் யுவதிகள் அனைவரும் உயர்கல்வி கற்கும் மாணவிகளாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதேநேரம் அவர்கள் அனைவரும் அவ் இளைஞர்கள் அழகாக இருக்க வேண்டும் என்பதற்கும் முக்கியம் கொடுக்கின்றனர்.

காதல் திருமணத்தை விரும்பும் யுவதிகளே அதிகம் (4.16%) சுயதொழில் செய்யும் இளைஞர்களை எதிர்பார்க் கின்றனர். நிச்சியதார்த்த திருமணத்தை விரும்பும் யுவதிகளில் (3.84%) பேரே சுயதொழில் செய்யும் இளைஞர்களை எதிர்பார்க்கின்றனர். இருந்தாலும் இரு திருமணங்களிலும் உயர்கல்வி கற்கும் மாணவிகளே இவ்வாறு சுயதொழில் செய்யும் இளைஞர்களை எதிர்பார்ப்பது ஆச்சரியத்தை தருகின்றது.

காதல் திருமணத்தை எதிர்பார்க்கும் யுவதிகளில் எவரும் அழகான இளைஞர் களின் அழகிற்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம் நிச்சயதார்த்த திருமணத்தை விரும்பும் யுவதிகளில் 7.69 சதவிகிதமானோர் அழகிற்கு முக்கியம் கொடுக்கின்றனர். அத்துடன் அவர்களில் அரைவாசிப்பேர் அழகுடன் வசதியையும் பார்க்கின்றனர். அரைவாசிப்பேர் அழகை மட்டும் பார்க்கின்றனர்.



## அடுத்த இதழில் இருந்து...

கிரேக்கதேசத்தைச் சேர்ந்த ரோடோஸ் தீவு மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதியிலிருக்கும் பன்னிரு தீவுகள் (Dodecanese Islands) எனக் குறிப்பிடப்படும் தீவுகள் கும்பலின் மிகப்பெரிய தீவாகும். சுமார் 1,400 சதுர கி.மீற்றர்கள் அளவான ரோடோஸ் தீவு, கிரீஸ் நாட்டின் மட்டுமல்ல ஐரோப்பாவின் மிகப் பெரிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாக இருக்கிறது. சரித்திரம், கலாச்சாரம், புவியியல் அமைப்பு, சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் அழகான கடற்கரைகள் கொண்ட ரோடோஸை நான் கடந்த வருடத்தில் இரண்டு வாரங்கள் பரிச்சயம் செய்துகொண்டேன். அதை உங்களுடன் பகிர்ந்துகொள்ள எனது பிரயாணத் தொடருக்கு உங்களை அழைக்கிறேன்!

# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



 கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்

**மிருணாளினி (வயது 23)
கொக்குவில்**

***கேள்வி:*** ***நான் பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருக்கின்றேன். எனது சக மாணவனொருவன் என்னுடன் மிக நன்றாக பழகினான். சகோதரனை விட அதிகமாக எனக்கு உதவினான். ஆவனை நம்பி நான் பல்கலைக்கழகத்தில் ஆபத்தின்றி நிற்கலாம் என என் பெற்றோரே நினைக்கிறார்கள். அவ்வளவு உயிர் நண்பன். திடீரென என்னை காதலிப்பதாக சொல்கிறான். எனக்கு என்ன செய்வதென்றே தெரியாமலிருக்கின்றது. நாங்கள் இருவரும் வேறுவேறு சாதி. அது கூட எனக்குப் பிரச்சனையில்லை. ஒரு நண்பனை, மனதுக்கு நெருக்கமாக இருந்தவனை, காதலனாக கற்பனை செய்ய முடியாமல் உள்ளது. நான் என்ன செய்வது?***

***பதில்:*** *அன்புமகளே! கடந்த பல மாதங்களுக்குமுன்னரும் ஒரு சகோதரி இதே போன்ற ஒரு பிரச்சனை பற்றி "மனமே நலமா" பகுதியில் பிரஸ்தாபித்திருந்தார்.; நீங்கள் அந்த தீபம் இதழை வாசித்திருந்தீர்களோ தெரியாது. உண்மையில் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலங்களில் இவ்வாறான உயிர் நண்பர்கள் காதலர்களாக மாற வரம் கேட்கும் போது எமது பெண்கள் இவ்விடயத்தைப் பொதுவாக எதிர்மறையாகவும், கீழ்த்தரமாகவுமே பார்க்கிறார்கள். அதற்குரிய உண்மையான காரணம் பாலியல் சுகாதாரம் தொடர்பாக எமது மக்கள் கொண்டுள்ள எதிர்மறையான மனப்பாங்கே. அதாவது நண்பனுக்கும், காதலனுக்கும் உள்ள உறவு வேறுபாடு என்ன? நண்பனானவன் நண்பியுடன் உடலியல்ரீதியாக பழக முடியாது. காதலன் என்பவன் அதே பெண்ணுடன் (காதலி) உடலியல் ரீதியாகவும் பழகுவதற்கு அனுமதி உண்டு. ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால், ஒரு பெண்ணுடன் ஆண் உடலியல் ரீதியாக பழகுவதென்பது பாலியல் சுகாதாரம் எனும் பகுதியினுள் வருகின்றது.*

*எமது சமூகத்தில் இனப்பெருக்கம் மற்றும் பாலியல் சுகாதாரம் (sexual and reproductive health) என்பது தொடர்பான மக்களின் மனப்பாங்கு மிகவும் ஆரோக்கியமற்ற நிலையிலேயே உள்ளது. மேற்கத்தைய சமூகங்களில் இந்த இனப்பெருக்கம் பாலியல் சுகாதாரம் தொடர்பாக மக்கள் கொண்டுள்ள புரிதலும், மனப்பாங்கும் மானிட வாழ்வின் உன்னதமான, உயர்வான அல்லது அதிகமான வெளியீடுகளை (Outcomes) மேற்கொள்கிறார்கள். ஒப்பீட்டளவில் மேற்கத்தைய இளம் சந்ததியினர் ளுசுர் SRH (Sexual Reproductive Health) பிரச்சினைகளால் வாழ்க்கையின் முன்னோக்கிய ஓட்டங்களுக்கு தடைபோடுவதில்லை. அது ஒருபுறம் நகர வாழ்க்கையின் இலக்கு நோக்கிய ஓட்டம் இன்னொரு புறம் தன்பாட்டுக்கு நகர்ந்து செல்லும்.*

*சரி, நான் (உமது) விடயத்திற்கு வருகிறேன். நண்பனாக இருந்தவன் காதலனாக மாறும்போது, மனது ஏற்க மறுப்பதற்கு பொதுவாக நான் மேலே கூறிய பாலியல் தொடர்பான மனப்பாங்கு ஒரு தடையாக இருக்கின்றது. அதாவது நண்பன் என்பவன் அன்பை மட்டும் வெளிப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றான். காதலனானவனிடம் அன்புடன் காமம் எனப்படுகின்ற பாலியல்சார் செயற்பாடுகளையும் அனுமதிக்கவேண்டிய சூழ்நிலையில் உயர்வான அன்புடன் பழகிய நண்பன் கீழ்த்தரமான பாலியல்சார் நடத்தைகளுடன் இணைப்பதற்கு மனம் இடம் தருவதில்லை. இதுதான் அடிப்படைப் பிரச்சினை. ஏனெனில் உண்மையில் பாரிய சமூகப்பிரச்சினையான சாதிவேறுபாடே உமக்குப் பிரச்சினை இல்லையென்று கூறியுள்ளபோது வேறு என்ன பிரச்சினையாக இருக்கலாம்?*

*அதைவிட ஒரு சகோதரனைவிட அன்பாக பழகினான், உதவி செய்தான் என்றெல்லாம் கூறியதன்மூலம் உமது மனத்தில் நீர் உண்மையில் அவனை ஒரு அண்ணனாக கூட கற்பனை செய்து வைத்திருக்கலாம். ஒரு அண்ணனாக பாவனை செய்து வளர்க்கப்பட்ட உறவை திடுதிப்பென காதலனாக மாற்றுவதென்பது கடினமான ஒரு விடயமே. ஆக உமது மனத்தில் அண்ணனாகவா நண்பனாகவா உருவகித்து வைத்துள்ளீர் என்பதே பிரச்சினை. அண்ணனெனின் தொடர்ந்து அண்ணனாகவே வைத்திரும். நண்பனெனின் நண்பனே காதலனாக மாறுவதில் தவறொன்றுமில்லையே. நண்பன் காதலனாவது உண்மையில் இரட்டிப்பு நன்மை தருவதாகும். காதல் வாழ்வு குடும்ப வாழ்வாக மாறிய பின்பும் அதே நட்பினை தொடர்ந்து பேணுங்கள். வாழ்வு மகிழ்வானதாக அமையும்.*

*நட்பு எனும் உறவுக்குகாதல் எனும் அந்தஸ்துகிடைப்பது (ஆயுள்) காப்புறுதிக்கு போனஸ் பணம் கிடைத்த மாதிரி. அந்த போனஸை பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக இருப்பதற்கு என்ன தடையிருக்கிறது பயம் வேண்டாம். ஜெயம் உமக்கே.*




**ரி.திவ்பதர்ஷன் (வயது 21),
எழுதுமட்டுவாள்**


***கேள்வி:*** ***நான் தனியார் கல்வி நிறுவனமொன்றில் கணக்கியல் படிக்கின்றேன். நான் கொஞ்சம் அடக்கமானவன். எனது நண்பர்கள் வகுப்பில் பெண் பிள்ளைகளுடன் பகிடிவிடுவார்கள். வீதிகளில் மோட்டார்சைக்கிளில் சாகசம் செய்வார்கள். வேறுகுழுவுடன் மோதலுக்கு போவார்கள். எனக்கு இதெல்லாம் சரிவரவில்லை. நான் இப்படி நடப்பதில்லை. இதனால் நண்பர்கள் என்னை "பொன்ஸ்" என நக்கல் அடிக்கிறார்கள். எனக்கு பயமாகஉள்ளது. என்னில் ஏதாவது பிரச்சனையிருக்குமா?***

***பதில்:*** *அன்புமகனே! உமக்கு உள்ள பிரச்சினையை பொதுவாக ஆளுமைக் குறைபாடு எனும் பிரிவினுள் அடக்கலாம். ஒரு பிள்ளை பிறந்து சமூகமயமாதல் என்பது முதலில் வீட்டில் தொடங்கி பின் முன்பள்ளி, பின்பள்ளி, ஆரம்பப்பாடசாலை, இரண்டாம் நிலைக்கல்லூரி, பல்கலைக்கழகம் என்று ஒருபுறமும் குடும்பம், உறவுகள், சமூகம் என்று இன்னொரு புறமாகவும் சமூகமயமாதல் என்பதன் மூலம் ஒருவனுடைய ஆளுமைப் பண்பு விருத்தியடைகிறது. நான் நினைக்கிறேன், உமது குழந்தைப் பருவத்தில் உமது பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகம் உம்மை தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கத் தவறியுள்ளது என்பதுடன் மாறாக உமது முயற்சிகளையும், செயல்களையும் எதிர்மறையாக விமர்சித்திருப்பார்கள் போலும்.*

*ஏனெனில், தட்டிக்கொடுத்து ஊக்குவிக்காமல் எதிர்மறையாக விமர்சனத்திற்குட்பட்டு வளரும் பிள்ளைகளே பெரும்பாலும் இந்த விதமாக சமூகத்தின் ஓட்டத்துடன் இணைந்து முன்னோக்கி ஓடப்பயந்து எல்லாவற்றிலும் பின்நிற்பார்கள். அதாவது உமக்கு சுயநம்பிக்கை (Self-Confidence) என்பது குறைவாக உள்ளது. அதாவது ஒவ்வொரு செயலினதும் பிரதி செயலை (Reaction) எதிர்கொள்வதற்கான தற்துணிவு கொஞ்சம் குறைவாக உள்ளதென நினைக்கிறேன். இதனால் பொதுவாக எல்லா விடயங்களிலும் கொஞ்சம் ஒதுங்கி இருப்பீர் போலும். வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டுத்தானே. அந்த விளையாட்டை அனுபவித்து விளையாடுவது தானே நல்லது.*


*அடக்கமானவன் என்பது பிழையான ஒரு விடயமல்ல. கோழை வேறு, அடக்கம் வேறு. அதாவது ஒரு வாழ்க்கைத்திறன் (Lifeskills) உள்ளவனாக இருப்பதே அவசியமானது. அடக்கம் என்பது தவறான ஒரு விடயமல்ல. சபையறிந்து நடத்தலே அது.*

*மோட்டார் சைக்கிள் ஓடுவது, தேவையற்று குழுச் சண்டைகளுக்குப் போவது, மதுபானம் அருந்துவது, புகைப்பிடிப்பது, வீணாக குடீயில் நேரத்தைச் செலவழிப்பது, சமூக பிறழ்வான நடவடிக்கைகளுக்கு துணைபோவது, வன்முறைகளில் ஈடுபடுவது எல்லாம் இளைஞர்களுக்குரிய இயல்பென்பது முற்றிலும் தவறானது. உண்மையில் இவையெல்லாம் ஒழுக்கக் கேடான, வாழ்க்கையை சீரழிக்கக்கூடிய விடயங்கள் என்பதுடன் இவ்வாறான*



*செயல்களில் ஈடுபடும் இளைஞர்களின் பிறப்பே கேள்விக்குரியது. ஆயிரம் ஆமோதித்தாலும் பிழைபிழையே. ஒருவரேனும் ஒத்துக்கொள்ளாவிடினும் சரி சரியே! எல்லோரும் குடிக்கிறார்கள் என்பதற்காக குடிப்பது சரியா? எல்லோரும் பெரிய மோட்டார்சைக்கிள் வாங்கி வேகமாக ஓடிஅடிபட்டுச் சாகிறார்கள் என்பதற்காக நானும் ஓடிச் சாவது சரியா?*

*எனவே நண்பர்கள் "பொன்ஸ்" என்பதற்காக வாழ்க்கையை சீரழிக்கும் விடயங்களை தயவு செய்து செய்ய முயற்சிக்க வேண்டாம். சமூகத்திற்கும், வீட்டிற்கும் நன்மையையும் மகிழ்ச்சியையும் தரக்கூடிய விடயங்களை செய்ய முனைப்பு காட்டினால் உமக்கும் நன்மை. ஊரிற்கும் நன்மை. இன்றைய எமது சமூகத்தில் இளைஞர்களின் அட்டகாசங்களைப் பார்க்கும்போது உமது "பொன்ஸ்" இயல்பே மேலானது போல தெரிகிறது. ஆண்மை என்பது ரௌடித்தனம் அல்ல. பண்பும், ஒழுக்கமும் நிறைந்த தேவைக்கேற்ற செயலே ஆண்மை எனவே வீண் கவலை வேண்டாம். சுயநம்பிக்கையையும் தற்துணிவையும் வளர்த்துக்கொள்ளும். ஆண்மைக்குள் உள்ள பெண்மையும் இரசிக்கக்கூடியதே. இன்னும் சொன்னால், இந்தப் பெண்மையையும் இரசித்து விரும்பும் பெண்களும் இருக்கிறார்கள். ஆண்மைக்குள் பெண்மையும், பெண்மைக்குள் ஆண்மையும் இணைந்து தூரதர்சன்வு. ஏயின் சின்னம்போல இருப்பதே பூரணமான வாழ்வு.*


ஸ்கெட்ச்


வேலைக்காரன்





## கிசுகிசு

- சமீபத்தில் ஐஸ்வர்யா ராய், பாலிவுட் பிரபலங்களுக்கு நட்சத்திர ஓட்டலில் பார்ட்டி கொடுத்திருக்கிறார். இதில் மாஜி காதலன்கள் சல்மான்கான், விவேக் ஓபராய், அக்ஷய் கன்னாவுக்கு மட்டும் அழைப்பு தரவில்லையாம். இதில் குடும்பமே கலந்து கொண்டாலும் மாமியார் ஜெயா பச்சன் மட்டும் வரவில்லையாம்.
- பாலிவுட்டில் சினிமா வாரிசுகளின் ஆதிக்கம்தான் இருக்கிறது என தடாலடியாக குற்றம் சாட்டினார் கங்கணா ரனாவத். கொதித்துப் போன கரீனா கபூர், அப்படி இருந்தால் கங்கணா எப்படி டாப்புக்கு வந்தார்? வாய்க்கு வந்தபடி பேசக்கூடாது என பதிலடி கொடுத்திருக்கிறார்.
- ஸ்ரீதேவி மகள் ஜான்வி பார்ட்டியே கதி என கிடக்கிறாராம். அப்பா போனி கபூர் பலமுறை அட்வைஸ் செய்தும் கேட்கவில்லையாம். அம்மாவின் செல்லத்தால் ஜான்வி உல்லாச உலகில் திளைத்து வருவதாக பாலிவுட்டில் கிசுகிசுக்கப்படுகிறது.
- ஜுட்வா படத்தில் பிகினியில் டாப்ஸி இருக்கும் ஸ்டில்களை படத் தரப்பு பிரபலப்படுத்தி வருகிறார்கள். இதனால் அந்தப் படத்தின் மற்றொரு ஹீரோயின் ஜாக்குலைன் கடும் ஆத்திரத்தில் இருக்கிறாராம்.
- கணவர் சித்தார்த் ராய் கபூருடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் திடீரென இமாச்சலுக்கு சென்று ஒரு மாதம் தனிமையில் இருந்துவிட்டு வந்தாராம் வித்யாபாலன். நெருங்கிய நண்பர் சஞ்சய் தத் தான் இருவருக்கும் இடையே சமரசம் செய்து வைத்தாராம்.
- ஜூலி2 பட டிரெய்லர் பார்த்த ஹேட் ஸ்டோரி3 பட யூனிட், லட்சுமிராயை போட்டோ ஷூட்டுக்கு அழைத்திருக்கிறார்கள். குஷியாகி ஓடியிருக்கிறார். போனபிறகுதான் ஹீரோயின் வேடம் கிடையாது, சைடு ரோலுக்கு என தெரிந்ததாம். வந்தவரை லாபம் என ஷூட் நடத்திவிட்டு வந்தாராம்.



## கணவனின் ஜோடி சூப்பராம்!

"மன்மதராசாஞ் மன்மதராசா" என கெட்ட ஆட்டம் போட்டவர் சாயாசிங். இப்பொழுது கதாநாயகியாக அல்லாமல் நடித்து வருகிறார். இவரது கணவர்தான் கிருஷ்ணா. இப்படி சொன்னால் புரியாது தெய்வமகள் தொடரின் ஹீரோ பிரகாஷ் என்றால் தெரியும். சாயாசிங்கையும் தொடர்களில் நடிக்க வைக்க முயலகிறாராம். ஆனால் இப்போதைக்கு சினிமாவை விட்டு வரும் எண்ணமில்லையென சாயாசிங் மறுத்துவிட்டார். பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு வருமாறு மூன்றுமுறை அழைத்தும் போகவில்லையாம். அவர் பார்க்கும் ஒரே தொடர் தெய்வமகளாம். இதன் நாயகி வாணி போஜனுக்கும் தனது கணவருக்கும் ஜோடிப்பொருத்தம் நன்றாக அமைந்திருக்கிறது என பாராட்டு வேறு கொடுத்திருக்கிறார்.

## மயிலுக்கு கல்யாணம் ஆகலையாம்!

ஆதித்யா சனலில் "மாமோய் நீங்க எங்க இருக்கீங்க" நிகழ்ச்சியில் நடிப்பவர் அகல்யா. இந்த நிகழ்ச்சியில் டவுட் செந்திலுக்கு அடிப்பது போல அடிக்கடி காட்சி வரும். காட்சி தத்ரூபமாக இருக்க வேண்டுமென்பதால் நிஜமாகவே அடிப்பாராம் அகல்யா. 150 எபிசோட் கடந்து செல்லும் இந்த நிகழ்ச்சிக்கு பலத்த வரவேற்பு கிடைக்கிறதாம். எங்கு சென்றாலும் "மயிலு நல்லா இருக்கிறியா" என கேட்கிறார்கள் என்கிறார். மயிலுக்கு உள்ள பெரிய கவலை, டவுட் செந்திலை அவரது கணவர் என நினைக்கிறார்களாம். தனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை என கற்பூரம் அடித்து சத்தியம் செய்கிறார்.

## வாணி ராணி வில்லி

நாதஸ்வரம் தொடர் மூலம் சின்னத்திரைக்குள் நுழைந்தவர் ஸ்ருதி சண்முகப்பிரியா. தற்போது வாணி ராணி தொடரில் வில்லி. ஒரேவிதமான கரக்டரில் நடித்தால் மக்களிற்கு அலுப்பு ஏற்படும் என்பதால் வில்லி வேடத்தை தேர்வுசெய்ததாக கூறுகிறார். ஆனால், அவருக்கு வரும் விமர்சனங்களில், உங்கள் முகத்திற்கு வில்லி வேடம் சரிவராது, குடும்ப பாங்கான வேடங்கள்தான் சரிவரும் என்றுதான் சொல்கிறார்களாம். இவர் நடித்த திரைப்படமொன்றும் வெளியாகவுள்ளதாம். அதைவிட முக்கியமான செய்தியொன்றையும் சொன்னார். விரைவில் கல்யாணமாகவுள்ளதாம்!



## நந்தினி சீரியலில் சண்டித்தனம்

சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நந்தினிதான் தற்போது தொடர்களில் நம்பர் 1 ஆக உள்ளது. இந்த தொடரில் கதை எழுத வேல்முருகன் என்பவர்தான் முதலில் ஒப்பந்மானார். அவருக்கு மாதம் ஒரு இலட்சம் சம்பளம் பேசப்பட்டது. நான்கு மாதம் ஒழுங்காக சம்பளத்தை கொடுத்த தயாரிப்பாளர் சுந்தர்.சி, பின்னர் பணமே கொடுக்கவில்லையாம். சம்பளத்தை கேட்ட வேல்முருகனிடம், கதைக்கான பணம் அவ்வளவுதான் என கூறியுள்ளார் சுந்தர்.சி. தற்போது வேல்முருகன் மீண்டும் பணத்தை கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சுந்தர்.சி, அடியாட்களை அனுப்பி வேல்முருகனை மிரட்டியுள்ளார். இதுகுறித்து பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.



சுஷ்மா ராஜ்

# வண்ணத் திரை



காஜல் அகர்வால்

## சண்டைக்காரியாகும் எமி!

எமி ஜாக்சன் முன்னணி நாயகிகள் பட்டியலில் இல்லை. என்றாலும் தொடர்ந்து நடித்துக் கொண்டிருக்கிறார். ரஜினியின் 2.0 மூலம் முன்னணி நடிகையாகலாமென நினைத்தார். ஆனால் அதற்கான அறிகுறி தென்படவில்லை. மாறாக சர்ச்சைகளில்தான் சிக்கி வருகிறார். கவர்ச்சி படங்களை வெளியிட்டது, பீட்டா அமைப்பிற்கு ஆதரவாக கருத்து தெரிவித்தது என சர்ச்சைகளில் தொடர்ந்து கொண்டிருந்தவரிற்கு, ஒரு அதிர்ஷ்ட வாய்ப்பு கிட்டியுள்ளது. ஹொலிவூட் டிவி தொடர் ஒன்றில் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளார். சுப்பர்கேர்ள் தொடர். இதற்காக சண்டை பயிற்சியும் பெற்று வருகிறார்.

## டீச்சரை ஜோடியாக்கிய தனுஷ்

பிரேமம் புகழ் சாய் பல்லவி பிடா படம் மூலம் தெலுங்கில் பிரபலமாகி விட்டார். இதையடுத்து தற்போது நானியுடன் எம்சிஏ மற்றும் தமிழ், தெலுங்கில் ஏ.எல்.விஜய் இயக்கும் கரு ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இதில் 4 வயது சிறுமிக்கு தாயாக நடிக்கிறார். இப்போது பாலாஜி மோகன் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் மாரி 2 படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார். மாரி படத்தில் நாயகியாக காஜல் அகர்வால் நடித்திருந்தார். மலையாள, தெலுங்கு ரசிகர்களை சாய் பல்லவி கட்டிவைத்துள்ளதால் இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. தவிரவும், காஜலின் சம்பளமும் அதிகமாக உள்ளதாம்.

## நானும் நடிகைதான்!

கும்கியில் அறிமுகமான லட்சுமிமேனன் திடீரென முன்னணிக்கு வந்தார். வரிசையாக விஷால், சசிகுமார் படங்களில் நடித்தார். வெற்றிப்படங்களில் தொடர்ந்து நடித்தவர், பின்னர் கதைதேர்வில் கோட்டைவிட்டு, சறுக்கல்களை சந்தித்தார். இப்போது பிரபுதேவாவுடன் யங் மங் சங் படத்தில் மட்டுமே நடித்து வருகிறார். இந்த படத்தைதான் அதிகமாக நம்பியிருக்கிறார். இனி படங்களில் நடிக்கவே மாட்டேன் என லட்சுமி மேனன் சொன்னதாக யாரோ கதையை கிளப்பிவிட, அதுவும் ஒரு சுற்று வருகிறது. இதனால் பதற்றமான லட்சுமி மேனன், நடிகர்கள், இயக்குனர்களிற்கு போன்போட்டு நானும் நடிகைதான் என சொல்லி வருகிறாராம்.

## வடிவேலுவின் தயக்கம்!

வடிவேலு சினிமாவுக்கு ரீஎன்ரி கொடுத்து தெனாலிராமன், எலி ஆகிய படங்களில் ஹீரோவாக நடித்தார். அவை அவ்வளவாக ஓடவில்லை. இதனையடுத்து கத்தி சண்டயில் காமெடியனாகினார். இந்த சமயத்தில் இன்னொரு படத்தில் ஒப்பந்தமானார். நீயும் நானும் நடுவில பேயும் படத்தில் ஆர்.கேயுடன் நடிக்கவிருந்தார். ஆனால் ஏற்கனவே நாயகனாக நடித்த இரண்டு படங்களும் தோல்வியடைந்ததால் கொஞ்சம் தயங்கினார் வடிவேலு. இதற்குள் வடிவேலுக்கு மெகாஹிட் கொடுத்த இம்சைஅரசன் படத்தை இயக்கிய சிம்புதேவன், இரண்டாம் பாகம் எடுப்பதால் அதில் முழு கவனம் செலுத்த ஆம்பித்து விட்டார். இந்த படம் தனக்கு திருப்புமுனையாக அமையுமென நம்புகிறார். இம்சைஅரசனை முடித்துக்கொண்டுதான் நீயும் நானும் நடுவில பேயும் படத்தில் நடிக்கவுள்ளார்.

## நிவின்பாலியின் தமிழ் படம்

நேரம் படத்தை தொடர்ந்து தமிழில் நிவின்பாலி நடிக்கும் அடுத்த படம் ரிச்சி. 2014 இல் வெளியான கன்னட படமொன்றின ரீமேக் இது. கௌதம் ராமச்சந்திரன் படத்தை இயக்குகிறார். படவேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு தணிக்கைகுழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தீபாவளிக்கு முன்னர் படம் வெளியாகுமென தெரிகிறது. இதுவரை அமைதியான வேடங்களில் நடித்து வந்த நிவின்பாலி முதன்முறையாக தூத்துக்குடி ரௌடியாக நடிக்கிறார். இந்த அக்சன் படம் வெற்றியடைந்தால், மலையாளத்திலும் அக்சன் படங்களில் நடிக்க திட்டமிட்டுள்ளார்.

## கவுதம் + கார்த்திக்

கவுதம் கார்த்திக் நடிப்பில் ஹரஹர மகாதேவகி படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கவுதம் கார்த்திக்கின் அடுத்த படத்தில் அவரது தந்தை கார்த்திக்கும் இணைந்து நடிக்கவுள்ளார். நான் சிகப்பு மனிதன் படத்தை இயக்கிய திரு இந்த படத்தை இயக்கவுள்ளார். கார்த்திக்கைவும் கவுதத்தையும் இணைந்து நடிக்க வைக்க பலர் முயன்றனர். எனினும், நல்ல கதை அமைந்தால் மட்டுமே இணைந்து நடிப்பேன் என்பதில் கார்த்திக் உறுதியாக இருந்தார். திரு சொன்ன கதை பிடித்துப்போக, உடனே ஓகே சொல்லிவிட்டார் கார்த்திக். தற்போது விக்னேஸ் சிவனின் இயக்கத்தில் தானா சேர்ந்த கூட்டம் படத்தில் கார்த்திக் நடித்து வருகிறார். அது முடிந்ததும், மகனுடன் இணைந்து நடிக்கவுள்ளார். படத்தின் பெயர், நாயகி பற்றிய விபரங்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை.

## ஓவியாவிற்கு ஒரு கோடி கொடுத்த தொழிலதிபர்

பிக்பாஸ் நாயகி ஓவியா பொதுமக்களின் செல்லப்பிள்ளையாகியுள்ள நிலையில் அவர் என்ன செய்தாலும் அதை ரசிக்க தயாராக உள்ளனர். ஓவியாவின் இந்த பிரபலத்தை பயன்படுத்த நினைத்து, தி.நகர் முன்னணி தொழிலதிபர் தனது புதிய கிளை திறப்பு விழாவுக்கு ஓவியாவை வரவழைத்துள்ளார். தனது நிறுவனத்தின் அடுத்த விளம்பர படத்தில் ஓவியாவுடன் நடனமும் ஆடியுள்ளார். கடைதிறப்பு மற்றும் விளம்பர படத்திற்காக அவர் ஓவியாவுக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம் கொடுத்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் ஓவியாவின் தரப்பு இந்த செய்தியை மறுத்துள்ளது.

ஸ்ரீதர் சுவாமிநாதன்




# கொடுத்தது கோடிகள்!

**எம்.ஜி.ஆர்.** உதவி செய்ய வேண்டும் என்று நினைத்துவிட்டால் நேரம், காலம் பார்க்க மாட்டார். தான் எவ்வளவுதான் கடினமான பணியில் இருந்தாலும் தேவைப்படும் நபருக்கு சரியான நேரத்தில் உதவி செய்யக் கூடியவர். அதிலும் வசதியுடன் வாழ்ந்து பின்னர் நொடித்துப் போனவர் என்றால் அவர்களுக்கு உதவும் வரை அவர் மனம் அமைதி அடையாது.,

அந்த உதவி இயக்குநரின் பெயர் கோபாலகிருஷ்ணன். பல படங் களில் உதவி இயக்குநராக பணியாற்றியுள்ளார். ‘நாடோடி மன்னன்’ படத்தில் எம்.ஜி.ஆருக்கு உதவியாக இருந்தவர். வேறு பல படங்களுக்கும் உதவி இயக்குநராக இருந்துள்ளார். நல்ல நிலையில் இருந்தவர், காலச் சூழலில் நொடித்துப் போனார். சென்னை நங்கநல்லூரில் வாடகை வீட்டில் தனது குடும்பத்துடன் சிரமப்பட்டு வந்தார்.

கிடைத்த சிறிய வேலைகளை செய்து குடும்பத்தினரின் பசியாற்றுவதே அவருக்கு பெரும்பாடாக இருந்தது. வீட்டு வாடகையைக்கூட அவரால் கொடுக்க முடியவில்லை. சில மாதங்கள் வாடகை பாக்கி இருந்த நிலையில், வீட்டின் உரிமையாளர் பொறுமை இழந்தார். ஒருநாள், வீட்டில் உள்ள தட்டுமுட்டு சாமான்களை எடுத்து வெளியே வீசி விட்டு வீட்டையும் உரிமையாளர் பூட்டி விட்டார். நிர்க்கதியாக நின்ற குடும்பத்தினரை நெருங்கிய நண்பர் வீட்டில் விட்டுவிட்டு தனது உறவினர்கள், நண்பர்களிடம் உதவி கேட்டார் கோபாலகிருஷ்ணன். அவருக்கு கிடைத்தது ஏமாற்றம் மட்டுமே.

என்ன செய்வது என்று தெரியாத நிலையில், கோபாலகிருஷ்ணனுக்கு எம்.ஜி.ஆரின் நினைவு வந்தது. பல ஆண்டுகளாக எம்.ஜி.ஆரோடு அவருக்கு தொடர்பு இல்லை. தன்னை எம்.ஜி.ஆர் நினைவில் வைத்திருப்பாரா? நினைவில் இருந்தாலும் நெருக்கம் இல்லாத நிலையில் உதவி செய்வாரா? என்று அவருக்கு சந்தேகம். இருந்தாலும், கடைசி முயற்சியாக எம்.ஜி.ஆரை பார்த்துவிடலாம் என்று அவரைத் தேடிச் சென்றார்.

அப்போது, வாஹினி ஸ்டுடியோவில் ‘பட்டிக்காட்டு பொன்னையா’ படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர் இருந்தார். படப்பிடிப்பு முடியும்வரை காத்திருந்தார் கோபாலகிருஷ்ணன். படப்பிடிப்பு முடிந்து வெளியே வந்த எம்.ஜி. ஆர், சோகத் துடன் நின்றிருந்த கோபாலகிருஷ்ணனை பார்த்ததும் அடையாளம் கண்டுகொண்டார். அகமும் முகமும் மலர அவரை அழைத்து நலம் விசாரித்தார்.

கோபாலகிருஷ்ணனின் முகத்தையும் உடையையும் பார்த்தே அவரது நிலைமையை எம்.ஜி.ஆர் தெரிந்துகொண்டார். அவர் அன்போடு விசாரித்ததைப் பார்த்து, கோபாலகிருஷ்ணனுக்கு அது வரை அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்தது. அவரை சமாதானப்படுத்தி எம்.ஜி.ஆர் ஆறுதல் கூறினார். ஆசுவாசப்படுத்திக் கொண்டு, தனது நிலைமையையும் குடும்பத்தினரை நண்பர் வீட்டில் விட்டுவிட்டு வந்திருப்பதையும் குமுறித் தீர்த்தார் கோபாலகிருஷ்ணன்.

அதைக் கேட்டு துடித்துப்போன எம்.ஜி.ஆர், ‘உங்கள் நிலைமையை ஏன் முன்பே என்னிடம் தெரிவிக்கவில்லை?’ என்று அவரை அன்போடு கடிந்து கொண்டார். ‘வாடகை பாக்கி எவ்வளவு?’ என்று கேட்டார். ‘மூவாயிரம் ரூபாய்’ என்று பதிலளித்தார் கோபாலகிருஷ்ணன். அவரை சாப்பிட வைத்து கைச்செலவுக்கு சிறிது பணம் கொடுத்ததுடன், தனது உதவியாளர்களிடம் அவரது வீட்டு முகவரியை கொடுத்துவிட்டு போகச் சொன்னார். எம்.ஜி.ஆரை கோபாலகிருஷ்ணன் பார்த்தது பிற்பகலில். அன்று மாலை முதல் பலத்த மழை பெய்தது.

‘எம்.ஜி.ஆரிடம் சொல்லிவிட்டோம். எப்படியும் உதவி கிடைக்கும்’ என்ற நம்பிக்கையில் கொட்டும் மழையிலும் பூட்டப்பட்டிருந்த தனது வாடகை வீடு முன்பு தாழ்வாரத்தில் ஒடுங்கியபடி அமர்ந்து, சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தார் கோபாலகிருஷ்ணன்.

அவரது நம்பிக்கை வீண்போகவில்லை. அவர் வீட்டுக்கு இரண்டு வீடுகள் தள்ளி ஒரு கார் வந்து நின்றது. அதில் இருந்தவர்கள் எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள். தன்னைப் பற்றி அவர்கள் விசாரிப்பதை அறிந்து, ஓடோடிச் சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் கோபாலகிருஷ்ணன். அவரிடம் எம்.ஜி.ஆர் கொடுக்கச் சொன்னதாக பேப்பரில் சுற்றப்பட்ட ஒரு பொட்டலத்தை உதவியாளர்கள் கொடுத்தனர்.

‘இதில் பத்தாயிரம் ரூபாய் இருக் கிறது. வாடகை பாக்கியான மூவாயிரம் ரூபாய் போக மீதிப் பணத்தை உங்களையே வைத்துக்கொள்ளச் சொன்னார்’ என்று கோபாலகிருஷ்ணனிடம் எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் தெரிவித்தனர். நன்றிப் பெருக்கில் மழையுடன் போட்டியிட்டபடி, கோபால கிருஷ்ணனின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் கொட்டியது. பின்னர், அவருக்கு சில வாய்ப்புகளும் கிடைத்தன. இது எம்.ஜி.ஆரின் உதவிதான் என்று தெரிந்து கொண்டார் கோபாலகிருஷ்ணன்.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அன்றிரவு வெகுநேரம் வரை எம்.ஜி.ஆர் சாப்பிடாமல் இருந்தார். தனது உதவியாளர்கள் திரும்பி வந்து, ‘கோபாலகிருஷ்ணனிடம் பணத்தை கொடுத்துவிட்டோம்’ என்று தெரிவித்த பிறகுதான் சாப்பிடச் சென்றார்.

எம்.ஜி.ஆர் நடித்த ‘அரச கட்டளை’ படம், பல மாற்றங்கள் செய்யப்பட்டு, துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் எம்.ஜி.ஆர் பல மாதங்கள் நடிக்க முடியாமல் இருந்து, பின்னர், 1967ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்து தாமதமாக வெளியானது. படத்தில், ‘அண்ணா... அண்ணா... என்று நாங்கள் அழைக்கும் காலம் போய் மன்னா... மன்னா... என்று அழைக்கும் காலம் வரப்போகிறது’ என்ற வசனம் இடம் பெறும். அதாவது, பேரறிஞர் அண்ணா விரைவில் முதல் அமைச் சர் ஆவார் என்பதை விளக்குவதுபோல வசனம். ஆனால், படம் வந்தபோது அண்ணா முதல்வராகவே ஆகிவிட்டார்.

இந்தப் படத்தில், கவிஞர் வாலி எழுதி, பி.சுசீலாவின் இனிமையான குரலில் ‘என்னைப் பாட வைத்தவன் ஒருவன், என் பாட்டுக்கு அவன்தான் தலைவன்ஞ்’ என்ற அருமையான பாடல் உண்டு. படத்தில் ஜெயலலிதா பாடுவது போல காட்சி. எம்.ஜி.ஆரின் ஈகை குணத்தைப் புகழும் பின்வரும் வரிகள் வரும்போது, தியேட்டரில் ரசிகர்களின் ஆரவாரம் கூரையைப் பிளக்கும்.

‘அவன் வீட்டுக்குக் கதவுகள் இல்லை
அந்த வாசலில் காவல்கள் இல்லை
அவன் கொடுத்தது எத்தனை கோடி
அந்தக் கோமகன் திருமுகம் வாழிஞ் வாழி!’

**தொடரும்...**

**‘அரச கட்டளை’ படத்தை எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி.சக்ர பாணியின் மகன் ராமமூர்த்தி தயா ரித்தார். சக்ரபாணி இயக்கினார். பி.எஸ். வீரப்பா, எம்.என்.நம்பியார், ஆர்.எஸ்.மனோகர், எஸ்.ஏ.அசோகன் என எம்.ஜி.ஆர் பட முக்கிய வில்லன்கள் எல்லோரும் இந்தப் படத்தில் நடித்திருந்தனர்.**





# இணைய கலாட்டா







































8-ம் பக்க தொடர்ச்சி...

இராணுவம் நெருக்கடி கொடுத்து கொண்டிருந்தது. நாம் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லையென்ற கோபத்தில், ஒருநாள் கிளிநொச்சியிலுள்ள முகாமை சுற்றி வளைத்து தாக்கினார்கள். பின்பக்கமாக மதிலேறி குதித்து தப்பியோடிவிட்டோம். அதில் தவம் என்பவரிற்கு காலில் காயம் ஏற்பட்டது.

இந்தியா புலிகள் மோதல் ஏற்பட்டதன் பின்னர் citizen volunteer force (cvf ) என்ற பெயரில் வடமாகாணத்திற்கான காவல்துறையை உருவாக்கினார்கள். இதற்கு இந்திய இராணுவமே சம்பளம் வழங்கியது. இதேபோன்று ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் இணைந்து தமிழ் தேசிய இராணுவத்தையும் உருவாக்கினார்கள். இதில் ரெலோ உறுப்பினர்களும் இணைந்து பயிற்சி பெற்றார்கள். மூன்று இயக்கங்களையும் உள்ளடக்கிய கிளிநொச்சி பயிற்சி முகாமில் நானும் பயிற்சிபெற்றேன். இப்பொழுது எமது கட்சியில் உள்ள முக்கியஸ்தர்கள் பெரும்பாலானவர்கள் தமிழ் தேசிய இராணுவத்தில் இருந்தவர்கள்தான். திறமை, தகுதியினடிப்படையில் அங்கு தரநிலை வழங்கப்பட்டபோது, முதல் நிலைப்படுத்தப்பட்டு கேணல் தரம் வழங்கப்பட்டது. தமிழ் தேசிய இராணுவத்திற்கு பொறுப்பாக காளித் இருந்தார். புளொட் அமைப்பிற்காக பாலஸ்தீனத்தில் பயிற்சிபெற்றவர். பின்னர் பரந்தன் ராஜனுடன் இணைந்து ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பிற்கு வந்து, தமிழ் தேசிய இராணுவத்திற்கு பொறுப்பானார்.

அந்த சமயத்தில் விடுதலைப்புலிகள் எங்கள் மீது அடிக்கடி தாக்குதல்



நடத்தினாலும், நாங்கள் ரெலோ அவர்கள் மீது தாக்குதல் நடத்தியது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே. வடகிழக்கு மாகாணசபை தேர்தலில் மூன்று கட்சிகளையும் இணைந்து போட்டியிடுமாறு இந்தியா கேட்டது. ஆனால் நாம் அதை ஏற்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் இணைந்து தேர்தலில் போட்டியிட்டன. கிளிநொச்சி, யாழ்ப்பாண பகுதிகளில் நான் செயற்பட்டு கொண்டிருந்தேன்.

சகோதர மோதல்களில் ஈடுபடகூடாதென்பது அப்போதைய எமது நிலைப்பாடு. சுற்றிவளைப்புக்களில் ஈடுபடும்போது, எம்மையும் வருமாறு அடிக்கடி கேட்பார்கள். நாங்கள் அவர்களுடன் இணைந்து செயற்படுவதில்லை. இதனால் எம்மீது இந்தியர்களிற்கும் கோபமிருந்தது.

ஒரு சமயம், யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் தங்கியிருந்து நகரத்தில் ஆங்கிலம் படித்துகொண்டிருந்தேன். எமது இயக்கத்தில் இருந்த ஒருவர் இந்திய இராணுவத்துடன் இணைந்து கல்வியங்காட்டில் கொலை செய்வது, புலிகளை காட்டிக்கொடுப்பது, கப்பம் வாங்குவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தார். எங்கள் பெயரை பாவித்து இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்பட வேண்டாமென அவரை எமது இயக்கம் எச்சரித்திருந்தது. இதேகாலப்பகுதியில் விடுதலைப்புலிகள் அவரை சுட்டுக்கொன்று விட்டார்கள். ஜவான்தான் சுட்டார். ஆனால் அந்த பழி ரெலோவின் மீது விழுந்தது.

தம்முடன் சேர்ந்து இயங்கியவரை ரெலோதான் சுட்டதென இந்திய இராணுவம் நினைத்தது. என்னையும் ஆறுபேரையும் கைதுசெய்து, நாயன் மார்கட்டு முகாமிற்கு கொண்டு சென்றனர். நாங்கள்தானா கொலை செய்ததென விசாரித்து சித்திரவதை செய்தார்கள். கைகளை பின்னால் கட்டி, தலைகீழாக தொங்கவிட்டு அடிப்பார்கள். (அந்த சித்திரவதையின் பக்கவிளைவுகள் இன்றும் உள்ளன) இன்னும் சொல்ல முடியாத சித்திரவதை. ஏழு நாளாக தலைகீழாக கட்டிதொங்கவிட்டு நடந்த சித்திரவதையில் உடலெல்லாம் காயம். உடம்பு காயங்களுடன் சேர்ட் ஒட்டிவிட்டது.

பின்னர் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை தடுப்பு முகாமிற்கு கொண்டு சென்றனர். சீமெந்து தொழிற்சாலை விடுதிகளை சிறைச்சாலையாக மாற்றியிருந்தனர். தடுப்பு முகாமிற்குள் கொண்டு போய் போட்டுவிட்டார்கள். இதற்குள் ஆயிரம் விடுதலைப்புலிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். நாங்கள் ஆறுபேர் மட்டுமே ரெலோ. எமது உடைகளை மாற்றி, காயத்திற்கு மருந்திட்டு புலிகள் அன்பாக கவனித்தனர். நெல்லியடி சுக்ளா, வல்வெட்டித்துறை மஞ்சு, மோகன், மானிப்பாய் பொறுப்பாளர் மயூரன் போன்றவர்கள் அங்கிருந்தனர்.

மேஜர் லலித் நாத், மேஜர் நாயர், மேஜர் சர்மா, கப்டன் ராஜன் போன்றவர்கள் முகாமிற்கு பொறுப்பாக இருந்தனர். முகாமை சுற்றி உயரமான கம்பிவேலிகள் அமைத்திருந்தனர்.

2002 சமாதான உடன்படிக்கை காலப்பகுதியில் ஜவானை சந்தித்தபோது, சிரித்தபடி இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தார். "நாங்கள் செய்த கொலைக்கு நீங்கள் சிறையிலிருந்தீர்கள்" என சொன்னார்.

ஒன்பது மாத சிறைவாசத்தின் பின், இந்திய இராணுவம் வெளியேறும்போது சிறையை திறந்து விட்டார்கள். நான் கிளிநொச்சிக்கு சென்று எமது அமைப்பினரை சந்தித்து, திருகோணமலைக்கு சென்றேன். பின்னர் இந்தியாவிற்கு சென்று மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்தேன். பத்மநாபா கொலையை தொடர்ந்து அங்கும் நெருக்கடிகள் வந்தன. பிரேமதாசாவின் ஆட்சி அமைந்ததும் ரெலோ இலங்கைக்கு திரும்பி வர முடிவெடுத்தது. நானும் கொழும்பிற்கு வந்தேன். (தொடரும்)

### மார்க்சிசம் to மல்லுக்கட்டல்

# புத்தூர் மயான பிரச்சனைக்கு காரணம் இதுதான்!

## சமரசத்தை விரும்பாத புதிய ஜனநாயக கட்சி

லெனின் சின்னத்தம்பி

புத்தூரில் கிந்துசிட்டி மயானத்தை முன்வைத்து ஒரு பெரும் குழப்பமே நடந்து முடிந்துள்ளது. மயானத்தை அகற்ற வேண்டும், ஆதிக்கசாதியின் அடக்குமுறை உடைக்கப்பட வேண்டுமென ஒரு தரப்பு ஆக்ரோசமாக முழங்க, இன்னொரு தரப்பு சைலண்ட் மோடில் இருக்க... அங்கு என்னதான் பிரச்சனை? ஏனிந்த குழப்பங்கள் என குழம்பிப்போயுள்ளனர் மக்கள்.

ஆதிக்கசாதியின் அடக்குமுறை என மயான எதிர்ப்பாளர்கள் ஆக்ரோசமாக நிற்க... அங்கு சமூக ஒடுக்குமுறைகளே இல்லையென சுயாதீன ஆய்வாளர்கள் சொல்ல, சிதம்பர சக்கரத்தை பேய் பார்த்த கதையாக கிந்துசிட்டி மயான விவகாரத்தை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் கிந்துசிட்டி மயான சர்ச்சையின் அடிப்படை என்ன?

இதை அறிவதென்றால், இந்த பகுதிகளில் உள்ள கிராமங்களின் வரலாற்றையும், நடைமுறை யதார்த்தத்தையும் அறிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் (பீகிங் சார்பு) 1978 இல் ஏற்பட்ட பிளவையடுத்து, புதிய ஜனநாயக கட்சியை கே.ஏ.சுப்ரமணியம் நிறுவினார். தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களை அவர் முன்னின்று வழிநடத்தி, மெய்யான இடதுசாரித்துவ வாழ்க்கை வாழ்ந்தவர் அவர்.

தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள் பெரும்பாலும் அமைதியான வழியில்தான் நடந்தன. பல்லாயிரம் வருட மூட நம்பிக்கையல்லவா? சில இடங்களில் வன்முறை வடிவங்களும் கையாளப்பட்டன.

ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் வாழ்ந்த பகுதிகளிற்கு கே.ஏ.சுப்ரமணியம் சென்று அந்த மக்களிற்குள் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தினார். அந்த மக்களிற்கு தமது உரிந்துக்களை கேட்டுப்பெறும் மனத்திடத்தை தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார். புத்தூருக்கும் அவர் வந்தார்.

இன்று மயான பிரச்சனையை முன்னிறுத்தி பரமவிரோதிகளாக பிளவுபட்டுள்ள கலைமதி, ஜனசக்தி கிராமங்கள் அப்பொழுது எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் மிகமோசமான நிலையில் இருந்தன. கலைமதி கிராமத்தின் வீதியை அமைப்பதில் சுப்ரமணியம் முக்கிய பங்குவகித்தார். இந்த பிரதேசங்களில் கட்சி காலூன்றியது. இதுதான் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி கலைமதி கிராமத்திற்குள் புகுந்த கதை. கலைமதி கிராமத்திற்கு சமீபமாக உள்ள சிறுபிட்டி வடக்கை சேர்ந்த சி.க.செந்தில்வேல் பின்னர் கட்சி தலைவருமாகி, ஊர் பிரமுகருமானார்.

புதிய ஜனநாயக கட்சி அங்கு வந்த ஆண்டு 1983.

கலைமதி கிராமத்தை சூழ ஜனசக்தி, பூமகள், வளர்மதி, கலைவாணி சனசமூக நிலைய கிராமங்கள் நெருக்கமாக அமைந்துள்ளன. கலைமதி, ஜனசக்தி கிராமங்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள்... வீட்டு வேலிதான் கிராம எல்லையாக கொண்டவர்கள். அப்படியிருக்க இரண்டு கிராமங்களிற்குள்ளும் முதலாவது பெரிய மோதல் நிகழ்ந்தது 1984இல்.

அதாவது, புதிய ஜனநாயக கட்சி கலைமதி கிராமத்திற்குள் நுழைந்து ஒரு வருடத்தின் பின்னர் முதலாவது மோதல் நடந்தது!

வீதியால் இறைச்சி கொண்டு சென்ற ஜனசக்தி கிராமத்தவர் ஒருவரை கலைமதிவாசியொருவர் தகராறு செய்து தாக்க, பதிலுக்கு ஜனசக்தி கிராமத்தவர்கள் சென்று அவரை தாக்கினர். பின்னர் கலைமதி கிராமத்தவர் ஜனசக்தி கிராமத்திற்குள் புகுந்து, ரகளையில் ஈடுபட்டனர். புதிய ஜனநாயக கட்சியின் இளம் செயற்பாட்டாளர்கள் வாழைத் தோட்டமொன்றில் நின்ற நாற்பது வாழைகளை வெட்டி சாய்த்தனர். பொழுது சாய்ந்துவிட்டதால், மறுநாள் காலையில் மிச்சத்திற்கு வருகிறோம் என்றுவிட்டு சென்றனர்.

இதனால் அச்சமடைந்த ஜனசக்தி கிராமத்தவர்கள், ஊரம்பிராய் போன்ற பிரதேசங்களில் உள்ளவர்களையெல்லாம் திரட்டி கிராமத்திற்கு பாதுகாப்பு வழங்கினர். மறுநாள் காலையில் கலைமதி கிராமத்தில் இருந்து கொலை வெறியுடன் வந்தனர். ஜனசக்தி எல்லை பாதுகாப்பை உடைக்க முடியாமல் திண்டாடினர். இருதரப்பும் பரஸ்பரம் கல்வீச்சில் ஈடுபட்டிருந்தனர்.

பெரும் அல்லோலகல்லோலமாக நடந்த மோதலை அப்போதைய ஈ.பி.ஆர்.எல்.எவ் முக்கியஸ்தர் சுபத்திரன் தலையிட்டு தீர்த்து வைத்தார். புதிய ஜனநாயக கட்சியின் செயற்பாட்டை ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள் கண்டித்தனர். பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் மத்தியஸ்தத்துடன் சமரச முயற்சி நடந்தது. ரகளையில் கலைமதி கிராமத்தை சேர்ந்த ஒருவரின் சைக்கிள் சேதமாக்கப்பட்டதால் அவருக்கு புதுசைக்கிள் வாங்கி கொடுத்தது ஜனசக்தி கிராமம். கலைமதி கிராமத்தவர்களால் வெட்டிசாய்க்கப்பட்ட நாற்பது வாழைக்கும் நட்டஈடு வழங்குமாறு சொல்லப்பட்டதை அவர்கள் மறுத்து விட்டனர். அப்போது கிராமத்தின் பிரதானிகளில் ஒருவராக இருந்த சி.க.செந்தில்வேல் நட்டஈடு வழங்குவதை மறுத்து, புகழ்பெற்ற வசனமொன்றை சொன்னதாக இன்றும் பக்கத்து ஊர்களில் பேசிக்கொள்கிறார்கள். அவர் சொன்னது 'யுத்தம் என்றால் அழிவுகள் வருவது சகஜம்தான்'.

இந்த சம்பவத்தை எதற்காக விலாவாரியாக குறிப்பிட்டோம் என்றால், அங்கு எப்படி வன்முறை கட்டியமைக்கப் பட்டதென்ற நுண் வரலாற்றை தெரிந்து கொள்வதற்கே.

கலைமதி கிராமம் தொடர்பான கள ஆய்விற்காக நாம் சென்றிருந்தோம். அங்கு சென்றபோது கிடைத்ததெல்லாம் அதிர்ச்சிகரமான தகவல்களே. கட்சி, கிராம அமைப்பின் மீது குறிப்பிடத்தக்கவர்கள் அதிருப்தியுடன் இருக்கிறார்கள். ஆனால் எதையும் வெளிப்படையாக பேச முடியாதவர்களாக அச்சப்பட்டு இருக்கிறார்கள். மீறி பேசினால் பல்வேறு விதமான அபாயங்களை சந்திக்கவேண்டி வருமென சொன்னார்கள். மொத்தத்தில் ஒருவித நாட்டாமை தனமான கிராம நிர்வாகம் நடப்பதாக அவர்கள் சொன்னார்கள்.

கலைமதி கிராமத்தில் புதிய ஜனநாயக மாக்சிசலெனினிச கட்சியின் தலைவர் சி.க.செந்தில்வேல், வடபிராந்திய அமைப்பாளர் கதிர்காமநாதன் ஆகியோரே நிறைவேற்று அதிகாரமுடையவர்கள். அவர்களை சுற்றி ஒரு அதிகார மையம் கட்டமைக்கப்பட்டிருக்க, அதற்கு விசுவாசமாக ஒரு பகுதியினரும், அந்த அதிகார மையத்துடன் தவிர்க்கமுடியாமல் ஒத்துச் செல்ல வேண்டியவர்களாக இன்னொரு பகுதினருமாக கலைமதி கிராமம் இயங்குகிறது. கட்சி, தலைமையை யாரும் கேள்விகேட்க முடியாதென்பது கிராமத்தில் எழுதப்படாத சட்டம். அது இன்று சற்று ஜனநாயக வடிவமெடுத்து சனசமூகநிலையத்தை கேள்விகேட்க முடியாதென்ற மாற்றத்திற்கு சென்றிருக்கிறது. மீறி கேள்வி கேட்டால் அவர்கள் கிராமத்தில் வாழ முடியாத நிலைமை ஏற்படும்!

பொதுவாகவே கிராமப்புறங்களில் சனசமூக நிலையங்கள் வலுவானவை. கிராமத்தை ஒழுங்குமுறைப்படுத்துபவை. சனசமூக நிலையங்களை பகைப்பவர்கள், கிராமத்தின் பொதுவான ஓட்டத்திலிருந்து தள்ளிவைக்கப்படுவார்கள். கலைமதியில், இது கொஞ்சம் கடின வடிவெடுத்திருக்கிறது. சனசமூக நிலையம்தான் எல்லாமே. தெளிவாக சொன்னால், கிராமத்தின் இராசதானி. அதை யாரும் கேள்விகேட்டால், ராஜ நிந்தனை






தொடர்ச்சி அடுத்தபக்கம்...

யாகிவிடும். இப்படி ராஜநிந்தனை செய்த பலர் கிராமத்திலிருந்து வெளியேறி வேறிடங்களில் குடியிருக்கிறார்கள்.

*1990*களின் முன்பின்னான காலம். தனிப்பட்ட பிரச்சனைகளை கட்சியை பயன்படுத்தி சமாளிப்பது, கட்சியின் பெயரால் ஒழுக்கக்கேடுகள் நிகழ்வது போன்ற சம்பவங்கள் வெளிக்கிளம்பி கிராமத்திற்குள் அதிருப்தியேற்பட்டிருந்தது. விமர்சனங்களை வைப்பவர்கள் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்ட சம்பவங்கள் நடந்திருந்தன. விமர்சனங்களை வைத்த ஒருவர், கிராமத்துடன் எந்த தொடர்பும் வைக்ககூடாதென எச்சரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். அவருடன் யாரும் தொடர்பு வைக்ககூடாதென கட்சியின் கிளைக்குழு கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டிருந்தது.

*1984*இல் அயல்கிராமங்களுடன் கலைமதி கிராமம் மோத தொடங்கியதென்று குறிப்பிட்டோம் அல்லவா. இன்னொரு கோணத்தாலும் இதை புரிந்து கொள்ள வேண்டும்.

கலைமதி கிராமம் ஆரம்பத்தில் அரச, அதிகாரிகளின் பார்வையிலேயே படாமல் இருந்தது. எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் இருந்த கிராமம். கல்வியறிவு மிக குறைவாக இருந்தது. சமூக ஒடுக்குமுறை என்ற அசிங்கம் அந்த மக்களை தமிழ் சமூகத்திற்குள்ளேயே உரிமையற்றவர்களாக ஆக்கி வைத்திருந்தது.

*1983*களின் பின் விடுதலைப்புலிகளின் எழுச்சிக்காலம். விடுதலைப்புலிகளின் எழுச்சி சமூகத்தில் நிலவிய சாதிய முரண்களை பெருமளவிற்கு இல்லாமல் ஆக்கியது. சமகாலத்தில் இடதுசாரிய அமைப்புக்கள் நிகழ்த்திய சாதி எதிர்ப்பு போராட்டவழிமுறைகளால் கிடைத்த பலன்களை விட, புலிகளின் அணுகுமுறை பெருமளவிற்கு சாதிய தளைகளை அறுத்தது. கலைமதியை சுற்றியுள்ள கிராமங்கள் உட்பட குடாநாட்டில் பல கிராமங்களில் மக்களின் வாழ்க்கைதரமும், சமூக நோக்கும் மாற்றமடைய ஆரம்பித்தது.

ஆனால் கலைமதியில் வேறொரு போக்கு இருந்தது. இன்றைய இடதுசாரிகளின் சாதியொழிப்பு போராட்ட வழிமுறையும், பார்வையும் கலாவதியானவை. அந்த விபத்தை கலைமதி கிராமம் சந்தித்தது!

தமது கிராமத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வன்முறை கலந்த பாதையை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி கையிலெடுத்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னர் சேர்ட் அணிவதில்லை. காலமாற்றத்தில் அது இயல்பாக மாற்றமடைந்தது. ஆனால், கலைமதியில் வித்தியாசமாக நடந்தது. சேர்ட் அணியாமல் வீதியில் செல்பவர்கள் சனசமூகநிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு தாக்கப்பட்டனர். இந்த அணுகுமுறை, சேர்ட் அணியாமல் போகக் கூடாதென்ற மனநிலையை ஏற்படுத்தலாம். ஆனால் சேர்ட்டை எப்படி சமூகவிடுதலையின் குறியீடாக மாற்றலாமென்பது அவர்களிற்கு புரியாமல் போய்விடும். தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் ஓரளவு வன்முறை கலந்திருந்தது. அது தவிர்க்க முடியாதது. ஆனால், தீண்டாவீமை கால உபாயங்களுடன் அடுத்த கட்ட சமூகவிடுதலையை கையாள முடியாது. இந்த தவறையே புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி செய்தது.

அந்த கட்சியின் ஆயுள் நீளநீள அதன் செல்திறனும், மக்கள் ஆதரவும் குறைந்து கொண்டு சென்று கொண்டிருக்கிறது. ஏதாவதொரு தளத்தை வைத்திருந்தால்தான் கட்சியை காப்பாற்றலாம். வேறு இடங்களில் நிலைகொள்ள முடியாத நிலையில், கலைமதி கிராமத்தையாவது எப்படியாவது கையில் வைத்திருக்க கட்சி நினைக்கலாம். அதனால், வேறு கட்சிகளோ செயற்பாட்டியக்கங்களோ உள்நுழைய முடியாதபடி இறுக்கமான நிலைமையை பேணுகின்றனர். சுயவிமர்சனமற்ற தன்மை, கேள்விகேட்பவர்களை துரோகியாக்குதல், தாக்குதல் உபாயங்களின் மூலம் கிராமத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

**இந்த விவகாரத்திற்கு சாதிய சாயம் பூசவே புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி அதிகம் முயல்கிறது. இறுதியாக வெளியிடப்பட்ட துண்டுபிரசுரத்திலும் அது வெளிப்படையாக தெரிந்தது. சாதிய முலாம் பூசி விவகாரத்தை திசைதிருப்ப முயல்வதாக தெரிகிறது.**

*2006* காலப்பகுதியில் அச்சுவேலியில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் பத்தமேனி பகுதியை சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்கும் கலைமதி கிராமத்தை சேர்ந்தஇரண்டுஇளைஞர்களுக்கும்தகராறு ஏற்பட்டது. சாதிரீதியாக திட்டினார்கள் என கூறி கலைமதி கிராமத்தில் இருந்து இளைஞர்கள் திரட்டப்பட்டு பத்தமேனிக்கு படையெடுத்தனர். பத்தமேனி கிராமத்தை திடீரென சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தினர். தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள், வீடுகளில் இருந்தவர்களிற்கு சராமரியான அடி விழுந்தது.

இந்த தாக்குதலிற்காக கலைமதி கிராமத்தில் இருந்து இளைஞர்களை ஏற்றிசென்றது கட்சியின் முக்கியஸ்தரிற்கு சொந்தமான லொறியில்!

பிரச்சனைகளை வன்முறை வடிவத்தில் தீர்க்கலாமென்றும், இப்படியான நடவடிக்கை உள்ளூரில் கட்சி தொடர்பான சாகச பிம்பத்தை ஏற்படுத்துமென்றும் நினைக்கிறார்கள்.

இவற்றை சொல்வது அந்த மக்களின் நில உரிமையை கேள்விக்குள்ளாக்குவது அல்ல. அவர்களிற்கு வாழ்வதற்கு நிலம் வழங்கப்பட வேண்டும். அதுவும் பொருத்தமான, சிறந்த நிலம் வழங்கப்பட வேண்டும். உடல்கள் தகனம் செய்யப்பட்ட நிலங்களில் குறிப்பிட்ட காலத்திற்கு மனிதர்கள் வாழ்வது உகந்ததல்ல. ஒரு மோசடியின் பெயரால் அந்த மக்களிற்கு நிலம் கிடைப்பதை யாரும்




கேள்விக்குட்படுத்த முடியாது. ஆனால் மக்களின் உரிமையின் பின்னால் எவரது மோசடியும் மறைக்கப்படக்கூடாது. அதை ஒரு கட்சியே விழுந்துவிழுந்து செய்வதுதான் அசிங்கம்.

இரண்டு கிராமங்களிற்குமிடையில் மோதல் ஆரம்பித்த பின் கலைமதி கிராம இளைஞர்கள் ஜனசக்தி கிராமத்திற்குள் புகுந்து அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டனர். விசேட அதிரடிப்படையினர் களமிறங்கிய பின்னர்தான் ஜனசக்தி கிராமத்தில் ஆசுவாசம் பிறந்தது. மக்கள் விடுதலைக்காக செயற்படுவதாக கூறும் கட்சியொன்றினால் வழிநடத்தப்படும் கிராமத்தினால் இன்னொரு கிராமம் அச்சுறுத்தி அடக்கப்படுவதும், அதிரடிப்படை தலையிட்டே கிராமத்தை பாதுகாக்கும் நிலையை ஏற்படுத்துவதும் எந்தவகை இடதுசாரித்துவம் என்பது புரியவில்லை.

இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். *1980*களின் நடுப்பகுதியில் சிறுப்பிட்டி பூமகள் சனசமூக நிலைய கிராமத்தில் உள்ளவர்களின் நிலங்களில் கூலித்தொழிலாளர்களாக இருந்தவர்கள் ஜனசக்தி கிராமத்தினர். கூலி உயர்வு, தீண்டாமை கொடுமைக்கு எதிராக ஜனசக்தி கிராம மக்கள் குரல்கொடுக்க, பூமகள் தொடக்கம் அச்சுவேலி வரையிருந்த ஆதிக்க சமூகத்தின் நிலங்களில் ஜனசக்தி கிராம மக்களிற்கான தொழில் வாய்ப்பு மறுக்கப்பட்டது. ஆனாலும், ஜனசக்தி கிராமமக்கள் அந்த போராட்டத்தை முன்னெடுக்க, பூமகள் கிராம தோட்டங்களில் கூலி தொழிலாளர்களாக கலைமதி கிராமத்தவர் இறங்கி வேலை செய்ய தொடங்கினார்கள். ஒடுக்கப்பட்ட கிராமமொன்றின் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை முறியடிப்பதில் கலைமதி கிராமம் ஒத்துழைத்திருந்தது. இந்தசமயத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சிதான் அங்கு கோலோச்சியது!

கலைமதி கிராமத்தை சேர்ந்தவர்களுடன் பேசும்போது, பெரும்பாலும் மூடிய மனநிலையில் இருந்தே பேசினர். எதையும் வெளிப்படையாக பேச தயங்கினர். சிறிதுநேரம் பேசி, ஒருவித நம்பிக்கை ஏற்பட்டதன் பின்னர் சிலர் வெளிப்படையாக பேசினர். கிந்துசிட்டி மயான விவகாரத்தின் அடிப்படை விமர்சனங்களால் எழுந்த பகை, குடும்ப பகையாகி, மயான போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது என்பதை அவர்களில் ஒரு பகுதியினர் ஏற்றுக்கொள்கின்றனர். இன்னொரு பகுதியினர் அப்படியொரு சம்பவம் நடந்திருந்தாலும், மயானம் அகற்றப்படத்தானே வேண்டும் என்றார்கள்.

இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், கலைமதி கிராமத்தின் அயல் கிராமத்தவர்கள் பலரும் மயானம் அகற்றப்படுவதை ஆதரிக்கிறார்கள். அப்படியானால் என்னதான் சிக்கல்?

மயான விவகாரத்தின் உண்மையான தார்ப்பரியத்தை இப்பொழுது வெளியாகும் அறிக்கைகளை வைத்து புரிந்து கொள்ள முடியாது. களத்தில் இறங்கி உண்மைகளை அறிந்தால் மட்டுமே அது சாத்தியம். இரண்டு குடும்பங்களிற்கிடையிலான பகைதான் இந்த முரண்பாட்டின் அடிப்படை. சிலபல துணைக்காரணங்களுடன் இந்தளவிற்கு விஸ்பரூபம் எடுத்து நிற்கிறது. நிலங்களை விற்பனை செய்தது தொடர்பாக கட்சி பிரமுகர்களை மக்கள் கேள்விகள் கேட்க தொடங்கியது, கிராமத்தில் தளர்ந்துவரும் கட்சியின் பிடியை இறுக்க வாய்ப்பாக பயன்படுத்த நினைத்ததென அந்த துணைக்காரணங்கள் நீள்கிறது.

ஒரு நியாயமான மக்கள் நலன் சார்ந்த நோக்கில் இந்த விவகாரம் கையிலெடுக்கப்படவில்லையென்பதற்கு ஒரு உதாணரம் உள்ளது. கிந்துசிட்டி மயானத்தில் ஒரு உடலை தகனம் செய்ய முயன்றபோதுதான் சர்ச்சை ஆரம்பித்தது. சர்ச்சையையடுத்து அந்த உடல் வல்லை சுடலையில் தகனம் செய்யப்பட்டது. கிந்துசிட்டியில் உடலை எரிக்கவிடாதது வெற்றி நிகழ்வென்பதை போல, மரணவீட்டின் முன்பாக கலைமதி கிராமத்தவர்கள் சிலர் வெடிகொளுத்தி கொண்டாடினர். இதற்கு பழிவாங்க, விவகாரத்தை நீதிமன்றம்வரை கொண்டு சென்றிருக்கிறார்கள் ஜனசக்தி கிராம மக்கள்.

கலைமதி கிராமத்தின் சுற்றயல் கிராமத்தவர்கள் பலருடன் பேசும்போது ஒரு உண்மை புலப்பட்டது. ‘செந்தில் ஐயா இந்த பிரச்சனை பற்றி எங்களுடன் கதைத்திருக்கலாம். மயானத்தை பாவிக்க வேண்டாம் என அவர் எங்களிடம் கேட்டிருந்தால் நிச்சயம் பாவிக்காமல் விட்டிருப்போம். எம்முடன் பேசித்தீர்க்க கூடிய விடயத்தில் மாகாணசபை தீர்வுதர வேண்டுமென அவர் கேட்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் ஏதோ ஒரு நோக்கத்துடன்தான் பிரச்சனையை திசைதிருப்புவதை போலப்படுகிறது’ என்கிறார்கள். கிராமிய உழைப்பாளர் சங்கம் இந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு முயற்சித்தது. புதிய ஜனநாயக கட்சியின் ஒத்துழைப்பு கிடைக்காமல் போக, வெறுத்துப்போய் பகிரங்க அறிக்கையொன்றை வெளியிட்டனர்.

ஜனசக்தி கிராமத்தவர்களுடன் பேசி தீர்க்க வேண்டிய விடயம். அவர்களை பகையாளியாக்கி, மயான பிரச்சனையை மேலும் சிக்கலாக்குகிறது கட்சியென்பது தான் பரவலான அபிப்பிராயம்.

**1984 இல் கலைமதி கிராமத்திற்கும் ஜனசக்தி கிராமத்திற்குமிடையிலான மோதல் கொந்தளிப்பு 1991 காலப்பகுதி வரை நீடித்தது. இதன்பின் புலிகளின் நிர்வாகத்தில்தான் இரண்டு கிராமத்திலும் மீண்டும் உறவு வலுப்பட்டது. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள முரண்பாட்டையடுத்து, இரண்டு கிராமமும் பதற்றமான நிலையில் இருக்கின்றன. கிராமத்தவர்களிற்குள் உறவு மீண்டும் துளிர்க்க பல வருடங்கள் ஆகலாம்.**

சமரசமாக பேசித்தீர்க்க புதிய ஜனநாயக கட்சி ஏன் தயங்குகிறது?

இதற்கு சரியான காரணம் தெரியவில்லை. ஆனால், கட்சியின் இருப்பையும் நிதிநிலைமையையும் தக்கவைக்கும் முயற்சியாகவும் இருக்கலாம். மயானப் பிரச்சனையை தொடர்ந்து உண்ணாவிரத போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த காலப்பகுதியில் ஒவ்வொரு குடும்பத்திடமும் இருந்து கட்சி தினமும் குறைந்த பட்சம் நூறு ரூபா வசூலித்தது. அதிகமாக பணம் கொடுத்தவர்களும் இருக்கிறார்கள்.

பிரச்சனைகளை பேசித்தீர்க்க வாய்ப்பிருந்தும் அதை உதறித்தள்ளி, வன்முறை மூலம் முரண்பாடுகளை ஊக்குவித்து தீர்வுகாண முயற்சிக்கும் உலகின் ஒரேயொரு மார்க்சிச கட்சியாக புதிய ஜனநாயக கட்சியே இருக்கும். புத்தூர் மயான பிரச்சனையை இலகுவாக தீர்க்க வழியிருந்தும், புதிய ஜனநாயக கட்சி இடியப்ப சிக்கலாக்கியுள்ளது. சொந்த கட்சி நலன், பிரமுகர்களின் நலன்களிற்காக பல கிராமங்களிற்கிடையிலான உறவில் தீ வைக்கப்பட்டுள்ளது.

## சிந்தனைத் துளிகள்

உண்மையான நண்பர்கள் நம் மகிழ்ச்சியை இரண்டு மடங்காக மாற்றுகிறார்கள். அதேநேரத்தில் துன்பத்தை பாதியாக மாற்றிவிடுகிறார்கள்

- தோமஸ் அல்வாஎடிசன்

கனவுகள் எல்லாம் நனவாகும் நிறைய காயங்களுக்கு பிறகு

- சார்லிசாப்ளின்

## இந்தவார பாடசாலை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (1AB)
மாணவர்கள் 2130
ஆசிரியர்கள் 124
அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன்
மொழிமூலம் தமிழ், ஆங்கிலம்
ஆரம்பம் 1816
பணிக்கூற்று இறைவனின் அதி உன்னத மகிமைக்காக
வகுப்புக்கள் தரம் 113 வரை
வகை ஆண்கள் பாடசாலை

## கணக்கு புதிர் 2

1.
2 × 3 = 36
3 × 4 = 144
எனின்
4 × 5 = ?


2.
8 = 56
7 = 42
6 = 30
5 = 20
3 = ?

கணக்கு புதிர் 1 இன் விடைகள்.
1.
2.
கடந்த வார விடைகள்
1.200 2.8

## அறிந்துகொள்வோம்

- உலக அளவில் மிகப்பெரியகொமிக்ஸ் நிறுவனமான DC நிறுவனம் இந்துக் கடவுளான விநாயகரை வைத்து Blue Lantern என்ற பெயரில் ஒரு புதிய கதாபாத்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளது.
- 1999 ம் ஆண்டு Hotmail மின்னஞ்சல் தளத்திலிருந்து ஓர் பாதுகாப்பு குறைபாட்டை Hackers வெளியிட்டனர். இக்குறைபாடு என்னவெனில், எந்தவொரு கணக்கையும் 'நா 'என்ற கடவுச்சொல்லைப் பயன்யடுத்தி கணக்கினுள் செல்ல அனுமதிக்கப்பட்டதே ஆகும்.
- ஒரு காற்றாலைச்சுழலியின் மூலம் ஒரு ஆண்டுக்கு 64 பறவைகள் வரை இறப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. உதாரணமாக ஸ்பெயின் நாட்டில் பெர்போன் என்ற இடத்தில் அமைந்துள்ள காற்றாலையால் ஆண்டுக்கு 64 பறைவைகள் இறக்கின்றன. அதே நேரத்தில் தங்கள் ஆய்வுக்காலத்தில் பறவைகளின் மரணங்கள் நிகழாத காற்றாலைகளும் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



# 60 நொடிகளில் இணையத்தில் என்ன நடக்கிறது

**60** நொடிகளில் இணையத்தில் (Internet) என்னவெல்லாம் நடக்கிறது தெரியுமா...? தற்போது இணையத்தில் கிட்டத்தட்ட 2.700.000.000 பேர்கள் இணைக்கப் பட்டிருக்கின்றனர். இந்த எண்ணிக்கை ஒவ்வொரு நிமிடமும் 150 பேர்களால் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் எல்லோருமே Skype ஊடாக உங்கள் உறவுகளுடன் பேசியிருப்பீர்கள். இதில் 60 நொடிகளில் மட்டும் 1.400.000 உரையாடல்கள் நடைபெறுகின்றன. இதுவே ஜெர்மனியில் இருக்கும் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான மியூனிக்கில் வாழும் அனைவருமே, ஒரே நெரத்தில் பேசுவது போல் இருக்கும்.மேலும் 60 நொடிகளில் 204.000.000 மின்னஞ்சல்கள் (Email) அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு அஞ்சலையும் தனித்தனியாக ஒவ்வொரு தாளில் (0,1 mm மொத்தம்) அச்சடித்து ஒரு புத்தகமாகக் கோர்த்தால், அந்தப் புத்தகம் 20.4 km உயரத்தைக் கொண்டதாக இருக்கும். Twitter எடுத்துக்கொண்டால் ஒரே ஒரு நிமிடத்தில் மட்டுமே 280.000 செய்திகள் வெளியிடப்படுகின்றன. ஆச்சரியமாக இல்லையா...? சரி, மேலும் பார்ப்போம்! Amazon எனப்படும் Online வர்த்தகத் தளத்தில் ஒரு நிமிடத்தில் 130.000 டாலர்களுக்கு வியாபாரம் நடைபெறுகிறது. இதே நிமிடத்தில் இணையத்தில் 120.000 புகைப்படங்கள் பதிவேற்றி பகிர்ந்துகொள்ளப் படுகின்றன. Facebookஇல் இதே நேரத்தில் 1.800.000 தடவை Like Button கிளிக் பண்ணப்பட்டு அதைவிட 41.000 comments எழுதப்படுகின்றன. உலகின் மிகப்பெரிய வீடியோ தளமான YouTube இல் மட்டும் ஒரே நிமிடத்தில் 100 மணிநேர வீடியோ பதிவேற்றப் படுகின்றது. இதைவிட, 60 நொடிகளில் எல்லாத் தனிப்பட்ட இணையப் பயனர்களாலும் 1.000 TeraByte பதிவிறக்கி, பதிவேற்றப் படுகின்றது. இதுவே 550.000.000 புத்தகங்களுக்கு சமமாக உள்ளது. இது போதாது என்று ஒரு நிமிடத்தில் 2.000.000 தடவை Google ஊடாக இணையத்தளங்கள் (Websites) தேடப்படுகின்றன.இது எல்லாமே ஒரே ஒரு நிமிடத்தில் மட்டுமே நடக்கிறது.



# அறிஞர்களின் வாழ்விலிருந்து

**சீ**ன நாட்டு தத்துவஞானி கொன்பியூசியஸ் ஒருநாள் சீடர்களை அழைத்து, "இந்த மனிதர்களிடம் எவ்வளவுதான் நற்போதனைகளை எடுத்துச் சொன்னாலும் கடைப்பிடிக்க மாட்டாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இனி நான் மௌனமாக இருந்துவிடப் போகிறேன்" என்றார். இதனை கேட்ட சீடர்கள், "குருவே நீங்கள் மௌனமாக இருந்து விட்டால், மற்றவர்களுக்கு எதையும் உபதேசிக்க முடியாது. அது மட்டுமல்லாமல் நாங்களும் எதையும் உங்களிடமிருந்து கற்க முடியாதவர்களாய் ஆகிவிடுவோமே" என்றார்கள். அதற்கு அவர் சொன்னார், "ஆகாயம் பேசுகிறதா? இல்லையே! என்றாலும் பருவகாலங்கள் தவறாமல் மாறிமாறிவருகின்றன இல்லையா என்ன? இன்னும் அதில் வெவ்வேறு விடயங்கள் உருவாக்கப்படுகின்றன, அப்போதெல்லாம் வானம் பேசிக் கொண்டா இருக்கிறது? என்றார். இதனைக் கேட்ட சீடர்கள் மௌனமானார்கள். "ஆடம்பரத்தால் சாதிக்க முடியாததைக்கூட அமைதி சாதித்துவிடும்" என்றார்.




# அறிஞர்களின் வாழ்விலிருந்து...

**வி**ஞ்ஞானிசேர் சி.வி.ராமன் சொற்பொழிவாற்ற இருந்த ஒரு கூட்டத்திற்குமைசூர் சமஸ்தானத்தின் மிக உயர்ந்த அதிகாரி ஒருவர் தலைமை ஏற்க ஏற்பாடாயிருந்தது. கூட்டம் ஆறு மணிக்கு தொடங்க வேண்டும் விஞ்ஞானி சி.வி.ராமன் பத்துநிமிடங்களுக்கு முன்னதாகவே வந்துவிட்டார். ஆனால் தலைமை தாங்க வேண்டிய நண்பரோ வந்த பாடில்லை. சிறிது நேரத்தில் மணிக்கூடு 6 மணி அடித்தது. கூட்ட ஒருங்கமைப்பாளர்களுக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை! சிறிது நேரம் பொறுத்து பார்த்த சி.வி.ராமன். பிறகு எழுந்து நின்று வெறுமாய் இருந்த தலைவர் இருக்கையை நோக்கி "இதுவரை தரிசனம் அளிக்காத தலைவர் அவர்களே" என்று கூறி தமது சொற்பொழிவை துவக்கி விட்டார். பல நிமிடங்கள் கடந்த பிறகு தலைவர் வந்தார். கப்சிப் என்று தலைவர் இருக்கையில் அமர்ந்தார். தனது தவறை எண்ணி வியர்த்துக்கொட்டியது அவர் உடல். அதேசமயம் சி. வி. ராமனின் நேரந் தவறாமையை எல்லாரும் போற்றினார்கள்.




## இந்தவார பாடசாலை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (1AB)
மாணவர்கள் 2130
ஆசிரியர்கள் 124
அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன்
மொழிமூலம் தமிழ், ஆங்கிலம்
ஆரம்பம் 1816 பணிக்கூற்று இறைவனின் அதி உன்னத மகிமைக்காக
வகுப்புக்கள் தரம் 113 வரை
வகை ஆண்கள் பாடசாலை



# படித்துக்கொண்டே பார்ட் டைமாக வேலை செய்ய விருப்பமா?

## வருமானம் தரும் சில துறைகள்

ரமணன்

இப்பொழுது மாணவர்கள் மிக அட்வான்ஸாக சிந்திக்கிறார்கள். பல்கலைகழகம் வரை படித்து, அரசாங்கம் நியமனம் தந்ததன் பின்னர்தான் வேலைக்கு போவோம் அதுவரை வீட்டில் “தண்டச்சோறு” என்ற அப்பாவின் திட்டலை வாங்கிக்கொண்டிருப்போம் என்ற பழைய கால போர்முலாவை யெல்லாம் தூக்கி வீசிவிட்டார்கள். இப்பொழுது படித்துக்கொண்டு வேலை செய்து, கெத்து காட்ட தொடங்கி விட்டார்கள் இளசுகள்.

ஆனால் பகுதிநேரமாக வேலைசெய்ய எந்ததுறைகள் உகந்தவை என்ற தெளிவு மாணவர்களிடம் குறைவு. குறுகியகால பயிற்சி, அதிக வருமானம் என்ற கலவையில் இந்த பகுதியை தயார் செய்துள்ளோம். க.பொ.த உயர்தரம் முடிந்த மாணவர்கள், அடுத்த கட்டத்திற்குள் நுழைவதற்குள் இதில் ஏதாவதொரு குறுகியகால தொழில் பயிற்சியை பெற்றால், உயர்கல்வியை கற்றுக்கொண்டே பகுதிநேரமாக வேலை பார்க்கலாம்.

### Refrigeration and Air Conditionning Mechanic

மாணவர்கள் படித்துக்கொண்டு சனி, ஞாயிறு தினங்கள், விடுமுறை தினங்கள், ஓய்வு நேரங்களில் பணிபுரிவதற்கான சந்தர்ப்பத்தினை இத் தொழில்துறை தருகின்றது. படித்துக்கொண்டே மாணவர்கள் ஒரு பகுதிநேர சுயதொழிலாக இதனை அமைத்துக்கொள்ள முடியும்.

இக் கற்கைநெறியினை இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, தொழில் நுட்பக் கல்லூரி, கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை பயிற்சி நிலையங்களில் பகுதிநேரமாகவும் முழுநேரமாகவும் கற்றுக்கொள்ளலாம். முழுநேரமாக 1 வருடக் கற்கைநெறியாகவும் பகுதிநேரமாக 4 மாதக் கற்கைநெறியாகவும் கற்பிக்கப்படுகின்றது. முழுநேரக் கற்கையாக இருந்தால் இலவசமாக கற்கலாம். பகுதிநேரமாக கற்பதாக இருந்தால் கற்கைநெறிக் கட்டணமாக 10,000 ரூபா தொடக்கம் 15,000 ரூபா வரை கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும்.

முழுநேரக்கற்கை முடிவில் தேசிய தொழிற்தகைமை சான்றிதழை குறித்த கற்கையில் பெற்றுக்கொள்ள முடியும். பகுதிநேரக் கற்கையாக இருந்தால் கற்கையை பூர்த்தி செய்ததற்கான சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

எவ்வாறு இருப்பினும் கற்கை முடிந்த பின்பு அரச, தனியார் அலுவலகங்கள், நட்சத்திர விடுதிகள், வளிச்சீராக்கி மற்றும் குளிரூட்டி விற்பனை நிலையங்களிலும் சுயமாகவும் நீங்கள் விரும்பும் நேரத்தில் பணிபுரியலாம். 1000 ரூபா முதல் 2000 ரூபா வரை நாள் சம்பளமாக பெற்றுக்கொள்ள முடியும். க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தவர்களும் இக்கற்கைநெறியை தொடர விண்ணப்பிக்க முடியும். எதிர்காலத்திலும் நல்ல வருமானம் தரும் தொழிலாக நிச்சயம் விளங்கும்.

### Electrician

இக் கற்கைநெறியினை இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, தொழில் நுட்பக் கல்லூரி, கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை பயிற்சி நிலையங்களில் பகுதிநேரமாகவும் முழுநேரமாகவும் கற்றுக்கொள்ளலாம். முழுநேரக் கற்கையாக இருந்தால் இலவசமாக கற்கலாம். பகுதி நேரமாக கற்பதாக இருந்தால் கற்கை நெறிக் கட்டணமாக 10,000 ரூபா தொடக்கம் 15,000 ரூபா வரை கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். 6 மாத காலத்திற்குள் முழுநேரமாகவோ அல்லது பகுதிநேரமாகவோ கற்கைநெறியை பூர்த்தி செய்ய முடியும். முழுநேரக்கற்கை முடிவில் தேசிய தொழிற்தகைமை சான்றிதழை குறித்த கற்கையில் பெற்றுக்கொள்ள முடியும். பகுதிநேரக் கற்கையாக இருந்தால் கற்கையை பூர்த்தி செய்ததற்கான சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

கற்கை முடிவில் வீடுகளில், தொழிற்சாலைகளில், அரச, தனியார் அலுவலகங்களில் போன்ற தேவையான அனைத்து இடங்களிலும் தொழிலுக்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. பகுதிநேரமாக விரும்பும் நேரத்தில் படித்துக்கொண்டே பணிபுரிவதற்கான நல்ல சந்தர்ப்பத்தினை இக்கற்கைநெறி கொடுக்கின்றது. நாளொன்றுக்கு 1000 ரூபா தொடக்கம் 2000 ரூபா வரை சம்பளம் பெற கூடியதான தொழில்வாய்ப்பாகும். வீடுகளில் இருந்தபடியே ஓடர்களை பெற்றுக் கொள்ளலாம். க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தவர்கள் இக் கற்கைநெறியை தொடர விண்ணப்பிக்க முடியும்.

### Hospitality Management

தொழிற்பயிற்சி அதிகார சபை, இலங்கை சுற்றுலா முகாமைத்துவ நிறுவனம், தனியார் நட்சத்திர விடுதிகள் என்பவற்றில் பகுதிநேரமாக இக்கற்கைநெறியை கற்கலாம். 1 வருடத்திற்குள் கற்கைநெறியை பூர்த்திசெய்ய கூடியதாக உள்ளது. கற்கைநெறிக் கட்டணமாக 20,000 ரூபா வரை அறவிடப்படுகின்றது. தொழிற்பயிற்சி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா முகாமைத்துவ நிறுவனங்களில் முழுநேரமாக இலவசமாக கற்கலாம்.

கற்கைமுடிவில் நட்சத்திர விடுதிகளில் வரவேற்பு, அறைபராமரிப்பு, சமையல், உணவு பரிமாறுதல் துறைகளில் பகுதி நேரமாகவும் இரவு வேளைகளிலும் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பங்களை கொடுக்கின்றது. மாதாந்தம் 10,000 ரூபா தொடக்கம் 20,000 ரூபா வரை ஊதியத்தை கொடுக்கும் சிறந்த தொழில்துறையாக உள்ளது.

இக் கற்கைநெறிக்கு அடிப்படை ஆங்கில அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது. க.பொ.த சாதாரணதரம் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

### Out Bout Engine Mechanic

இக் கற்கைநெறியை பகுதிநேரமாகவும் முழுநேரமாகவும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் என்பன வழங்குகின்றன. முழுநேரமாக இலவசமாகவும் பகுதி நேரமாக கட்டணம் செலுத்தியும் கற்கைநெறியை பூர்த்தி செய்ய முடியும். 13,000 ரூபா வரை கட்டணம் செலுத்த வேண்டும்.

பகுதிநேரமாக பணிபுரிவதற்கான சந்தர்ப்பத்தினை இக்கற்கைநெறி வழங்குகின்றது. வெளியிணைப்பு படகு இயந்திரம் திருத்தும் கடைகள் மற்றும் சுயமாகவும் விரும்பும் நேரத்தில் திருத்திக் கொடுக்கலாம்.

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருந்தால் இக் கற்கைநெறியை தொடரமுடியும். 1 வருடத்திற்குள் இக் கற்கைநெறியை முழுநேரமாகவும் பகுதி நேரமாகவும் பூர்த்திசெய்ய முடியும். நாள் ஒன்றுக்கு 1500 ரூபா வரை உழைக்க முடியும். வீட்டில் ஓய்வாக நேரம் கிடைக்கும் போதெல்லாம் இத்தொழிலை மேற்கொள்ள முடியும்.

### Accounting Technicians

க.பொ.த சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இக் கற்கைநெறியை முழுநேரமாக 01 வருடத்தில் கற்கமுடியும். கற்கை முடிந்த பின்னர் பகுதி நேரமாகபணிபுரியலாம். இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிகளில் இலவசமாகவும் கற்கைநெறியை பூர்த்தி செய்யமுடியும்.

கற்கை முடிவில் கணக்காய்வு நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் நிறுவனங்கள், நிதி நிறுவனங்களில் பகுதிநேரமாக தொழிலை பெற்றுக்கொள்ள முடியும்.

மாதாந்தம் 20,000 வரை சம்பளம் பெறக்கூடிய தொழிற்துறையாக உள்ளது. க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது கணிதம், ஆங்கிலம், தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். தேசிய தொழில் தகைமை சான்றிதழையும் குறித்த கற்கையில் பெற்றுக்கொள்ள முடியும்.

### Marketting

க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் கணிதம், தமிழ், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். 01 வருட முழுநேரக்கற்கைநெறி ஆகும். இதனை இலங்கை தொழில்நுட்ப கல்லூரிகளில் தொடரமுடியும். இலவசமாக கற்கையை பூர்த்தி செய்யமுடியும்.

கற்கை முடிவில் தனியார் நிறுவனங்களின் சந்தைபடுத்தல்துறை, உற்பத்தி கம்பனிகளின் சந்தைப்படுத்தல் பிரிவு, விளம்பரம் சேகரிப்பு, விளம்பரப்படுத்தல் துறைகளில் சந்தைப்படுத்தல் பிரதிநிதியாக பகுதிநேரம் படித்துக்கொண்டு வேலை செய்ய முடியும்.

இந்ததுறையில் வருமானத்தை வரையறுக்க முடியாது. மாதாந்தம் 15,000 ரூபாவும் வருமானம் பெறலாம். திறமைசாலிகள் 150,000 வரையும் வருமானம் பெறலாம். க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது கணிதம், ஆங்கிலம், தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். அரச தனியார் நிறுவனங்கள், ஊடக நிறுவனங்களில் கவர்ச்சிகரமான வருமானத்துடன் பகுதி நேரமாக தொழில் செய்யலாம். வேலை செய்ய குறிப்பிட்ட நேர வரையறையும் கிடையாது.

தேசிய தொழில் தகைமை சான்றிதழையும் குறித்த கற்கையில் பெற்றுக்கொள்ள முடியும்.

### விமானத்தில் மீட்கும் திட்டம்

# தப்பிச்செல்ல கேட்ட சாள்ஸ் அன்ரனி... பிரபாகரன் சொன்ன ஒரே வார்த்தை பதில்!



ஸ்ரான்லி பிருந்துவி

*2009 ஜனவரி.*

முள்ளிவாய்க்காலில் கொத்துகொத்தாக மக்கள் கொல்லப்பட்டு கொண்டிருந்தனர். அரசு அறிவித்த மூன்றாவது பாது காப்பு வலயத்திற்குள் கனரக ஆயுதங் களின் அகோர தாக்குதலில் வகை தொகையில்லாமல் மக்கள் கொல்லப்பட்டு கொண்டிருந்த சமயம்.

மக்களின் உயிரிழப்புக்கள் ஏற்படுத்திய தாக்கம் சர்வதேச தலையீட்டை இந்த விடயத்தில் கோரியது. உலகளவில் பகிரங்கமாக நடந்த பேச்சுகளிற்கு மேலதிகமாக சில இரகசிய முயற்சிகள் நடந்தன. அவற்றில் ஒன்றைப்பற்றி இதில் குறிப்பிடுகிறேன்.

நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அப்போது சமரச முயற்சிகளில் அதிக ஈடுபாடு காட்ட தொடங்கியிருந்தார். புலிகளை சரணடைய வைத்து, யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதே எரிக் சொல்ஹெய்மின் நோக்கம். இதன் மூலம் அழிவுகளை தடுக்கலாமென அவர் நினைத்தார்.

இதற்குள் புலிகள் தரப்பில் ஒரு மாற்றமொன்று நிகழ்ந்திருந்தது. சில குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வெளிநாட்டு பொறுப்பாளர் என்ற பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டிருந்த கே.பி மீண்டும் அந்த பொறுப்பிற்கு பிரபாகரனால் நியமிக்கப்பட்டிருந்தார். வன்னிக்கு ஆயுதக்கப்பல்கள் வர முடியாத நெருக்கடி, யுத்தத்தை நிறுத்த தேவை யான சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்த என பல காரணங்களால் இந்த நியமனம் நிகழ்ந்தது. கே.பி சர்வதேச பொறுப்பாளரானதும் ஏற்கனவே புலிகளுடன் நேசசக்தியாக இருந்த நாடுகளுடன் ஒரு சுற்று பேச்சு நடத்தினார். தென்னாபிரிக்கா, பர்மா, வெனிசூலா போன்ற நாடுகள் அப்போது புலிகளுடன் நல்ல நெருக்கமாக இருந்தன.

புலிகளின் தலைவர் பிரபாகரனையும் முக்கிய தலைவர்களையும் இலங்கையில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றி ஏதாவதொரு நாட்டில் தங்கவைப்பதுதான் கேபியின் திட்டம்.எப்படி வெளியேற்றுவது, எங்கே தங்கவைப்பது, அதற்கு பின் என்ன செய்வதென்பதைதான் திட்டமிட வேண்டும்.கேபியின் இந்த நடவடிக்கையின் பின்னால் இன்னொரு அரசியல் அர்த்தம் இருந்தது. அதனை இன்னொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிடுகிறேன்.

விடுதலைப்புலிகளின் தலைவரும், தளபதிகளும் வன்னியைவிட்டு வெளியேற தயாராக இருக்கிறார்கள், அவர்களை பாதுகாப்பாக அகற்றுவதன் மூலம் யுத்தத்தை நிறுத்தி உயிரிழப்புக்கள தடுக்கலாமென கே.பி சொன்ன தகவலையடுத்து, எரிக் சொல்ஹெய்ம் உற்சாகமாக களமிறங்கினார். உடனடியாக மலேசியாவிற்கு ஒரு இரகசிய பயணம் மேற்கொண்டார். புதுக்குடியிருப்பிற்கு நெருக்கமாக இராணுவம் வந்து கடுமை யான யுத்தம் நடந்து கொண்டிருக்க, கோலாலம்பூரில் உள்ள நட்சத்திர விடுதியொன்றில் கே.பியும், சொல் ஹெய்மும் இரகசிய பேச்சில் ஈடுபட்டனர்.

புலிகளின் தலைமையை யுத்த வலயத்திற்கு வெளியில் எடுப்பது, ஏனைய போராளிகளை இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்குள் எப்படி கையாள்வதென்பதை ஆராய்வது, பொதுமக்களை பாதுகாப்பாக மீட்டு மீள்குடியேற்றுவது தொடர்பாக ஒரு இரகசிய திட்டம் தயாரிப்பதென அங்கு முடிவுசெய்யப்பட்டது. திட் டத்தை தயாரிக்கும் பொறுப்பு கே.பியிடம் விடப்பட்டது. திட்டத்தை தயாரித்து, புலிகளின் சம்மதத்தை பெற்றபின் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த கட்ட நடவடிக்கையை செய்வதென திட்டமிடப்பட்டது.

அப்பொது கே.பி வன்னியில் நடேசன், புலித்தேவனுடன்தான் அதிகமாக பேசிக் கொண்டிருந்தார். சூசை, பொட்டம் மானுடனும் ஓரளவு பேசினார். பிரபாகரன் மிகச்சில சந்தர்ப்பங்களில்தான் பேசினார். நடேசன், புலித்தேவன், சூசை போன்றவர்கள் ஒரு சமரச முயற்சியை நோக்கி செல்லலாமென்றநிலைப்பாட்டிற்கு வந்திருந்தனர். சில சந்தர்ப்பங்களில் கே.பி, பிரபாகரனை தொடர்புகொள்ள முயன்றபோதும் பிரபாகரன் தொடர்பில் வருவதில்லை. 2002 இல் புலிகளின் சர்வதேச பொறுப்பாளர் பொறுப்பிலிருந்து கே.பி அகற்றப்பட்ட பின்னர், அவர் இலங்கை புலனாய்வு ஏஜெண்டுகளின் கட்டுப்பாட்டு வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டு விட்டார் என புலிகளின் புலனாய்வுதுறை ஏற்கனவே பிரபா கரனை எச்சரித்திருந்தது. செய்மதி தொலைபேசியின் ஊடாக பேசினாலும் சில சமயங்களில் இருப்பிடம் கண் காணிக்கப்படலாமென பிரபாகரன் நினைத்தார்.

கே.பி முதலில் தயாரித்தது ஒரு அதிரடி திட்டம். மலேசியா அல்லது தாய்லாந்தில் இருந்து கடல் விமானம் அல்லது சிறியரக விமானமொன்றை அனுப்பி முல்லைத்தீவின் கொக்கிளாய், நாயாறு பகுதிகளில் அல்லது கேப்பாபிலவு ஓடுபாதையில் தரையிறக்கி பிரபாகரனை ஏற்றிக்கொண்டு செல்வது. கள நிலவரத்தின் படி எந்த விமானம் இறங்க வசதியெற்படுகிறதோ, அதற்கு தகுந்ததாக ஆட்களின் எண்ணிக்கை அமையுமென்பதே அந்த திட்டம். யுத்த வலயத்திற்குள் பிரபாகரன், மதிவதனி, சாள்ஸ் அன்ரனி, துவாராகா, பாலசந்திரன் என பிரபாகரன் குடும்பத்திலேயே ஐவர் இருந்தனர். வன்னியிலிருந்து அழைத்து வரப்படுபவர்களை பர்மாவில் தங்க வைப்பதென்பதுதான் கே.பியின் திட்டம். இந்த திட்டம் பிரபாகரனிற்கு தெரியப்படுத்தப்படவுமில்லை. ஆனால் பிரபாகரனை எப்படியாவது வெளியேற வைப்பது தனது பொறுப்பென பிரபாகரனின் மகன் சார்ள்ஸ் அன்ரனி கே.பிக்கு உறுதியளித்திருந்தார்.

பர்மா அப்பொழுது புலிகளுடன் நல்ல நெருக்கத்தில் இருந்தது. ஆனால், வன்னி யுத்தத்தின் இறுதிக்காலத்தில் பர்மா இராணுவ ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் கிடுக்குப்பிடிக்குள் சென்றுவிட்டனர். அதனால் அமெரிக் காவை பகைக்க அவர்கள் விரும்ப வில்லை. அதனால் திட்டம் சரிவரவில்லை.

அப்போது இலங்கைக்கான அமெரிக்க தூதராக றொபேர்ட் பிளெக் (Robert Blake) பணியாற்றினார். றொபேர்ட் பிளேக், அப்போதைய போர்நிறுத்த கண் காணிப்புகுழு தலைவர் ரோ ஹற்றம், செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகள் உள்ளடங்கியவர்கள் ஒரு திட்டத்தை தயாரித்திருந்தனர். அமெரிக்க போர்க் கப்பல் முல்லைத்தீவிற்கு அருகில் நங்கூரமிட்டு நிற்க, சிறிய படகுகளில் யுத்தவலயத்திற்குள் சிக்கியவர்களை ஏற்றி, கடற்படையிடம் ஒப்படைப்பது, அவர்களை அரச செயற்திட்டத்தின்படி கையாள்வதென்பது இந்த திட்டத்தின் சாரம்.

இதற்குள் இலங்கையரசு சார்பில் பஷில் ராஜபக்ச, ரோஹித போகொல்லாஹம போன்றவர்களின் ஊடாக சில திட்டங்கள் முன்வைக்கப்பட்டது. அமெரிக்கா கடற்படையால் ஒப்படைக்கப் படுபவர்களில் போராளிகள் பிரித்தெடுக் கப்படுவார்கள். பொதுமக்கள் இடைத் தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டு கிரமமாக சொந்த இடங்களிற்கு அனுப் பபடுவார்கள். சதாரண போராளிகளை புனர்வாழ்விற்கு உட்படுத்துவது, முக்கிய தளபதிகளை சட்ட நடவடிக்கை உட்படுத்துவது என்பது இந்த திட்டம். கோத்தபாய தவிர்ந்த ஏனைய அரச உயர்மட்டம் இந்த திட்டத்திற்கு சம்மதித்தது.

இதற்கடுத்ததாக, கே.பி ஒரு மாஸ்ரர் பிளான் போட்டார். இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் சமயத்தில் பிரபாகரன், பொட்டம்மான் மற்றும் ஒரு சில போராளிகள் மொத்தமாக இருபதிற்கு உட்பட்டவர்கள் இராணுவ முற்றுகைக்குள் இருந்து வெளியில் வருவது, கடலில் சரணடையும் திட்ட பரபரப்பில் எல்லோரும் இருக்க, முக்கிய தலைவர்களை சிறிய விமானமொன்றில் ஏற்றி தாய்லாந்திற்கு கொண்டு வருவது, அங்கிருந்து ஆபிரிக்க நாடொன்றிற்கு அழைத்து செல்வது. இதற்காக ஆபிரிக்க நாடொன்றுடனும் பேசி திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு விட்டது.

களத்தில் இருந்த புலிகளின் முக்கி யஸ்தர்கள் சாள்ஸ் அன்ரனி, நடேசன் போன்றவர்களும் இதற்கு சம்மதித்து விட்டனர். அனைத்து தரப்பினரின் திட்டங்களையும் உள்ளடக்கி, தனது இரகசிய திட்டத்தையும் இணைத்து எழுத்துமூல ஆவணமாக கே.பியால் பிரபாகரனிற்கு திட்டம் அனுப்பிவைக் கப்பட்டது. இது மார்ச் மாதம் நடந்தது.

மார்ச் நடுப்பகுதியில் புலிகள் புதுமாத்தளன், பொக்கணை, வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட சிறிய துண்டுநிலப்பகுதிக்குள் அடக் கப்பட்டிருந்தனர். முல்லைத்தீவிலிருந்து வலைஞர்மடம் செல்லும் வீதியில் உண்டியல் பிள்ளையார் கோயிலுக்கு அப்பால் மாமரங்களால் சூழப்பட்ட சிறிய கல்வீடொன்றின் அறையொன்றுக்குள் பனங்குற்றிகளால் அமைக்கப்பட்ட பாது காப்பரணிற்குள் பிரபாகரன் தங்கியிருந்தார். ஒரு பின்மாலைப்பொழுதில் அவரிடம் ஆவணத்தை சாள்ஸ் அன்ரனி கொண்டு வந்து கையளித்திருந்தார். மறுநாள் காலையில் தன்னை சந்திக்க வருமாறு கூறி சாள்ஸ் அன்ரனியை அனுப்பிவிட்டார்.

தகப்பனாரிடமிருந்து எப்படியான பதில் கிடைக்குமென்ற பரபரப்புடன் சாள்ஸ் அன்ரனி மறுநாள் காலையில் போனார். எந்த சலனமுமில்லாமல் ஆவணத்தை பிரபாகரன் திருப்பிக்கொடுத்தார். என்ன பதில் சொல்வதென சாள்ஸ் அன்ரனி கேட்டார். ஆவணத்தின் பின்பக்கத்தில் எழுதியுள்ளதாக கூறினார் பிரபாகரன்.

ஆவணத்தை திருப்பி பார்த்தார் சாள்ஸ் அன்ரனி. ஒரு வரியில் எழுதப்பட்டிருந்தது "நான் இதை ஏற்றுக்கொள்ளவில்லை".

இந்த பதிலால் அதிகம் குழம்பியது அமெரிக்க தூதர் ரொபர்ட் பிளெக்தான். புலிகளிடம் நீர்மூழ்கி கப்பல்கள் இருந்த நிலையிலும், பிரபாகரன் ஏன் தப்பிக்க நினைக்கவில்லையென்பது பிளெக்கிற்கு இன்றுவரை புரியாதபுதிராக இருக்கிறது. அண்மையில் அவரை சந்தித்த தமிழ்தேசிய கூட்டமைப்பின் எம்.பியொருவருடன் உரையாடிக்கொண்டிருந்தபோதும், இது பற்றி பேசியிருக்கிறார். பிரபாகரன் தப்பிப்போய் பாதுகாப்பாக இருந்துவிட்டு, மீளவும் ஒரு சந்தர்ப்பத்தில் போராட்டத்தை நடத்தியிருக்கலாமல்லவா என கேட்டாராம்.

இறுதியுத்தம் தொடர்பில் ரொபர்ட் பிளெக்கிற்கு உள்ளதை போன்ற கேள்விகள் பலரிற்கு இருக்கிறது. இதற்கெல்லாம் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.


இந்தியாவில் ஆயுதமொன்றை பரீட்சித்து பார்க்கும் பிரபாகரன்




# உக்ரேனில் ஆயுதத்தொழிற்சாலை நிறுவிய புலிகள்!

பீஷ்மர்

வன்னியில் ஆயுதத்தட்டுப்பாடு. நிக்கோபர் தீவுகளிற்கு அருகில் புலிகளின் ஆயுதக்கப்பல் ஒன்று மூன்றரை மாதங்களிற்கு மேலாக கட்டிவைக்கப்பட்டிருந்தது. நிக்கோபரில் நிற்கும் கப்பலையும் கடற்புலிகளையும் முல்லைத்தீவிற்கு அப்பாலான கடற்பரப்பில் சந்திக்க வைக்க வேண்டும். ஆனால் கடற்படையின் புதிய வியூகமொன்று அதற்கு தடையாக இருந்ததாக கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தேன்.

எம்.ஐ 24 ஹெலிகொப்டர்களை கடல்நடவடிக்கையுடன் ஒருங்கிணைக்க ஆரம்பித்திருந்தார்கள். அரசின் இந்த புதிய உத்தியை ஆரம்பத்திலேயே உடைக்க வேண்டும் என புலிகள் நினைத்தனர். இல்லையென்றால், கடற்படையின் மனோதிடம் மேம்படும், இந்தவகையான தாக்குதல் உத்தியை அதிகப்படுத்தி விடுவார்கள் அதன்பின் ஒன்றும் செய்ய முடியாதென நினைத்தார்கள்.

விடுதலைப்புலிகளிடம் இருந்தது எந்தவகையான ஏவுகணையென்பதை கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தேன். சோவியத் ஒன்றியத்தின் தயாரிப்பான sam 7 strela 2 ஏவுகணைகளே புலிகளிடம் இருந்தன. 1992 ஆம் ஆண்டு உக்ரேனில் இருந்து இந்தவகை ஏவுகணைகள் 20ஐ புலிகள் வாங்கினார்கள். தனது ஆதரவு நாடுகளிற்கு முன்னர் இந்த ஏவுகணைகளை இரகசிமாக சோவியத் ஒன்றியம் வழங்கியிருந்தது. அமெரிக்காவிற்கு எதிராக போராட வியட்நாம் போராளிகளிற்கு, சிரிய அரசிற்கு, ஈரானிற்கு, ஈக்குவடோர் புரட்சிப்படைக்கு சோவியத் இரகசியமாக வழங்கியிருந்தது. போராளிக்குழுக்களிற்கு ஏவுகணைகள் செல்வதை எந்த வல்லரசும் விரும்பவில்லை. ஆனால், தத்தமது நலன்களிற்கு ஏற்ப வழங்கி வந்தார்கள்.

பனிப்போரின் முடிவின் பின் அமெரிக்க, ரஸ்யாவிற்கிடையில் நீடித்த பகை ஓரளவிற்கு தணியத் தொடங்கியது. அணு ஆயுதங்கள், ஏவுகணைகள், விமானங்கள் உள்ளிட்ட போர்த்தளபாடங்கள் ரஸ்யாவில் இருந்து வெளியில் செல்ல வாய்ப்பிருப்பதாக அமெரிக்கா கருதியதால், ரஸ்யாவுடன் அமெரிக்காவே நெருக்கத்தை ஏற்படுத்தி, அரசுகளிற்குள் ஒரு உடன்பாட்டிற்கு வந்தனர். இதன்படி இரண்டு நாட்டுபோர்த்தளபாடங்களையும் போராளிகளிற்கும், குழப்படிக்கார


சூடை படகுகள்

நாடுகளிற்கும் விற்பதில்லை என்பதே அந்த எழுதப்படாத உடன்பாடு. உக்ரேனில் இருந்த ஆயுதங்களை வெளியில் செல்லவிடாமல் தடுக்கும் பொறுப்பையும் அமெரிக்காவே கவனித்தது. படிப்படியாக அந்த நாடு நேட்டோவிற்குள் கொண்டு வரப்பட்டதற்கு சமாந்தரமாக, அந்த நாட்டு இராணுவத்தை ஒரு ஒழுங்குமுறைக்குள் கொண்டு வர அமெரிக்கா உதவியது. முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஆயுத தொழிற்சாலைகள் பல உக்ரேனிலேயே இருந்தன. உக்ரேனில் இரும்பு உற்பத்தி அதிகமாக இருப்பதால், ஆயுத உற்பத்தி அங்கு நடந்தது. சோவியத் ஒன்றியத்தின் உடைவின் பின் அங்கிருந்த ஆயுத தொழிற்சாலைகளை இராணுவ உயரதிகாரிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். அந்த தொழிற்சாலைகள் இராணுவ அதிகாரிகளின் தனிப்பட்ட சொத்தாகி, கறுப்பு சந்தைக்கு ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாக மாறின. இதன்மூலம் அவற்றை உரிமையாக்கிய இராணுவ அதிகாரிகள் கோடீஸ்வரர்களாக மாறினர்.

இந்த இடத்தில் இன்னொரு ஆச்சரியமான தகவலொன்றை சொல்கிறேன். இராணுவ அதிகாரியொருவரிடம் இருந்து புலிகள் ஒரு தொழிற்சாலையை வாங்கி இயக்கினார்கள். புலிகளிற்கு தேவையான ஆயுதங்களுடன், வேறு நாடுகள், இயக்கங்கள், குழுக்களிற்கு தேவையான ஆயுதங்களை தயாரித்தார்கள். முன்னைய பர்மா மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பல்வேறு தடைகள் விதித்திருந்தன. இதில் முக்கியமானது ஆயுதத்தடை. பர்மாவிற்கு உள்நாட்டிலும், அண்டை நாடுகளுடனும் இராணுவரீதியான சவால்கள் இருந்தன. அதை சமாளிக்க நவீன ஆயுதங்கள் தேவை. ஆனால் உத்தியோகபூர்வமாக வாங்க முடியாது.

இந்த சமயத்தில் புலிகளின் ஆயுதத் தொழிற்சாலை, புலிகளின் கடத்தல் வலையமைப்பு பர்மாவிற்கு ஓரளவு உதவியது. புலிகளிற்கும் பர்மா (மியான்மார்) அரசுக்கும் இடையிலான உறவு ஆழமானது. நெருக்கமானது. இதை மேல்மட்ட இராஜதந்திரிகள் சிலர்தான் தெரிந்து வைத்திருந்தனர். மற்றும்படி வேறு யாராலும் கண்டுபிடிக்க முடியாதபடி இரகசியமாக உறவை பேணினர். புலிகள், பர்மா உறவுபற்றி பின்னர் குறிப்பிடுகிறேன்.

உக்ரேனில் புலிகள் 20 ஏவுகணை வாங்கியதன் பின்னர், உக்ரேனிலிருந்து ஏவுகணைகள் வெளியில் செல்வதை அமெரிக்கா தடுத்து விட்டது. இதனால் இரண்டாம் கட்டமாக புலிகளால் ஏவுகணை வாங்க முடியவில்லை. 20 ஏவுகணைகளை வைத்துக்கொண்டு சமாளிக்க வேண்டிய நெருக்கடி புலிகளிற்கு.

யாழ்ப்பாணத்தில் இரண்டு ஏவுகணைகளை கடாபி விமானங்களின் மீது சுட்டார். 1995இல் நடந்த இந்த சந்தர்ப்பத்தில் இரண்டு விமானங்கள் வீழ்ந்தன. ஏற்கனவே பயிற்சியின் போது கடாபி ஒன்றை செலுத்தியிருந்தார். இரணைதீவு கடலில் பயணிகள் விமானத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் (யாழ்ப்பாணத்தில் இருந்து காயமடைந்த இராணுவத்தினரை ஏற்றியபடி வந்த விமானம் என கருதியே புலிகள் அந்த தாக்குதலை நடத்தியிருந்தனர்), வில்பத்து சரணாலயப்பகுதி தாக்குதல் என்பனவும் இந்த ஏவுகணை மூலமே நடத்தப்பட்டது.

அப்போது புலிகளின் விமான எதிர்ப்பு அணியில் கடாபி, அகிலேஸ், கோணேஸ் ஆகியோரே முக்கியமானவர்களாக இருந்தனர்.

நிக்கோபர் தீவுகளிற்கு அருகில் நின்ற ஆயுதக்கப்பலை முல்லைத்தீவிற்கு அண்மையில் கொண்டுவர புலிகள் முடிவுசெய்தனர். அந்த சமயத்தில் இரவில் முல்லைத்தீவிற்கு அப்பால் கடற்படையின் ஆழ்கடல் ரோந்து கப்பல்கள் தரித்து நிற்கத் தொடங்கிவிட்டன. அதனால் இரவில் ஆயுதக்கப்பலை அங்கு கொண்டு வருவது சிரமம். ஆகவே விடிகாலையில் புறப்பட்டனர்.

1998இன் நடுப்பகுதி. விடிகாலையில் புறப்பட்ட கடற்புலிகளின் படகுகள் ஆழ்கடலிற்கு சென்று ஆயுதங்களை ஏற்றியது. அன்று குறிப்பிட்ட நேரத்திற்கு ஆயுதக்கப்பல் குறித்த இடத்திற்கு வரவில்லை. இப்படியான தாமதங்களினால் ஆயுதங்களை ஏற்றியபடி திரும்பிய கடற்புலிகளின் விநியோக அணி தாமதமாக திரும்பியது. முல்லைத்தீவு கரையை நெருங்க மாலை 3 மணியாகி விட்டது. புலிகளின் விநியோக அணி


உக்ரேனிய ஆயுத தொழிற்சாலையொன்றின் உட்புறம்

ஆழ்கடலிற்கு சென்றதை அவதானித்த கடற்படையினர், புலிகள் திரும்பி வரும்வரை காத்திருந்தனர்.

முல்லைத்தீவை புலிகளின் விநியோக அணிகள் நெருங்க, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலையில் இருந்து கடற்படையினர் திடீரென வந்து விட்டனர். கடற்படையின் வரவை பார்த்து நின்ற கடற்புலிகளின் அணிகள் கடுமையான தாக்குதலை நடத்தினார்கள். புலிகளின் தாக்குதல் உக்கிரம் பெற்ற பின்னர், எம்.ஐ 24 உலங்கு வானூர்தி அங்கு வரவழைக்கப்பட்டது.

கடற்புலிகளின் நீளமான தாக்குதல் படகுகளை சூடை என்றுதான் அழைப்பார்கள். ஒரு சூடை படகில் புலிகளின் விமான எதிர்ப்பு குழுவினர் இருந்தனர். அகிலேஸ், கோணேஸ் ஆகியோர் மூன்று ஏவுகணைகளுடன் இருந்தனர். முதலாவது ஏவுகணை தாக்குதலில் ஒரு உலங்கு வானூர்தி வெடித்து சிதறியது.

அதன்பின் உலங்கு வானூர்திகள் தொலைவில் நின்று தாக்குதல் நடத்தின. உலங்கு வானூர்தியின் கண்மூடித்தனமான தாக்குதலில் விமான எதிர்ப்பு அணியும் சிக்கியது. அகிலேஸ், கோணேஸ் உள்ளிட்ட பலர் காயமடைந்தனர். அகிலேஸின் காலொன்று அகற்றப்பட்டது. கோணேசும் கடுமையான பாதிப்படைந்தார். ஆனால் அன்று கடற்படையின் தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

உக்ரேனில் வாங்கிய sam 7 strela 2 ஏவுகணைகளை புலிகள் எப்படி பாவித்தார்கள்? அதற்கு பயிற்சியளித்தது யார்? இந்த கேள்விகளிற்கு சுவாரஸ்யமான பதில்கள் உள்ளன. இதை அறிவதென்றால் அடுத்த வாரம் வரை பொறுத்திருங்கள்.

(தொடரும்)

### அம்மாச்சியை வைத்து நடக்கும் அரசியல்!

# துமிந்த கேட்பது ஹெல... விக்கி கேட்பது ஈழம்

## சாப்பாட்டுக்கு இத்தனை அக்கப்போரா என கேட்காதீர்கள்!








நம்மாழ்வார்

யாழ்ப்பாணத்தில் வடமாகாணசபை நிர்வாகத்தால் பெயரில்லாத அனாமதேய உணவகமொன்று நடத்தப்படும் சங்கதி ஊரறிந்தது. நிர்வாக பதிவேடுகளில் பெயரில்லாத உணவகமாக அது இருந்தாலும், பொதுமக்களால் அம்மாச்சி உணவகம் என்றுதான் அது அழைக்கப்படுகிறது. ஆனால் உண்மையில் அது அம்மாச்சி உணவகமல்ல. இன்னும் பெயரிடப்படாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. வடமாகாண நிர்வாகத்தால் அதற்கு பெயரிட முடியவில்லையென்பதே இன்றைய யதார்த்தம்.

ஏன் மாகாண நிர்வாகத்தால் அதற்கு பெயரிட முடியவில்லை?

இதற்கு பின்னால் ஒரு கதையிருக்கிறது.

வடமாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர் பாரம்பரிய உணவுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக உணவகமொன்று அமைக்கும் திட்டத்தை அப்போதைய விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் ஆரம்பித்தார். பாரம்பரிய உணவு உற்பத்தியை ஊக்கப்படுத்துவதே இதன் நோக்கம். இதன் முதற்கட்டமாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் (ஹிழிஞிறி) உதவியுடன் வவுனியாவில் ஒரு உணவகம் திறக்கப்பட்டது.

உணவகத்தின் பெயரில் பாரம்பரியத் தன்மை வெளிப்பட வேண்டுமென அம்மாச்சி என்ற பெயரை அப்போதைய விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சூட்டினார். அந்த பகுதிகளில் உள்ள மகளிர் அமைப்புக்கள் உணவகத்தில் சிறிய தொகை வாடகையை செலுத்தி, உணவகத்தில் உணவு தயாரித்து விற்பனை செய்வதே அம்மாச்சி உணவகத்தின் பொறிமுறை. இதனால் உள்ளூரிலுள்ள பெண்கள் வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் பெறலாம். அத்துடன், பாரம்பரிய உணவு உற்பத்திக்கான ஊக்குவிப்பாகவும் அமையும்.

வவுனியாவில் திறக்கப்பட்ட அம்மாச்சி உணவகம் ஓஹோவென்ற வரவேற்பை பெற, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் அம்மாச்சி உணவகங்கள் அமைக்கப்பட்டன.

இயற்கையான முறையில் அதிக சுகாதாரத்துடன் தயாரிக்கப்படும் உணவுகள், மிக மலிவு, ஆரோக்கியம், அரிதாகும் பாரம்பரிய உணவுகள் போன்ற காரணத்தால் மிகவிரைவில் பட்டிதொட்டியெங்கும் அம்மாச்சியின் பெயர் சென்றது.

அறுபது ரூபாய்க்குள் மிகத்திருப்தியான மதிய உணவென்பதையெல்லாம் இந்த காலத்தில் கற்பனை பண்ணவும் முடியாது. அதை அம்மாச்சி உணவகம் வழங்கியது.

மன்னாரிலும் அம்மாச்சி உணவக பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.வடமாகாண சபை நிதியில் இது ஆரம்பிக்கப்பட்டது. இந்த சமயத்தில்தான் யாழ்ப்பாணத்திலும் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மாகாண விவசாய பணிப்பாளர், யாழ்ப்பாண உணவகத்திற்கான நிதியை மத்திய விவசாய அமைச்சிடம் கேட்டு பெற்றுள்ளார். இதுதான் இன்றுவரையான சர்ச்சையின் காரணம்.

உணவக பணிகள் முடிந்து திறப்புவிழா நெருங்கிய சமயத்தில்தான் சர்ச்சை ஆரம்பித்தது. மத்திய அரசின் நிதியுதவியில் அமைக்கப்பட்டதால் விவசாய அமைச்சர் துமிந்த சில்வாவை உணவகத்தை திறந்து வைக்க வேண்டும், ஹெல போஜன என்ற பெயர் வைக்க வேண்டுமென மத்திய விவசாய அமைச்சு அதிகாரிகளால் நிபந்தனை விதிக்கப்பட்டது. ஹெல போஜன சல என்பது, மத்திய அரசின் கீழ் இயங்கும் பாரம்பரிய உணவகங்கள். பல வருடங்களின் முன்பிருந்தே தெற்கில் இந்த திட்டம் நடைமுறையில் உள்ளது. ஹெல என்பதன் அர்த்தம் இலங்கை. போஜன என்பது உணவு. இலங்கையின் உணவு என்பது இதன் அர்த்தம்.

இந்த விவகாரம் சர்ச்சைக்குரியதாக மாறுவதற்கு முன்னரே கடந்த மே மாதம் அளவில், மாகாண விவசாய பணிப்பாளர் மத்திய அரச நிர்வாகத்திற்கு அனுப்பிய கடிதங்களில் அம்மாச்சி என்ற பெயர் பாவிக்கப்படவில்லை. 'பாரம்பரிய' உணவகம் என்ற தலைப்பிலேயே கடிதங்கள் அனுப்பியுள்ளார்.

பின்னர் துமிந்த திசாநாயக்கவை பிரதம விருந்தினராக அழைத்து அம்மாச்சி உணவத்தை திறக்க மாகாண விவசாய அமைச்சு அதிகாரிகள் தயாரான சமயத்தில், அப்போதைய விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலையிட்டு நிகழ்வை இடைநிறுத்தினார். முதலமைச்சர் விக்னேஸ்வரனை பிரதமவிருந்தினராக அழைத்து நிகழ்வை நடத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளார்.

விவசாய அமைச்சராக இருந்த பொ. ஐங்கரநேசன் பதவிவிலகிய பின்னர், மீண்டும் விவசாய அமைச்சின் அதிகாரிகள் உணவகத்தை திறக்க முயன்றனர். விவசாய அமைச்சையும் கவனித்து வந்த முதலமைச்சர் தலையிட்டு நிகழ்வை இடைநிறுத்தியுள்ளார்.

இந்த சம்பவங்களை தொடர்ந்து மத்திய விவசாய அமைச்சர் துமிந்த சில்வா தொலைபேசியில் முதலமைச்சரை தொடர்பு கொண்டு பேசினார். ஹெல போஜன் என்ற பெயரையே வைக்க வேண்டுமென இதன்போது முதலமைச்சரிடம் கூறினார் துமிந்த திசாநாயக்க. இந்த பேச்சின் பின்னர், முதலமைச்சர் கடிதமொன்றை துமிந்த திசாநாயக்கவிற்கு அனுப்பினார். அதில் ஹெல என்பதற்கு இலங்கை என்பதை போல ஈழம் என்றும் பொருள் கொள்ளலாம். ஈழ உணவகம் என்று பெயர் வைக்கலாமென்ற சிபாரிசை முதலமைச்சர் அனுப்பினார்.

அவ்வளவுதான். மறுமுனையிலிருந்து எந்த பதிலும் இல்லை.

அண்மையில் வடமாகாண விவசாய அமைச்சினால் பெருமெடுப்பிலான விவசாய கண்காட்சி திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டிருந்தது. இதன்போது சத்தமின்றி அம்மாச்சி உணவகம் திறக்கப்பட்டு விட்டது!

ஆனால் எந்த பெயரும் அதற்கு வைக்கப்படவில்லை. மத்திய அரசை பகைக்ககூடாதென அதிகாரிகளும்,வடக்கு விவசாய அமைச்சும் நினைப்பதால் எந்த பெயரையும் வைக்கவில்லை. ஆனால் வடக்கு அதிகாரிகளும், விவசாய அமைச்சும் வெளிப்படுத்தும் நல்லெண்ணங்களை மத்திய விவசாய அமைச்சு வெளிப்படுத்துவதில்லை. இதற்கு ஒரு உதாரணம், வடக்கில் மிகப்பற்றாக்குறையாக உள்ள இலங்கை விவசாயசேவை தர அதிகாரிகள் வெற்றிடத்தை நிரப்புமாறு பல கோரிக்கைகள் விடப்பட்டபோதும், மத்திய விவசாய அமைச்சு பாராமுகமாகவே இருக்கிறது. தவிரவும், மத்தியிலிருந்து மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் நிதி இரந்து பெறப்படுவதாக இருக்ககூடாது. அது ஒரு சீரானபொறிமுறையானதாக இருக்க வேண்டும்.

உணவும் தமிழர்களின் ஒரு பண்பாட்டு கூறுதான். உணவு முறை மாற்றமடைவதும் பண்பாட்டு, கலாசார சீரழிவை வேகமாக நிகழ்த்திவிடும். ஒருமித்த இலங்கை கோட்பாடு பற்றிய பேச்சுக்களும், நடவடிக்கைகளும் தீவிரம் பெற்றுள்ள இந்த சமயத்தில், பல்கலாசார அம்சங்களை நிலைநிறுத்தும் ஒரு முயற்சியாகவும் அம்மாச்சியை நோக்கலாம். ஹெல போஜன திட்டத்தில் இலங்கை பாரம்பரிய உணவுகள்தான் விற்பனை செய்யப்படுகின்றன. அதில் தமிழ் பாரம்பரிய உணவுகளிற்கு இடமில்லை. ஹெல போஜனின் பெயரில் வடக்கின் பாரம்பரிய உணவுகளை விற்பனை செய்யலாமென மத்திய அரசு கூறினாலும், அது தொடர்ந்து நீடிக்குமா, மத்திய அரசின் அத்துமீறலை அதிகாரிகள் தட்டிக்கேட்கும் துணிவுள்ளவர்களா என்பதெல்லாம் சந்தேகத்திற்குரியது. இதைவிட, நமது பாரம்பரிய அடையாளத்தை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது.


மாகாண விவசாய அமைச்சரும், அதிகாரிகளும் எப்பொழுது புரிந்து கொள்வார்கள் இதை?


---

விவசாய அமைச்சுடன் தொடர்புடைய இந்த விவகாரத்துடன் இன்னொரு விடயத்தையும் தீபம் சுட்டிக்காட்டுகிறது. திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திற்குள்தான் மாகாண விவசாய பணிப்பாளரின் தங்குமிடமும் உள்ளது. உதவி பண்ணை முகாமையாளர் விடுதியில் மாகாண விவசாய பணிப்பாளர் தங்கியுள்ளார். மாகாண பணிப்பாளர்களிற்கு விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் விதிமுறைகள் எதுவும் இல்லாதபோதும், மாகாண விவசாய பணிப்பாளர் விடுதி வசதியை அனுபவித்து வருகிறார். பிரதி விவசாய பணிப்பாளரின் மேற்பார்வையில் விவசாய பண்ணை இயங்க வேண்டும். மாகாண விவசாய பணிப்பாளரும் அங்கு தங்கியிருப்பது நிர்வாக குறுக்கீடுகளை நிகழ்த்தலாம்.

## ஸ்வீப் ஷொட் ஆகாதப்பா!

ஜனவரி 2016இல் அவுஸ்திரேலியாவில் ஒருநாள் தொடரில் வீழ்ந்த பின்னர், இந்தியா அந்த அணிக்கு எதிராக தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதற்குமுக்கிய காரணம், சுழற்பந்து வீச்சிற்கு எப்படி ஆடவதென்பது இன்னும் அவுஸ்திரேலியர்களிற்கு புரியவில்லை. இறுதியாக நடந்த தொடரில் மட்டுமல்ல, பொதுவாகவே அவுஸ்திரேலியர்கள் ஸ்வீப் ஷொட் ஆட முயன்றுதான் இந்திய ஸ்பின்னர்களிடம் வீழ்கிறார்கள். கடந்த வருடம் இலங்கையில் வெள்ளையடிக்கப்பட்டபோதும், ஹேரத்திடம் ஸ்வீட் ஆட முயன்றுதான் வீழ்ந்தார்கள். ஸ்பின்னர்களிற்கு எதிராக ஆடக்கூடிய ஒரேயொரு ஆக்ரோசமான ஷொட் ஸ்வீப் ஷொட் என்றுதான் அவுஸ்திரேலியர்கள் நினைக்கிறார்கள். உண்மையில் நல்ல துடுப்பாட்டக்காரர்கள் அதிகம் ஸ்வீப் ஆடுவதில்லை. ஏனெனில் எல்.பி வாய்ப்பு இதில் அதிகம். ஜெயசூர்யா, சேவாக் போன்ற கன்னாபின்னா ஆட்டக்காரர்கள் ஆடலாம். அவர்களை பொறுத்தவரை ஒவ்வொரு பந்திலும் எதுவும் நடக்கலாம். கவாஸ்கர் போன்றவர்கள் அதிகம் ஸ்வீப் ஆடுவதில்லை. ஸ்பின்னர்களிற்கு எதிராக நன்றாக ஆடும் சங்கக்கார, மஹேல, சச்சின் போன்றவர்கள் இடையிடையே ஆடுவார்கள். டி20 போட்டிகளின் பின்னர் இந்திய பந்துவீச்சு மேம்பட்டிருப்பதை இந்த தொடர் உணர்த்தியது. கட்டர்கள், வேகத்தை மாற்றி மாற்றி வீசுவது, விரலில் பந்தை விடுவது, யோர்க்கர் என வெரைட்டி காட்டினார்கள் இந்தியர்கள். ஆனால் கேதார் ஜாதவிடம் அவுஸ்திரேலியர்கள் விக்கெட்டை இழப்பதைதான் புரிந்துகொள்ள முடியவில்லை. "லாலிபாப் பௌலர்" என அழைக்கப்படகூடிய அவரிடம் விக்கெட்டை இழக்கும் அணி நல்ல அணியா?







## குழப்படி பையனின் புது அவதாரம்!

Wwe அரங்கில் 2007, 16ஆம் ஆண்டுகாலத்தில் குழப்படிகார பையனாக இருந்தவர் வேட் பரட். The Nexus என்ற குழப்படிக்கார அணியை வைத்துக்கொண்டு இவர் ஆடிய ஆட்டங்கள் ஏராளம். இங்கிலாந்தின் லங்காசயர் பிராந்தியத்தில் பிறந்த இவரது நிஜப்பெயர் ஸ்ருவர்ட் அலெக்ஸ்சாண்டர் பெனற். wwe போட்டிகளிற்காக வேட் பரட் என்ற பெயரை வைத்துக்கொண்டார். 2016இல் wwe போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்று, நடிப்பில் கவனம் செலுத்தி வந்தார். இவரை WCPW என்ற இங்கிலாந்தின் மல்யுத்த அமைப்பு (அமெரிக்காவின் wwe போல இங்கிலாந்தில் உள்ள அமைப்பு. ஆனால் wwe போல பிரபலமில்லாதது) மேலாளராக (General Manager) நியமித்துள்ளது. நிறுவனத்தை விளம்பரப்படுத்தவே இந்த திட்டம். கடந்தவாரம் நிறுவனத்தின் பேஸ்புக் பக்கத்தை திறந்துவைத்தார். முன்னர் ஒருகாலத்தில் ஓகோவென இருந்த அமைப்பு இது. யூடியுப் சனல்களின் வருகையின் பின் இதன் மவுசு குறைந்து நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது. இப்பொழுது புதிய திட்டங்களுடன் களமிறங்கி அமைப்பை புதுப்பொலிவாக்கவுள்ளதாகவும், இதற்காக பெருந்தொகை பணம் ஒதுக்கியுள்ளதாகவும் அறிவித்துள்ளனர். கடந்தவாரம் நடந்த சம்பியன்ஷிப் போட்டியில் ஜோ ஹென்ரி மற்றும் வில்லியம் ஒஸ்பிறே ஆகியோர் மோதினர்.

## ரிச்சட்சனுக்கே அப்படியென்றால் பாண்டியாவிற்கு எப்படி?

அவுஸ்திரேலியாவுடனான முதல் ஒருநாள் போட்டியில் அந்த அணியின் லெக் ஸ்பின்னர் அடம் ஸம்பாவின் பந்தில் மூன்று சிக்கர் தொடர்ச்சியாக அடித்தபோது இந்தியாவின் ஹர்திக் பாண்டியா சொன்னார் எப்பொழுது விரும்பினாலும் ஸம்பாவின் பந்தை நான் சிக்சர் அடிப்பேன் என. உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர் தாறுமாறு போர்மில் இருந்தாலும், எந்தவொரு பந்துவீச்சாளரையும் பார்த்து இப்படி சொல்வதில்லை. அது கிரிக்கெட் நாகரிகமில்லை. திடீர் புகழில் தலைக்கனமான பாண்டியா இப்படி சொன்னார். பாண்டியா இதை சொன்னபோது ஸம்பா அந்த மேடையில் இல்லை. ஸம்பா அதிக ஓட்டங்கள் கொடுத்ததால் 2,3வது போட்டிகளில் அவரை அணியில் சேர்க்கவில்லை. ஸம்பா இதனால் மனம் சோரவில்லை. பயிற்சியில் அதிக நேரம் கழித்தார். கடைசியாக பயிற்சியை முடித்துக் கொண்டு பெவிலியனிற்கு அவர்தான் திரும்பினார். தனது தவறுகளிற்கு மாற்று கண்டுபிடித்திருக்க வேண்டும். அவுஸ்திரேலிய அணியின் ஸ்பின் ஆலோசகர் எஸ்.ஸ்ரீராமுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வந்தார். மூன்றாவது போட்டியில் காயமடைந்த அஸ்டன் அகர் நாடு திரும்பியபோது, பாண்டியாவை மீண்டும் சந்திக்க வேண்டுமென்பது ஸம்பாவிற்கு தெரிந்திருந்தது. அதன்படியே நான்காவது போட்டியில் இணைக்கப்பட்டார். அன்றைய போட்டியில்முதல்5பந்துகளில்2ஓட்டங்களையே கொடுத்தார். 28வது ஓவரில் மிட்விக்கெட்டில் ஒரு சிக்ஸ் அடித்தார் பாண்டியா. அடுத்த பந்தை ஓவ் ஸ்டம்பிற்கு வெளியே வீச, ஓவ் திசையில் அதையும் சிக்கராக்கினார். இதனால் ஸம்பா கொஞ்சம் பதற்றமானார். இதனால் ஸம்பா பந்துவீச்சு முனையிலிருந்து மாற்றப்பட்டார். இந்தியா வெற்றிக்கு நெருக்கமாக வந்தபோது, மீண்டும் ஸம்பா வந்தார். சிறிய ஓய்வு அவரை புத்துணர்ச்சியாக்கியிருக்க வேண்டும். பிளைடட் பந்துகளுடன் வேகப்பந்துகளையும் வீசி ரன்னை கட்டுப்படுத்தினார். 38வது ஓவரில் மிடில் அண்ட் லெக் திசையில் திரும்பக்கூடிய லெக் ஸ்பின் பந்தை வீசினார். ஸ்பினிற்கு எதிர்திசையில் பாண்டியா ஸ்லாக் செய்ய, அது பிடியாக மாறியது. லெந்தை மாற்றி, பந்தின் வேகத்தையும் மாற்றி டொட் போல்களாக வீசி பவுண்டரிகளை அடிக்கவிடாமல் தடுத்தால், ஆனானப்பட்ட விவ் ரிச்சட்சும் ரென்சன் ஆவார். பாண்டியா எம் மாத்திரம்? இப்படித்தான் பாண்டியாவை அடக்கினார் ஸம்பா.





## அரசியல்வாதியாகும் கேன்

க்ளென் ஜேக்கப்ஸ் என்றால் உங்களிற்கு தெரியாது. கேன் என்றால்தான் பலருக்கு தெரியும். அவர் ஒரு நகர மேயர் வேட்பாளராக இருக்கிறார் என்றால் நம்புவீர்களா? ஆம். அமெரிக்காவின் நக்ஸ்வில்லி நகர மேயர் தேர்தலிற்கு கேன் வேட்புமனு தாக்கல் செய்திருக்கிறார். அங்கு அவர் ஒரு காப்பீட்டு நிறுவனத்தையும் நடத்தி வருகிறார். நகர மேயர் தேர்தலில் குதித்த பின்னர் செம பிஸி காரணமாக wwe பக்கம் வருவதை நிறுத்தி விட்டார். 2016 டிசம்பரில் அமெரிக்கா அல்பாவுடன் இணைந்து, த வைட் குடும்பத்தை தோற்கடித்ததுதான் அவரது கடைசி wwe போட்டி. இப்பொழுது தீவிர பிரசாரத்தில் அங்கு ஈடுபட்டுள்ளார். wwe போட்டிகளிற்காக உலகெங்கும் ஓடித்திரிந்ததில், சொந்த மக்களிற்கு எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது, அதனால்தான் இப்பொழுது தேர்தலில் போட்டியிடுகிறேன் என செண்டிமெண்டாக உருகி வழிந்திருக்கிறார். கேன் தேர்தலில் போட்டியிடுவதால் இனி அவரை wwe அரங்கில் காணமுடியாதென்றுதான் தோன்றுகிறது.

## கன்னத்தில் வாங்கிய அலெக்ஸா!

இன்றைய wwe அரங்கின் அழகுப்புயல்களில் ஒருவர் அலெக்ஸா பிலிஸ். பெண்கள் பிரிவு சம்பியனும் அவர்தான். கடந்த வாரம் போட்டி மேடையில் வைத்து மிக்கி ஜேம்ஸை "an old lady" என அழைத்து விட்டார். அவ்வளவு மேக்அப்புடன் வந்த மிக்கிக்கு உச்சந்தலையில் பற்றியிருக்க வேண்டும். அலெக்ஸாவின் கன்னத்தில் விட்டார் இரண்டு டோஸ். wwe அரங்கில் இப்படித்தான் மோதல்கள் ஏற்படுத்தப்படும். அடுத்தடுத்த வாரத்தில் அலெக்ஸா இதற்கு எப்படி பதிலளிக்கப் போகிறார்?

ரமணன் LLB





# பேச்சு மற்றும் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரமும் அதற்கான சட்டஏற்பாடும்

பேச்சு,கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் என்பது அடிப்படை மனித உரிமைகளில் மிகவும் முக்கியமானதொன்று. சுதந்திரமானதும் ஜனநாயகமானதுமான சமூகமொன்று இதனடிப்படையிலேயே கட்டி எழுப்பப்படுகின்றது. குடியியல் அரசியல் உரிமைகள் சம்மந்தமான அனைத்துரிமை நாடுகளின் பிரகடனம் (ICCPR) உறுப்புரை 19 பேச்சுச் சுதந்திரம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "ஆள் எவரும் தலையிடி இன்றி அபிப்பிராயத்தைக் கொண்டிருக்க உரிமை கொண்டிருக்க வேண்டும்". மேலும் இந்த உரிமையானது எல்லை வரையறையின்றி ஒன்றில் வாய்மொழி மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ அல்லது ஓவிய வடிவமாகவோ அல்லது அவரது விருப்பத்திற்கு அமைய வேறே தேனும் முறை மூலமாகவோ எல்லா விதமான தகவல்களையும் எண்ணக் கருத்துக்களையும் கோரவும் பெறவும் பரப்பவுமான சுதந்திரத்தினை உள்ளடக்குதல் வேண்டுமென இது விரிந்து செல்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இவ் பேச்சுச் சுதந்திரம், கருத்து சுதந்திரம் ஆகியன அரசியல் அமைப்பின் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதய இலங்கையின் அரசியல் யாப்பானது அதன் உறுப்புரை 14(1) வாயிலாக ஒவ்வொரு பிரஜையும் வெளியிடுதல் உட்பட பேச்சுச் சுதந்திரத்திற்கும் கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கும் உரித்துடையவராவர் எனக் குறிப்பிட்டுள்ளது. அமரதுங்க எதிர் சிரிமாலும் மற்றவர்களும் என்ற வழக்கில் நீதிபதி பெர்ணான்டோ அவர்கள் கருத்து சுதந்திரம் பற்றிக் குறிப்பிடுகையில் மக்கள் பலவிதமான கலைகள் உணர்வு அனுபவங்கள் மூலமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்த முடியும். உதாரணமாக திரைப்படங்கள், நாடகங்கள், கவிதை, கேலிச்சித்திரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவையும் பேச்சுச் சுதந்திரம் என்ற அரசியலமைப்பு பாதுகாப்பினைப் பெறுகின்றது.

மேலும் தகவல்களை வெளியிடலும் இவ் அரசியல் அமைப்பின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தில் உள்ளடக்கப்படும் என நீதிமன்றம் பொருள்கோடல் செய்தது. விஸ்வலிங்கம் எதிர் லியனகே (1984) என்ற வழக்கில் அவசரகால நிலமையினை காரணமாக்கி குறித்த புதினப்பத்திரிகையை மூடியமை அரசியலமைப்பின் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானதாகும் என நீதிபதி வீரரத்தினம் குறிப்பிட்டிருந்தார்.

> **அவதூறு எனும் மட்டுப்பாட்டினை நோக்குமிடத்து ஒருவர் தனது பேச்சுச் சுதந்திரத்தினை முன்னிறுத்தி இன்னொருவரின் கௌரவத்தினைப் பாதிக்கும் வகையில் அவதூறு செய்ய முடியாது என்ற மட்டுப்பாட்டினை அரசியலமைப்பு வழங்குகின்றது.**

இவ்வாறான அடிப்படைகளில் உற்று நோக்குமிடத்து பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் ஆகியவற்றினைப் பயன்படுத்தி எந்த விதமான கருத்துக்களையும் மக்கள் சமூகத்தில் வெளிப்படுத்த முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. உலகளாவிய ரீதியில் இவ் பேச்சுச்சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரத்திற்கு அங்கீகாரம் வழங்குகின்ற குடியியல் அரசியல் உரிமைகள் சம்மந்தமான அனைத்துரிமை நாடுகளின் பிரகடனத்தின் (ICCPR) உறுப்புரை 19(3) இவ் பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரத்திற்கு சில அவசியமான சந்தர்ப்பங்களில் நாடுகள் சில மட்டுப்பாடுகளை விதிக்க முடியும் எனவும் ஆனால் அவை சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது.

அந்தவகையில் இலங்கையில் அரசியல் அமைப்பின் உறுப்புரை 15(2) பின்வரும் மட்டுப்பாடுகளை விதிக்கின்றது. உறுப்புரை 14ல் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும் இனச் சமூகவாழ்வு, மதச் சமூக வாழ்வு என்பனவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது குற்றமொன்றைப் புரியத் தூண்டுதல் என்பன தொடர்பாக சட்டத்தினால் மட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்.

இலங்கை அரசியல் அமைப்புச் சட்டம் உறுப்புரை 15(2) ஆனது குறிப்பிட்ட இன மதம் சம்மந்தமான சுதந்திரப் பேச்சுக்கு கட்டுப்பாடு விதித்தது. இருப்பினும் இவ் விடயம் தொடர்பில் சடைமுறையில் சட்ட முற்தீர்ப்புக்கள் காணப்படமையினால் அமெரிக்காவில் இடம்பெற்ற வழக்குகளான Sumith V Collin 439 U.S.916 (1969) மற்றும் Brandenburg V Ohio 395 U.S.444(1969) போன்றவற்றின் தீர்ப்புக்களை நீதிமன்றங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.


அவதூறு எனும் மட்டுப்பாட்டினை நோக்குமிடத்து ஒருவர் தனது பேச்சுச் சுதந்திரத்தினை முன்னிறுத்தி இன்னொருவரின் கௌரவத்தினைப் பாதிக்கும் வகையில் அவதூறு செய்ய முடியாது என்ற மட்டுப்பாட்டினை அரசியலமைப்பு வழங்குகின்றது. மலால் கொட எதிர் சட்டமா அதிபர் வழக்கில் குறிப்பிட்ட எழுத்தானது ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் பொதுநபர்கள் சம்மந்தமான அவதூறினை ஏற்படுத்தியிருந்தமைக்காக அவருக்கு எதிராக அரசியலமைப்பின் உறுப்புரை 15(2) அடிப்படையாகக் கொண்டு குடியியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் என்பவற்றை மட்டுப்படுத்தும் ஒருகட்டுப்பாடாக நீதிமன்ற அவமதிப்பினை அரசியல் அமைப்பின் உறுப்புரை 15 குறிப்பிடுகின்றது. இவ் நீதிமன்ற அவமதிப்பு என்பதை அரசியலமைப்பின் உறுப்புரை 105 வரைவிலக்கணம் செய்கின்றது. அதன் பிரகாரம் நீதிமன்றின் அல்லது நீதிபதிகளின் அல்லது சட்டமுறையின் தன்மையை கேலிசெய்யும் அல்லது பரிகாசம் செய்யும் விதத்தில் கூறுதல் மற்றும் நீதி நிர்வாகத்தினைத் தடை செய்வதாகக் கூறுதல் போன்றன நீதிமன்ற அவமதிப்பாகும். இவ் மட்டுப்பாடு கருத்துச் சுதந்திரத்தினை கேள்விக்குட்படுத்தினாலும் நீதித்துறையின் மீது மக்கள் கொண்டுள்ள பொதுநம்பிக்கையை இது அதிகரிக்கச் செய்யும் என LordAtkinAmbart V Attorney General என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசியல் அமைப்பின் உறுப்புரை 15(2)ற்கு அமைய பாராளுமன்றத்தினதோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களுடைய சிறப்புரிமையைப் பாதிக்கும் வகையில் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது. ஏதாவது ஒருநபர் இந்த சிறப்புரிமையை மீறுவாராயின் அரசியல் அமைப்பின் உறுப்புரை 4(c) ற்கு அமைய பாராளுமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படுவார். Attorney General VsNadesan 1978 என்ற வழக்கில் தேசிய அரசபேரவை சம்பந்தமாக புகைப்படங்கள் செய்திகள் வெளியிடப்பட்டமைக்காக பாராளுமன்ற சிறப்புரிமையினை மீறியமைக்காக பதிப்பாசிரியர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அடுத்து பேச்சு, கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் அறநெறி மற்றும் ஒழுக்கக்கோவை என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக மட்டுப்படுத்தப்பட முடியுமென அரசியல் அமைப்பின் உறுப்புரை 15(7) குறிப்பிடுகின்றது. இதன் கீழ் ஆபாச வெளியீடுகள் மற்றும் ஒழுக்கக் கேடான பேச்சுக்கள் என்பன மட்டுப்படுத்தப்படுகின்றன. இது தொடர்பாக இலங்கையில் மட்டுமல்ல உலகநாடுகளிலும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு நாடுகளின் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் சில கட்டுப்பாடுகளுடன் இலங்கையில் இது தொடர்பில் பிரயோகிக்கப்படுகின்றது.

ஆகவே பேச்சு,கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் என்பது இலங்கையில் அரசியல் யாப்பின் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டிருப்பதோடு அவை எல்லை கடந்து மற்றையவர்களின் உரிமைகளைப் பாதிக்காது காணப்படுவதற்காக சில மட்டுப்பாடுகளும் குறிப்பிடப்பட்டு நடைமுறையில் பிரயோகிக்கப்படுகின்றன.






# அரச பல்கலைகழகங்களும் வழங்காத வாய்ப்பை வழங்கும் BCAS CAMPUS

உயர்தரப் பரீட்சையின் பின் மாணவர்களிற்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதில் Bcas campus இன் பங்கு முக்கியமானது. நாடு முழுவதும் பல்வேறு விதமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் இந்த நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளை கடந்த 5 வருடங்களாக இயங்கி வருகிறது. யாழ் கிளையின் செயற்பாடுகள் குறித்து அறிய, அந்த நிறுவனத்தின் முகாமையாளர் ரசாத் அஹமட் அவர்களை சந்தித்தோம்.

**கேள்வி: Bcas campus யாழ்ப்பாணத்தில் எவ்வாறான சேவைகளை முன்னெடுத்து வருகிறது?**

**ரசாத் அஹமட்:** 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் கிளைகளைக் கொண்டுள்ளது. மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு கிளைகளுடன் சர்வதேச ரீதியாக கட்டாரிலும் பிரமாண்டமாக தொழிற்பட்டு வருவதே Bcas campus. யாழ்ப்பாணத்தில் Bcas campus 2012 ஆம் ஆண்டு பணிகளை ஆரம்பித்து 2013 ஆம் ஆண்டு கிளையின் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது.

**கேள்வி: ஏனைய கல்வி நிறுவனங்களை விட Bcas campus இன் சிறப்பம்சம் என்ன?**

**ரசாத் அஹமட்:** மாணவர்களின் தொழில்சார் கல்வியை மட்டும் மையப்படுத்தாமல் உயர் கல்வித் துறையில் எதிர்காலத்தில் உருவாகும் சவால்களை எதிர்கொள்ளும் திறமையுள்ளவர்களாக மாணவர்களை உருவாக்குகிறோம பொறியியல் துறையில் சில உயர்கல்வி நிறுனங்கள் இதே கற்கை நெறியை இதே பெயருடன் அல்லது லேபிளுடன் பயிற்றுவிக்கின்றன. ஆனால் எமது நிறுவனம் இலங்கையின் அரச பலகலைக்கழக மாணவர்கள் பயிற்சி பெறும் அரச நிறுவனங்களிடம் பயிற்சி பெறும் வாய்ப்பை எமது மாணவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த வாய்ப்பினை எமது நிறுவனம் மாத்திரமே வழங்குகிறது. எமது பொறியியல்துறை மாணவர்கள் அரச தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் இத்துறை சார்ந்த அரச நிறுவனங்களிற்கு சென்று 27 வகையான பயிற்சி நெறிகளை பெறுகிறார்கள். எமது பயோ மெடிக்கல் மாணவர்கள் ஜிடெக் நிறுவனத்தில் பயிற்சி பெறுகிறார்கள்.இந்த வாய்ப்பை அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் கூட பெற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனால் நாம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

**கேள்வி: குறகிய காலத்தில் எப்படி யாழ்ப்பாணத்தின் முன்னணி நிறுவனமாக உருவெடுத்தீர்கள்?**

**ரசாத் அஹமட்:** எமது நிறுவனத்தின் ஒவ்வொரு கல்வித் திட்டமும் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய பயிற்சி நெறியாக இருக்கிறது. உதாரணமாக எமது llb கற்கைநெறி, யாழ்ப்பாணத்தில் எந்தவொரு நிறுவனத்தில் இல்லாதவகையான சிறப்புக் கல்வித்திட்டத்தை கொண்டது. அதுபோல பயோமெடிக்கல் சயன்ஸ், சிவில் இன்ஜினியறிங் போன்றவையும் எமது நிறுவனத்திற்கேயுரிய சிறப்புத் திட்டங்களை கொண்டு முன்னெடுக்கப்படுகிறது. சில உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளினால் வணிக நோக்கம் கொண்ட செயற்திட்டங்களாகவே மக்கள் பார்க்கிறார்கள். ஆனால் எமது நிறுவனத்தின் தனித்துவத்தால் அந்த சவாலை கடக்கிறோம். ஏனைய நிறுவனங்களை போல பணத்தை வாங்கிக் கொண்டு சான்றிதழ் வழங்கமாட்டோம். நாங்கள் மாணவர்களிடம் பணம் பெற்றாலும், அதையும் தாண்டி ஒரு விழுமியம்சார் கடப்பாடு எமக்கு இருக்கிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களிலுள்ள பெற்றோர்களிற்கு எமது நிறுவனத்தில் மதிப்புண்டு. வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு கல்விகற்று நல்ல தொழில்வாய்ப்பை பெற்று, குடும்ப நிலைமையை மாற்றிய ஏராளம் சம்பவங்கள் உள்ளன. உயர்தரம் பெயிலான மாணவர்கள் சிவில் இன்ஜினியறிங் படித்து முடித்து கட்டார் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் மாதாந்தம் 5 லட்சத்திற்கும் அதிகமாக உழைக்கிறார்கள். எமது நிறுவனத்தில் படித்து முடித்தவர்களின் வாழ்க்கைதரத்தை மாற்றியுள்ளோம் என்று சொல்லிக் கொள்வதில் ஆத்ம திருப்தியடைகிறோம். வணிகம் சார்ந்த பொருளாக பார்க்கின்ற ஒரு சமூகத்திற்குள் எங்களது பெறுமதியான கற்கைநெறிகளுக்கூடாக இந்த மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்டு இருக்கிறோம்.

**கேள்வி: உயர்கல்வி நிறுவனங்கள் ஆட்சேர்க்க சலுகைகள், கவர்ச்சிகள் அறிவித்தபடியிருக்கிறார்கள். வீதிவீதியாக விளம்பரங்களில் ஈடுபடுகிறார்கள். இந்த சவாலை எப்படி சமாளிக்கிறீர்கள்?**

**முகாமையாளர்:** உயர் கல்வி நிறுவனங்கள் மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றன. லப்ரொப், ஐபோன் போன்ற கவர்ச்சிகரமான பொருட்களை வழங்கி மாணவர்களை உள்ளீர்ப்பதைதான் நிறுவனங்கள் வழக்கமாக வைத்துள்ளன. ஆனால் பத்திரிகை விளம்பரங்கள் மட்டுமே நாம் மேற்கொள்கிறோம். மாணவர்களின் நலனோம்பல் திட்டங்களிற்கான அனுசரணை நடவடிக்கைகள் மூலமாக எமது நிறுவனத்தை எல்லா மாணவர்களும், பெற்றோரும் அறிந்துவைத்திருக்கிறார்கள். எமது விளம்பர மேம்பாட்டு நடவடிக்கை யாவுமே சமூகத்திற்கு பயன்தருவிதமாகவே உள்ளன. யாழ் நகரத்தில் உள்ள பாடசாலைகள் பலவற்றில் மாணவர் தலைவர் சின்னம்சூட்டுவதற்கு நாம் அனுசரணை செய்து வருகிறோம். மாணவர், ஆசிரியர் தலைமைத்துவ பயிற்சிகள் என பல திட்டங்களை செயற்படுத்துகிறோம். இவையெல்லாவற்றையும் பகிரங்கமாக சொல்வதில்லை. யாழ்ப்பாணத்தில் எமது திட்டங்கள் செயற்படுத்தப்படாத பாடசாலைகளே கிடையாது. எமது நிறுவனத்தின் உயர்ந்த செயற்பாடு, நோக்கத்தை மாணவர்கள் பாடசாலைக் காலத்திலேயே அறிந்து எம்மிடம் வருகிறார்கள்.

**கேள்வி: மாணவர்களிற்கு உள்ள இயல்பான கற்றல் தடைகளை கடக்க எப்படியான உதவிகளை செய்கிறீர்கள்?**

**முகாமையாளர்:** பாடசாலைக் காலத்தில் தாய்மொழியில் கற்றவர்கள், உயர் கல்வியைத் ஆங்கிலத்தில் தொடர வேண்டியிருப்பது எமக்கும் ஒரு சவால்தான். இதை சமாளிக்க யாழ்ப்பாணக்கிளையில் கல்விகற்க வரும் மாணவர்களிற்கு 39000 பெறுமதியான ஆங்கில சான்றிதழ் கற்கை நெறியை இலவசமாக வழங்குகின்றோம். hnd பாடநெறியை பயிலும் மாணவர்களிற்கு இந்த ஆங்கில கற்கைநெறி இலவசம். ஒரு மாணவரை உள்ளீர்த்த பின்பு நாங்கள் நேரடியாக கற்கைநெறியை தொடங்குவது கிடையாது. மாணவர்கள் உள்வத்தவுடன் மாணவர்களிற்கு ஓரியண்டேசன் நிகழ்வு ஒரு மாதம் இடம்பெறும். மாணவர்களிடம் கற்பதற்கான மனோதிடத்தை வளர்ப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்போம், அதேவேளை குழு வேலைத்திட்ட பயிற்சிகள், தலைமைத்துவ பயிற்சி, பிரச்சினைகளை தீர்த்தல், பிரசண்டேசன் செய்யும் ஆளுமை போன்ற பயிற்சிகளை செய்து மாணவர்களை தயார்ப்படுத்துவோம். அதன் பின்பு மாணவர்களினை கற்பதற்காக வழிப்படுத்துவோம்.; வகுப்புக்களை ஆரம்பிப்போம்.

**கேள்வி: எந்த பல்கலைக்கழகங்களுடைய பட்டங்களை வழங்குவதற்கான பாடநெறிகளை வழங்குகிறீர்கள்?**


**முகாமையாளர்:** university of Wolverhampton / London south bank university போன்ற பல்கலைக்கழகங்களின் கற்கைநெறியை வழங்குகின்றன. எங்களுடைய பாடத்திட்டங்களை வழங்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் அவை இயங்கும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் 120 வருடத்திற்கும் அதிகமான காலம் இயங்கி வருகின்றன. ஆனால் இங்குள்ள சில உயர் கல்வி நிறுவனங்களின் பட்டங்கள் வழங்கும் பல்கலைக்கழகங்கள் குறித்த நாடுகளில் ஒரு சிறிய அறைகளிற்குள் இயங்குபவை. எங்களிடம் படிக்கும் மாணவர்கள் மூன்றாம் வருட கற்கையை இலங்கையிலும் தொடர முடியும், குறித்த வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும் தொடர முடியும். நாங்கள் பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்கள் சர்வேத சரீதியாக மிகவும் பெறுமதி வாய்ந்தவை. அதேநேரம் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. university of Wolverhampton வழங்கும் பட்டம் பல்வேறு அனுகூலங்களை தரக்கூடியது. இந்தப்பட்டத்தை பெறக்கூடிய மாணவர் சர்வதேசதுறை சார்ந்த அமைப்புக்களின் ஒரு அங்கத்தவராக மாறுகின்றார். அதன் மூலம் உலக நாடுகளில் அவர் தொழில் செய்யும் உரித்தை பெற முடியும்.

**கேள்வி: யாழ்ப்பாணத்தில் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி உங்களுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முடியுமா..?**

**முகாமையாளர்:** யாழ்ப்பாணத்தில் இயங்கும் பல உயர்கல்வி நிறுவனங்கள்; மாணவர்களை உள்ளீர்க்க ஐபோன், லப்ரொப் போன்ற சலுகைகளை கொடுத்து ஆசை காட்டி உள்ளீர்த்து மாணவர்களிற்கு கற்பிக்க வேண்டிய மணித்தியாலங்களை ஏப்பமிட்டு விடுகின்றன. இது கல்விக்கான அறமில்லை. பணத்தை வாங்கும் நிறுவனங்கள் மாணவர்களிற்கு அறிவை கொடுப்பதற்கு பின்னிற்கக்கூடாது. மாணவர்களின் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மாணவர்களிற்கு கல்வியை விட ஒழுக்கம் முக்கியம் என்பதை நடைமுறையில் காட்ட வேண்டும். அதைவிட மாணவர்களிற்கு பட்டத்தை மட்டும் வழங்கிவிட்டு அறிவில்லாத பட்டதாரிகளாக சில நிறுவனங்கள் வெளியனுப்புகின்றன. இவற்றை நிறுத்த வேண்டும். சிறந்த கல்வியை வழங்குவது எம் போன்ற ஒவ்வொரு நிறுவனத்தினதும் தார்மீகக் கடமை.

யாழ் புகையிரத
நிலையத்துக்கு அருகாமையில்
சகல வசதிகளுடனும்
அதி உயர்தர வலம்புரி ஹோட்டல்.

Green Grass





The Valampuri 148/10 Railway Station Rd, Jaffna 40000 Phone: 021 2 220111




Shivahami Wedding Hall

சிவகாமி மஹால்




எமது சிவகாமி மஹால் மண்டபத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். சிறப்பான சேவையை பெற்றுக்கொள்ள எம்மை நாடவும்.

மிகச்சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், உணவு வகைகள், சொகுசு ஒழுங்கு படுத்தல்கள், நட்பறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ் மண்ணில் ஆரம்பித்திருக்கின்றோம். உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும் சிறப்பாக அமைத்துக் கொள்ளுங்கள்.

எமது வசதிகள்
நவீன வசதியுடன் கூடிய குளிருட்டப்பட்ட மற்றும் குளிருட்டப்படாத மண்டப வசதிகள், தேவைக்கேற்ப மண்டப, மணவறை அலங்காரங்கள்.

உணவு விபரங்கள்
உங்களின் தேவைக்கேற்ப உணவு விபரங்களை தெரிவு செய்ய முடியும். குளிர்பானங்கள், லட்டு, ஐஸ்கிறீம், பீடா போன்றவற்றையும் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளலாம்.

எமது மண்டபம் ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ளது.



Adiyapatham Road, Thirunelvely.
021 205 2288 / 0779326147
E-Mail: Sivakaamymahal@gmail.com
Web: WWW.Shivahamimahal.com




இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 08.10.2017 அன்று வெளியிடப்பட்டது.